பொது சன நூலகம்
15 MAY 1999
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2030 வைகாசி 01 சனிக்கிழமை (15~05~1999) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 51

# இடைக்கால நிர்வாகத்தை கோருகின்றார் பெருமாள்!

## ஜனாதிபதியுடன் வியாழனன்று ஒன்றரை மணி நேரம் பேச்சு

கொழும்பு,மே15

**வடக்கு-கிழக்கு மாகாணசபைக்குப் புதிதாகத் தேர்தல் நடத்தப்படும் வரை-அங்கு தற்போது நடைபெற்று வரும் அரச நிர்வாகத்துக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கும் வகையில் - இடைக்கால ஏற்பாடு ஒன்றைச் செய்யுமாறு முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.**

**நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் அவர் பேச்சு நடத்தினார்.**

ஜனாதிபதியுடன் பெருமாள் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பான விடயங்களை ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை ஒன்றின் மூலம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருக்கிறது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதி முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் முன் வைக்கும்படி வரதராஜப்பெருமாள் ஜனாதிபதியை கேட்டுக்கொண்டார். ஜனாதிபதி மிக விரைவில் அத்திட்டம் நாடாளுமன்றத்தில் முன் பிரேரிக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

(7ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வர்த்தக பிரமுகர்கள் வன்னிக்கு நல்லெண்ண விஜயம்

கொழும்பு,மே15

கொழும்பில் உள்ள பிரபல வர்த்தகப் பிரமுகர்கள் அங்கம் வகிக்கும் சமாதானக்குழு ஒன்று அடுத்த வாரம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்குச் செல்லவிருக்கின்றது.

விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்களுடன் இக்குழு பேச்சுக்களை நடத்தவிருக்கின்றது.

யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை குறித்து புலிகளின் நிலைப்பாட்டை அறிவதில் இக்குழு கவனம் செலுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.க., பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, தமிழ்கட்சிகள் ஆகியவற்றின் தல்லைவர்களுடன் நடத்ததிய

(8ஆம் பக்கம் பார்க்க)

### உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

## ஜெயலலிதா மீதான வழக்குகளை சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கலாம்!



சென்னை,மே15

அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க தமிழக அரசு மூன்று சிறப்பு நீதிமன்றங்களை அமைத்திருப்பது செல்லுபடியானதே என்று இந்திய உச்ச நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. சட்ட விவகாரத்தில் ஜெயலலிதாவிற்கு இந்தத் தீர்ப்பு பெரும் பின்னடைவையும், தோல்வியையும் ஏற்படுத்தியிருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகளை சிறப்பு நீதிமன்றங்களில் இருந்து சாதாரண நீதிமன்றங்களுக்கு மாற்றும்படி மத்திய அரசு விடுத்த உத்தரவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.

ஜெயலலிதா மற்றும் அவரது அரசில் அமைச்சர்களாக இருந்தோர், அப்போதைய மூத்த அதிகாரிகள் சிலர் ஆகியோருக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க 1997

(8ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் மீது திருநெல்வேலியில் சூடு!

யாழ்ப்பாணம்,மே15

வலி.மேற்குப் பிரதேசசபையின் புளொட் உறுப்பினரான எஸ்.பகீரதன் (32வயது) என்பவர் திருநெல்வேலிப் பகுதியில் வைத்து இனம்தெரியாதோரால் சுடப்பட்டார்.

நேற்று மாலை 6.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நகரில் உள்ள புளொட் அமைப்பின் அலுவலகத்தில் தங்கியிருந்த இவர் திருநெல்வேலியில் உள்ள தமது வீட்டுக்குச் சென்று திரும்புகையில் - திருநெல்வேலி தாளையடி வீதியில் வைத்து - இனந்தெரியாதவர்களால அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கையிலும், நெஞ்சிலும் காயம் அடைந்த அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(ஐ-3-7)

## ஸ்ரேடியப் புதைகுழி தோண்டும் பணி மேலும் ஒருமாதகாலம் ஒத்திவைப்பு

துரையப்பா விளையாட்டரங்கில் 25 மனித எலும்புக்கூடுகள், எச்சங்கள் மீட்கப்பட்ட பெரும் மனித புதைகுழியைத் தொடர்ந்து தோண்டும் பணி கொழும்பிலிருந்து நிபுணர்கள் வராததால் மேலும் ஒருமாதத்துக்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளது.

தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள் வந்துகொண்டிருந்ததால் கொழும்பிலிருந்து சட்டமருத்துவ, இரசாயனப் பகுப்பாய்வு மற்றும் மண்ணியல் நிபுணர்களை அழைத்து அவர்கள் முன்னிலையில் புதைகுழியைத் தோண்டுவதற்கு கடந்த ஏப்ரல் 17ஆம் திகதியன்று யாழ் நீதிமன்றம் முடிவு செய்தது. அதன்படி நேற்று தோண்டுதல் பணியை மீண்டும் ஆரம்பிப்பது என்றும் நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

ஆனால் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் எவரும் இன்று நீதிமன்றத்துக்குச் சமூகம் தரவில்லை. வேலைப்பழு மற்றும் வெளிநாட்டு விஜயம் போன்ற காரணங்களின் நிமிர்த்தம் நேற்றைய தினம் சமூகம் தரமுடியாதிருப்பதாக அவர்கள் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தனர்.

அதையடுத்து இந்தப் புதைகுழி தோண்டுவதை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் ஒத்திவைத்தார்.

செம்மணிப் பகுதியில் இருப்பதாக நம்பப்படும் பெரும் மனிதப்புதைகுழியை தோண்டும் பணியில் ஈடுபடுவதற்காக - நீதிமன்ற உத்தரவின்பேரில் - இதே நிபுணர்கள் ஜூன் 16ஆம் திகதி யாழ். வருகைதர உள்ளனர்.

அதற்கு முதல்நாள் துரையப்பா ஸ்ரேடியப் புதைகுழியைத் தோண்டும் பணியை மீண்டும் ஆரம்பிக்க நீதிவான் உத்தரவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-உ-3-5-7-)

## 'ராகிங்' பேர்வழிகள் துரத்தியடிப்பு!

யாழ்ப்பாணம்,மே15

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர்களுக்கான 'கெல்ட்' ஆங்கில வகுப்பு நேற்றுப் பிற்பகல் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அங்கு 'ராகிங்' நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இருவர் கல்லூரி அதிபர் க.இராசதுரையினால் கடுமையாகப் பேசித் துரத்தப்பட்டனர்.

அதிபரும் ஏனையோரும் கல்லூரியின் முற்புறத்தில் உள்ள அலுவலகத்தில் இருந்த சமயம் இந்த இருவரும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் கல்லூரிப் பின்கதவு வழியாக நுழைந்து 'கெல்ட்' வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்துக்குச் சென்றதாகவும் -

கல்லூரியின் பின் வளவில் மோட்டார் சைக்கிள் நிற்பதைக் கண்ட அதிபர்உஷாரடைந்து உரிய நடவடிக்கை எடுத்து அவர்களைக் கலைத்ததாகவும் - மேலும் கூறப்பட்டது.

(உ)

## சடலம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மே15

நேற்று முன்தின் இரவு உரும்பிராயில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட வலி-கிழக்குப் பிரதேசசபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் முருகர் பூபாலசிங்கத்தின் சடலம் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. யாழ்.ஆஸ்பத்திரியில் பதில் நீதிவான் க.கேசவன் முன்னிலையில் இடம்பெற்ற மரண விசாரணையை அடுத்து சடலம் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-3-15-139)

### ஜே.வி.பி. சந்தேக நபரா?

## 'லக்பிம' செய்தியாளர் சி.ஐ.டியினரால் கைது!

கொழும்பு,மே15

கடந்த மார்ச் மாதம் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட 'லக்பிம' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் ஸ்ரீலால் பிரியந்த நேற்று சி.ஐ.டி.பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இவர் 1988-89ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஜே.வி.பி.அமைப்பின் உறுப்பினராக இருந்துள்ளார் என்றும்-

இவர் ஐந்து கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படுகிறார் என்றும் -

பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி.பி. அமைப்பில் இருந்த சமயம் 'சுக்கா' என்று அழைக்கப்பட்ட இவரது பெயர் குலப்பு தந்திரிகே பிரியந்த ஜெயலால் என்பதாகும் என்றும்-

பின்னர் இவர் இறந்து போனதாகக் கருதப்பட்டதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இவர் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்ட சமயம் பத்திரிகைகளில் வெளியாகிய இவரது படத்தை அவதானித்த வெலிப்பன கிராமவாசிகள் இவர் முன்னாள் ஜே.வி.பி. உறுப்பினர் என்பதை அடையாளம் காட்டியதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஐ-21)

## 6 முஸ்லிம் மீனவரை புலிகள் விடுவித்தனர்

வவுனியா,மே15

விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் இருந்த ஆறு முஸ்லிம் மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்த மீனவர்கள் கடந்த மார்ச் மாதம் மீன் பிடிக்கச் சென்ற சமயம் கடுங்காற்றுக் காரணமாக முல்லைத்தீவில கரை ஒதுங்கியிருந்தனர்.

கடற்புலிகளினால் மீட்கப்பட்ட இவர்கள் பின்னர் புலிகளால் பராமரிக்கப்பட்டு வந்தனர்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் மல்லாவியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் இந்த மீனவர்களை விடுதலைப் புலிகளின் அரசியல் நடுவப் பணியகப் பொறுப்பாளர் விதுரன் ஒப்படைத்தார்.

(ஐ-3)

## வெலிகந்த மோதலில் 4 படையினர் பலி!

மட்டக்களப்பு,மே15

பொலன்னறுவ மாவட்டம் வெலிகந்த பிரதேசத்தில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் நான்கு இராணுவத்தினர் பலியாகினர்.

இரவு நேரக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பின்னர் சிங்கபுர இராணுவ முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த இராணுத்தின் மீதே விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலில் மேலும் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

இவர்களது ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-21)

## வலி. கிழக்குப் பாடசாலைகளில் மாணவர் வரவு நேற்றும் வீழ்ச்சி

அச்சுவேலி,மே15

நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த ஐந்து உயர்தர வகுப்பு மாணவர்கள் மர்மமான முறையில் காணாமற்போன சம்பவத்தை அடுத்து வலிகாமம் கிழக்குப பகுதி பாடசாலைகளில் மாணவர் வரவு நேற்றும் குறைந்து காணப்பட்டது.

அச்சுவேலி மகாவித்தியாலயம், அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆகியன உட்பட சிரேஷ்ட வகுப்புக்களைக கொண்ட பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, மே 15

இறைமகன் இயேசு கிறிஸ்துவின் விண்ணேற்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை சகல கத்தோலிக்க ஆலயங்களிலும் நடைபெறவுள்ளது அன்று புனித கார்மேல் அன்னை ஆலயத்திலும் திருப்பலி நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 15

அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11:00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

தினசரி மாலை 6 மணி முதல் 7 மணிவரை 'மகாபாரதம்' என்னும் பொருள் பற்றி பிரம்மஸ்ரீ சிவபதி பாலசர்வேஸ்வரக்குருக்களின் தெய்வீகப் பேருரை இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க. மகாகணபதீஸ்வரக் குருக்கள் மகோற்சவக் கிரியைகளை நடத்தி வைப்பார்.

புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் இந்த வருட மகோற்சவத்தின் சிறப்பம்சமாக இடம்பெறும். (உ-7)

# கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 15

ஈ. எஸ். பேரம்பலம் அன் கோ நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ்விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை காலை 8-30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிமைதானத்தில்ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் அ. சிறிக்குமாரன் இந்தச்சுற்றுப்போட்டியைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

நாளைய ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:

★ காலை 8-30 மணி: பற்றீஷியன் வி. க. அணி எதிர் ஜொலி ஸ்ரார்ஸ் வி. க.

★ பிற்பகல் 1-30 மணி: யங் ஸ்ராஸ்ர் வி. க. அணி எதிர் யாழ். பல்கலைக் கழக அணி.

சுற்றுப் போட்டி ஆட்டங்கள் தொடர்ந்து 21, 22, 23, 30 ஆம் திகதிகளில் நடைபெறும். [உ]

# கவின்கலைப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மே 15

திருமறைக் கலாமன்ற கவின்கலைகள் பயிலகத்தில் நடனம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், வீணை, சித்திரம், ஓர்கன் ஆகிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

இந்தப் பாட நெறிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி இன்றாகும். (க)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 15

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3-00 மணிமுதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பாடும்மீன் எதிர் பொற்பதி.

★ றோயல் எதிர் சென் நீக்கிலஸ் (உ-3)

# பேச்சுப் போட்டி

தென்மராட்சி, மே 15

சரசாலை, நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மகோற்சவத்தையொட்டி சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேச்சுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க. சிவசங்கரநாதன் தலைமையில் நடைபெறும்.

போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள் ஆலய தேர் உற்சவ தினத்தன்று வழங்கப்படும். (ஐ-117)

# இந்து இளைஞர் கொடிவாரம்

இந்து இளைஞர் பேரவையின் கொடிவாரம் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது.

இந்த வாரத்தில் கொடி விற்பனை இடம்பெறவுள்ளது. (ஐ-3)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா பொன்னம்மா

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா பொன்னம்மா 13–05–99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, பொற்கொடி, இராஜேஸ்வரி, சபாலிங்கம், இரத்தினசிங்கம், துரைராஜசிங்கம், மகாலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சண்முகநாதன், சற்குணம், சண்முகலிங்கம், இந்திராதேவி, கனகேஸ்வரி, ஜெயந்தி, பிரகலாவதி, சூரியகலா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை, கனகம்மா, செல்லம்மா, காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. பொற்கொடி
[ மகள் ]

" கோகுலம் "
அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

[ 65746 ]

## நாகமணி நடராஜா

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமான நாகமணி நடராஜா (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) 13 - 05 - 1999 வியாழக்கிழமையன்று காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருஷ்ணலிங்கம், கிருஷ்ணகுமாரி, கிருஷ்ணமூர்த்தி, நாதன், சூட்டி, பாபுஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரட்ணராஜாவின் (சுங்கத் திணைக்களம்) மாமனாரும் கற்கண்டர், சிவக்கொழுந்தர், தருமலிங்கம், பரமலிங்கம், குலசிங்கம், தவமணிதேவி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17–05–99 திங்கட்கிழமை கொழும்பிலுள்ள சகோதரர் க. இரட்ணராஜா, இல. B 27/4, காக்கைதீவு, மட்டக்குளி, கொழும்பு - 15 இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. கந்தசாமி
(சகலன்)

44/2, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(65766)

## செல்லத்துரை சபாரத்தினம்

[ஓய்வுபெற்ற தபாலக ஊழியர்]

சாவகச்சேரி கோயில் குடியிருப்பைச் சேர்ந்த செல்லத்துரை சபாரத்தினம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் (மூத்தக்கா) அன்புக் கணவரும் கெங்காதேவியின் (ஆசிரியர், பாலர் பாடசாலை நகரசபை) அருமைத் தந்தையும் கனகசிங்கத்தின் (கிளை முகாமையாளர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்) அன்பு மாமனாரும் அர்சனா, தர்சன் (மாணவன், இந்துக் கல்லூரி, சாவகச்சேரி), ஜனனி (மாணவி, இ. க. சாவகச்சேரி) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-5-99) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. கனகசிங்கம்
(மருமகன்)

4 ஆம் ஒழுங்கை,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(65772)


## நாகம்ஸ்
சுன்னாகம்.

பிரபு - குஷ்பு
ராதாரவி - கவுண்டமணி
நடித்த
**சின்னத்தம்பி**
( இனிய பாடல்கள் நிறைந்தது )
காட்சிகள்: 11-00, 2-00
(புதியநேரம்) (65730)

## லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
இன்று முதல்
சரத்குமார் - விஜயசாந்தி
நடிக்கும்
**ராஜஸ்தான்**
காட்சிகள்; 10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(65664)

## ராஜா
யாழ்ப்பாணம்.
(கடைசி வாரமாக)
கார்த்திக் - ரம்பா
மற்றும் பலர் நடித்த
**உள்ளத்தை அள்ளித்தா**
19 ஆம் திகதிமுதல்
**செந்தூரபாண்டி**
10-30, 2-30, 5.00

## 'B' திரையில்
அஜித் - சிம்ரான்
(இருவேடம்)
நடித்த
**வாலி**
நேரம்: 10-30, 2-30
(சி/7547)

## ஸ்ரீ செல்வா
சினிமா
ஸ்ரான்லி றோட்
தினசரி: 10-30, 2-30
( பழைய நேரப்படி )
சரத்குமார் - விஜயசாந்தி
நடிக்கும்
ராஜஸ்தான்
(65768)


# வெள்ளி விழா

## வாழ்த்து

**15 - 05 - 1999**

கூட்டுறவுப் பணியில் வெள்ளி விழாக்காணும்

**உயர்திரு. பொன்னையா ஸ்ரீ ராமச்சந்திரன்**

(பொதுமுகாமையாளர், வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், மருதங்கேணி.)

அவர்கள்

கடந்த 15 - 05 - 1974 இல் கூட்டுறவுப் பணியில் இணைந்து இன்று வெள்ளி விழாக் காணும் இவரது பணிகள் மென்மேலும் சிறப்பாக நடைபெற மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

பணியாளர்கள்
வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்

உபய கதிர்காமம், புலோலி. (65770) மருதங்கேணி, தாளையடி.

# ஒன்று கூடல் வைபவம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
B. A. (வெளிவாரி) 1996 ஆம் கல்வியாண்டு

இடம்: புதிய உயர் கல்லூரி
காலம்: 99-05-23 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12. 00 மணி (புதிய நேரம்)

புதிய உயர் கல்லூரியில் கல்வி கற்று B. A. (1999) இறுதியாண்டுப் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களும் ஒன்று சேர்ந்து மேற்படி ஒன்று கூடல் நிகழ்வை நடத்த இருப்பதால் அனைத்து மாணவர்களையும் 99- 05- 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 (புதியநேரம்)மணிக்கு புதிய உயர் கல்லூரியில் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புதிய உயர் கல்லூரி,
B. A. (1999) இறுதியாண்டு,
வெளிவாரி மாணவர்கள்.

(6571)

# கண்ணீர் அஞ்சலி

13- 05- 99 ஆம் திகதி அகாலமரணமடைந்த எமது பிரதேச சபையைச் சேர்ந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்

**அமரர் மு. பூபாலசிங்கம்**

(ஜே. பி.)

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

தலைவர்,
செயலாளர், உறுப்பினர்கள், அலுவலர்கள்
வலி. கிழக்கு பிரதேச சபை.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
14- 05- 1999

(சி/7554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி பிரதேச செயலர் பதவி குறித்து யோசனை

மேலதிக பிரதேச செயலாளர்கள் பிராந்திய பிரதேச செயலாளர்கள் ஆகியோருடன் கூடுதலாக உதவி பிரதேச செயலாளர்களையும் நாடெங்கும் நியமிக்கும் தேவை ஏற்பட்டுள்ளது என்று பொதுநிர்வாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவிக்கின்றார்.

பிரதேச செயலாளர்களே அரசாங்கத்துறையில் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். பொது நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கு போதிய வளம் இல்லாத போதும் நிர்வாகத்துறையை வளப்படுத்த சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

1997 ஆம் ஆண்டுக்கான பிரதேச செயலாளர்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற போது அமைச்சர் உரையாற்றினார். (ஐ-6)

## கருத்தரங்கு

'போசாக்குணவு' 'தனிநபர் சுகாதாரம்' என்ற தலைப்புக்களிலான மருத்துவக் கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிமுதல் 6.30 மணிவரை புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிகள் என் சிவராஜா, சி. எஸ். நச்சினார்க்கினியன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (க)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி இடநெருக்கடி நீங்கியது

வலி வடக்கு, மே 15

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவி வந்த இடநெருக்கடி ஓரளவு நீங்கியுளளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவின் உதவியுடன் சேதமடைந்த கட்டடத்தின் ஒரு பகுதி திருத்தப்பட்டதைத் தொடர்ந்தே இடநெருக்கடி நீங்கியுள்ளது.

தற்போது வெளி நோயாளர் பிரிவு, மருந்து வழங்கும் பகுதி என்பன முன் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதே வேளை — உள்ளக நோயாளர்களை அனுமதிக்கும் விடுதியும் மாற்றப்பட்டுள்ளது. (ஐ - 86)

## மாகாணக் கல்வி அமைச்சுச் செயலருக்கு தமிழர் ஆசிரியர் சங்கம மகஜர்

குருநகர், மே 15

இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்து அண்மையில் கல்வி வலயங்களில் உதவிக் கல்விப்பணிப்பாளர்களாகப் பதவி ஏற்றுக்கொண்டவர்களை வலயங்களில் கல்வி நிர்வாகம், கல்வி மேம்பாடு, திட்டமிடல் போன்ற பகுதிகளுக்குப் பொறுப்பாக நியமிக்க நடவடிக்கை எடுக்கவும்.

மேற்கண்ட கோரிக்கை அடங்கிய மகஜர், வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் விடயங்கள் பின்வருமாறு:-

★ 1995 ஆம் ஆண்டுக்குரிய அதிபர்களின் சம்பளப்பாக்கியையும், 1998 ஆம் ஆண்டுக்குரிய இடர்க்காலக் கொடுப்பனவையும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ ஆசிரியர்கள் தமது 10 மாதச் சம்பள முற்பணத்தைப்பெற வசதியாக மத்திய அமைச்சின் திறைசேரியில் இருந்து கட்டுநிதி பெறப்பட வேண்டும்.

★ கல்வி அமைச்சின் புதிய இடமாற்றச் சுற்றறிக்கைக்கு அமைவாக இடமாற்றத்திட்டம் ஒன்று வகுக்கப்படவேண்டும்.

★ தீவக வலயத்தில் நீண்டகாலமாகச்சேவை புரியும் ஆசிரியர்கள் அவர்களது சொந்த இடங்களில் சேவையாற்ற அனுமதிக்கப்படவேண்டும்.

★ மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களை வலயங்களுக்குள் இடமாற்றம் செய்து ஆசிரியர் எண்ணிக்கையைச் சமநிலைப்படுத்த வேண்டும்.

★ ஐந்து வலயங்களுக்கும் இணைப்பாளராக தகுதியான ஒருவரை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கவேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில்மாகாணப் பணிமனையின் கிளை ஒன்றை ஆரம்பித்து ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ தொலைக்கல்வி நிறுவனத்தில் தமது பயிற்சியை முடித்துக்கொண்ட ஆசிரியர்களில் பெரும் எண்ணிக்கையானோர் ஆசிரியர் சேவைக்குள் இதுவரை உள்வாங்கப்படவில்லை. இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கவனத்தில் எடுத்து இவர்களை விரைவில் ஆசிரிய சேவைக்குள்உள்வாங்கி இவர்களுக்குக்குரிய சம்பளத்திட்டத்தை வழங்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு மஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-51)

## மர முந்திரிகைக் கன்றுகள் அன்பளிப்பு

நெல்லியடி, மே 15

புலோலி சிங்கை நகர் உதய சூரியன் சனசமூக நிலையத்திற்குட்பட்ட குடும்பங்களுக்கு தலா இரண்டு மர முந்திரிகைக் கன்றுகள் வீதம் 250 மரமுந்திரிகைக் கன்றுகளை பருத்தித்துறை பிரதேச சபை அன்பளிப்புச் செய்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி சனசமூக நிலைய முன்றலில் வைத்து மரமுந்திரிகைக் கன்றுகளை, பருத்துறை பிரதேச சபையின் உபதலைவர் பரஞ்சோதி ரவீந்திரன் வழங்கினார்.

இந்த வைபவத்தில் மேற்படி சனசமூக நிலையத் தலைவர் வி. ஜி. தங்கவேலுவும் கலந்து கொண்டார். (இ - 109)

## ஆரம்பப் பிரிவு உபகரணங்கள்

புன்னாலைக்கட்டுவன், மே15

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் 11 பாடசாலைகளுக்கு ஆரம்பப் பிரிவு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன இந்த உபகரண அமைப்பில் கணித, விஞ்ஞான, தமிழ், ஆங்கில பாடங்களுக்கான உபகரணத் தொகுதிகளுடன் சங்கீத இசைக்கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன தற்போதைய புதிய கல்விச் சீர்திருத்தப் பாடத்திட்டத்துக்கு இந்த உபகரணத் தொகுதி பெரிதும் பயன்படும். (ஐ-133)

## ஒலி பெருக்கி பாவிப்பதற்கு முன் அனுமதி

நெல்லியடி, மே 15

வடமராட்சிப் பகுதிகளில் பொது வைபவங்களுக்கு ஒலி பெருக்கியைப் பாவிக்க விரும்புவோர், அதற்கான அனுமதியை, இரு வாரங்களுக்கு முன்னர் பொலீஸ் நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பருத்தித்துறை, நெல்லியடி பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-109)

## இழந்த கல்வியை மீளப் பெறும் திட்டம்

தென்மராட்சி, மே 15

'யுனிசெவ்' நிறுவனம் தரம் 3, 4, 5. ஆகிய வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இழந்த கல்வியை மீளப் பெறல் என்னும் திட்டத்தினை செயற்படுத்தவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள 25 பாடசாலைகளில் இத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 15

யாழ். ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியத்தால் நடத்தப்படும் வாராந்த கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒன்றிய பணிமனையில் ப. குகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் ரி. வேல்நம்பி 'தலைமைத்துவம்' எனும் பொருளில் கருத்துரை வழங்குவார். (க-30-ரி)

## விபத்தின்பின் விபத்து

உரும்பிராய், மே 15

விபத்தில் காயமடைந்தவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற வாகனமும் விபத்திற்குள்ளானது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் உரும்பிராயில் இடம் பெற்றது.

நேற்று முன்தினம் காலை உரும்பிராய் காளிகோயிலடியில் பலாலி வீதியில் ஒரு லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிள் சேதமடைந்தது அதனை ஓட்டிய இளம்பெண் படுகாயமடைந்தார்.

அவர் ஒரு காரில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவரை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டுத் திரும்பி வந்தபொழுது அந்தக் கார் கோண்டாவிலில் வேறொரு வாகனத்துடன் மோதியதில் சேதமடைந்தது. (ஐ-154)

## உரும்பிராயில் திருடர் நடமாட்டம்

உரும்பிராய், மே 15

உரும்பிராய்ப் பகுதியில் இரவு நேரத்தில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது.

இதனால் பொது மக்கள் பயத்துடனேயே இரவு நேரத்தைக் கழிக்கின்றனர்.

திருடர்கள் கூரை ஓடுகளை அகற்றி உள்ளே நுழைந்து விடக்கூடும் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும்.

இதன் காரணமாகச் சில வீடுகளில், குடும்ப உறுப்பினர்கள் மாறி மாறி விழித்திருந்து காவல் கடமையில் ஈடுபடுகின்றனர் அத்துடன் வீட்டின் வெளிப்புறங்களில் உள்ள மின்குமிழ்களை இரவு முழுவதும் எரிய விடுகின்றனர். (இ-154)

## அதிரடி அரங்கு

தட்டிக் கேட்க ஆள் இல்லாத தால் குடா நாட்டில் பூதாகாரமாக உருவெடுத்திருக்கும் சமுதாயச் சீரழிவுப் பிரச்சினைகளை இப் பகுதியில் சுட்டிக் காட்டி வந்திருக்கின்றோம் அந்த வரிசையில் இதுவும் ஒன்று. உங்கள் வீட்டில் இந்தப் பிள்ளையும் பால்குடிக்குமா என்ற பாணியில் மிகச் சாதுவாக இருக்கின்ற உங்கள் மகனோ, மகளோ கூட இந்தத் திருகுதாளத்தை செய்து விட்டு இப்போதைப் பாட்டுக்கு அமைதியாக இருக்கலாம். எனவே எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

இந்த விடயத்தில் எமது தகவலைக் கூறுவதிலும் பார்க்க யாழ். மாவட்டத்துக்குப் பொறுப்பான மேலதிக மாவட்டப் பதிவாளர் ந சதாசிவஐயர் கூறுவதை அவரின் வார்த்தைகளில் அப்படியே தருவது பொருத்தமானதாகும். அவர் இப்படிக் கூறுகின்றார்:

''எனது மனதை நெருடுகின்ற ஒரு விடயத்தை முன்வைக்கவிரும்புகிறேன். நான் ஒரு குடும்பஸ்தன். எனக்கும் வயது வந்த பெண் பிள்ளைகள் உள்ளனர். மாவட்டப் பதிவாளர் என்ற முறையில் திருமணங்களைப் பதிவு செய்து வைப்பதும் எனது கடமை. இப்போது பெற்றோரின் சம்மதமின்றி திருமணப் பதிவுக்கு வரும் இளம் பிள்ளைகளின் எண்ணிக்கை திடீரெனக் கூடியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. பாமரர்கள் மட்டுமன்றி படித்த, பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட யுவதிகள், இளைஞர்கள் பலரும் வந்து இரகசியமாகத் திருமணப்பதிவு செய்து விட்டுச் செல்கின்றார்கள். இவற்றில் பெரும்பாலான பிள்ளைகள் ஒளிந்து, மறைந்து வந்து திருமணப் பதிவு செய்து விட்டு நல்ல பிள்ளைகளாக வீடு போய்ச் சேர்வதும் உண்டு. சட்டப்படி வயது வந்தவர்கள் உரிய சாட்சிகளுடன் வருவதால் என்னால் இந்தப் பதிவுகளைச் செய்யாமல் நிராகரிக்க முடியாது; முடிவதில்லை. முடிந்தளவு புத்தி சொல்லிப்பார்த்தாலும் கை கூடுவதில்லை கிராமப் பதிவாளர்களிடம் போய்ப் பதிவு செய்தால் விடயம் அம்பலமாகிவிடும் என்பதால் எம்மிடம் வருகின்றார்கள். இப்படியே போனால் சமுதாயம் எங்கு போகும்?

''நான் ஓர் அந்தணர் குடும்பத்தில் பிறந்தவன்; நேர்மையாகக் கடமை செய்ய விரும்புபவன்; ஒரு தந்தை. இப்படியான இரகசியச் செயல்களுக்கு நானும் உடந்தையாவதா என எனது மனம் நோகுகின்றது. மனத் திருப்தியுடன் இப்பணியை மேற்கொள்ளவும் முடியவில்லை. பதிவாளராக இருப்பதால் செய்யாதிருக்கவும் முடியவில்லை. அத்தோடு ஒரு திருமண விடயத்தை—சுப காரியத்தை—மனத் திருப்தியின்றிச் செய்து வைப்பதும் தவறு

''நான் தெரிந்தும் செய்வது குற்றமா? எனக்குத் தெரியவில்லை

''இன்று (கடந்த புதனன்று) மட்டும் இப்படியான மூன்று திருமணங்களைப் பதிவு செய்தேன். சம்பந்தப்பட்ட பெண் பிள்ளைகளுடன் அரைமணி நேரம் உரையாடினேன். சமுதாயத் தேவையை — அதில் அவர்களின் பங்கு, பணியை—எடுத்துரைத்தேன். பெற்றோர், சுற்றம் பற்றிய கவலையே அவர்களுக்கு இல்லை. நான் இத்தனையும் எடுத்துக்கூறிய பின்னர் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரவில்லை. ஏன் கண் கூடக் கலங்கவில்லை.

''திருமணம் முடித்துப் போகும் பெண்கள் பெற்றோரைப் பிரிந்து போகிறோம் எனக் கண்ணீர் விடுவதைக் காண்கிறோம். ஆனால் இவர்களோ...?

''திருமணப் பதிவை காசு நோக்கமின்றி சேவையாகச் செய்பவன் நான். அதனால் சிந்திக்கிறேன். திருமண வயதெல்லை 18 ஆக இருக்கையில் 15, 16 வயதுடையோர் எத்தனை சொல்லியும் கேட்காமல் ஓடுவது இதிலும் மோசம். பதிவுகூடச் செய்யமுடியாது. புத்தி சொன்னாலும் கேட்கின்றார்கள் இல்லை. இது எனது மனதை நெருடிக்கொண்டே இருக்கின்றது''.

— இவ்வாறு எமது சமுதாய அவலநிலையைத் தினசரி நேரில் காணும் எமது மாவட்டப் பதிவாளர் வேதனையுடன் கூறுகின்றார்.

அவரின் வேதனையும் அதில் பொதிந்துள்ள ஆழமான—மனதை நெருடுகின்ற—தகவல்களும் எமது சமுதாய வழிகாட்டலுக்குச் சமர்ப்பணம்.

★ ★ ★ ★ ★

வடக்கு — கிழக்கு மாகாண சபையில் உயர் பதவியில் இருக்கும் அதிகாரிகளுக்கு [ அவர்களில் பலர் அறுபது வயதைத் தாண்டிய பின்னரும் கதிரையைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பவர்கள் ] குடாநாட்டுக்குரியதைச் செய்யவில்லை, நிதியை ஒதுக்கவில்லை, திட்டங்களை அங்கீகரிக்கவில்லை, பொருள்களை அனுப்பவில்லை என்பது போன்ற — அவர்களுக்கு எதிரான — குற்றச்சாட்டுக்களைச் சுட்டிக்காட்டினால் கோபம் [ மூக்கின் மேல் ] பொத்துக் கொண்டு வந்து விடுகின்றது.

இப்படித்தான் மாகாண சபையின் கீழ் — குடாநாட்டில் இயங்கும் — ஒரு திணைக்களம் தொடர்பாக மாகாண சபை அதிகாரிகள் காட்டும் அசமந்தமான — பொறுப்பற்ற — போக்கை உதயன், சஞ்சீவி சுட்டிக் காட்டியது. அவ்வளவு தான். அடுத்த நாளே அந்தத் திணைக்களத்தின் குடாநாட்டுப் பகுதிக்குப் பொறுப்பான உயரதிகாரிக்கு '' பக்ஸில் '' இடமாற்ற உத்தரவு வந்தது.— வவுனியாவுக்கு

பிறகு என்ன நினைத்தார்களோ தெரியவில்லை (குற்றச்சாட்டு ஏதுமில்லாமல இடமாற்றம் செய்தால் பின்னால் சிக்கல் வரும் என்று கவலைப்பட்டார்களோ என்னவோ தெரியவில்லை) அன்று மாலையே மற்றொரு ''பக்ஸ்'' செய்தி மூலம் அந்த இடமாற்ற உத்தரவு தற்காலிகமாக இடை நிறுத்தி வைத்திருப்பதாக திருகோணமலையிலிருந்து அறிவிக்கப்பட்டது.

திட்டமிட்டு எதையும் நிர்மாணிக்க முடியாமல் திண்டாடுகின்றார்கள் இங்குள்ள அதிகாரிகள்.

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

செல்வரத்தினம் ரஜனிகாந் என்பவருடைய தேசிய அடையாள அட்டை [இல: 773070571V] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அம்பாள் மரக்காலை, 261, பருத்தித்துறை வீதி. நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(65749)

மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை என்னும் முகவரியுடைய ஆறுமுகம் சற்குண நாதன் என்பவரின் தேசிய, விசேட அடையாள அட்டை நாயன்மார்கட்டுச் சந்திக்கும் ஆயுர்வேத வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நாயன்மார்கட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்து உதவவும்: தகுந்த சன்மானம் வழங்கப்படும். (65734)

### இறைச்சிக்கோழி

புறோயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(65691)

இறைச்சிக்கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம்: (சின்னக்கடை அருகில்) (65750)

BROILER இறைச்சிகோழி சுத்தம் செய்து தினமும் நியாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அடை வைக்கக் கூடிய முட்டையும், வாழைக்குட்டிகளும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி நல்லூர்.

(65652)

### MATHS, ENGLISH

O/L பரீட்சையில் ஆரம்பத்தில் இருந்து Credit Distinction பெறுபேறுடைய (Paper Class உட்பட) G. A. Q. பட்டப் படிப்பு ஆங்கிலமும் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.

(65688)

### O/L MATHS

பரீட்சை நோக்கின் அடிப்படையில் இருந்து இ தாசன் மாலை 6.00 - 7 மணி வரையில் கோண்டாவில் கிழக்கு, நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில்வீதி, (விவேகானந்தா சன சமூக நிலையத்திற்கு அண்மையில்) கற்பிக்கப்படுகின்றது. (65747)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில, மேற்படிப்பு மாணவர்க்கும், வேலை பார்ப்போருக்குமான வகுப்புகள்: ஆசிரியர் ந: விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 [302], காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்க சுவாமிகள் வீதி (பிளாக் வீதி), சங்கானை. (65737)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் தங்கள் 31 வயதுடைய அரசாங்கநிறுவனம் ஒன்றில் பொறுப்பாளராக கடமையாற்றும் மகனுக்கும் 27 வயதுடைய பயிற்றப்பட்ட ஆசிரியருக்கும் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றார்கள் விண்ணப்பிக்கவும்; விளம்பர இல. 881, மே/பா உதயன் யாழ்ப்பாணம்.

(65751)

### விற்பனைக்கு

றங்கூன் தேக்கினால் செய்யப்பட்ட அலுமாரியும், பால் எடுக்கும் மடிசெவி, பிரண்ட செவி, ஆரம் கொண்ட ஜமுனாபாரி ஆடுகளும் கடாக்குட்டிகளும், மறிக்குட்டிகளும், இறைச்சிக்குகந்த வான்கோழிகளும் முட்டை இடும் வெள்ளை வான்கோழிகளும் வெள்ளை, புள்ளி கினிக்கோழிகளும் முட்டைகளும், குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மதுரா, 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[65710]


இடவசதி தேவை காரணமாக மண்வீடு ஒன்று அழிக்க விருப்பதால் அதிலுள்ள வைரமரங்கள் யாவும் விற்கப்படவுள்ளன. 17 அரை அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட பனைமர வளைகள், கதவு நிலைகள் உட்பட தொடர்பு: க. முருகேசர் (ஒய்வூதியர்) சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

(65670)


## தரமான நிழற்பட பிரதிகள்

Photo copy

குறைந்த விலையில்



A-4 அளவு ரூபா 2.50 மட்டுமே

## அடையாள அட்டைகள்

கவரிடுதல் (Lamination)


அருண்ஸ்

361, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்

(வி/7542)


## நெஞ்சகலா மூன்றாண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 - 05 - 1955 | 17 - 05 - 1996 |

அமரர்

## கணபதிப்பிள்ளை சிவகுரு

(கூட்டுறவுப் பரிசோதகர், பிரதேச செயலர் பிரிவு, சாவகச்சேரி)

திதி: 15 — 05 — 99

எமது உயிரினுமினிய அப்பா! காலமெல்லாம் உங்கள் நிழலில் வாழக் கனவு கண்டிருந்தோம் காலனவன் நம் கனவைக் கானல்நீர் ஆக்கிவிட்டான். கலங்குகின்றோம் அப்பா. நீங்கள் எங்களை விட்டுச் சென்று மூன்றாண்டாகி விட்டதப்பா! இப்புவியில் நாமிருக்கும்வரை உங்கள் அன்பு முகம் எம் நெஞ்சை என்றும் விட்டகலாது!

உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி தனம்,
ஆருயிர்ச் செல்வங்கள்,
கபிலன், அகிலன், நிமலன், தனுசன்.

சிவபதி,
மந்துவில் மேற்கு,
கொடிகாமம். (65742)

## வாழ்த்துகின்றோம்



## திரு. ஆறுமுகம் அருளம்பலம்

புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்தவரும் தற்போது கொக்குவில் பிரம்படி, மில் ஒழுங்கையில் வசிப்பவருமான ஆறுமுகம் அருளம்பலம் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி எம் அமரசேன சில்வா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அவர்களை மனமார வாழ்த்துவதுடன் அவரது பணி சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்

பிரம்படி, கொக்குவில். (வி/7538)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

(15 - 05 - 1999)



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 15 - 01 - 1941 | 15 - 04 - 1999 |

திருமதி

## தவமணி சிவகுருநாதன்

(முந்திரிகைத் தோட்டம், உரும்பிராய்)

மாதம் ஒன்றுதான் என்ன
ஆயிரம் தான் சென்றிடினும்
எம் இதயத்தில் வாழுகின்ற
உங்கள நினைவகன்றிடுமோ அம்மா

இன்று (15 - 05 - 1999) சனிக்கிழமை காலை 10; 00 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

[ந. சிவகுருநாதன். (சின்னண்ணன்)
பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்.

முந்திரிகைத் தோட்டம்,
கோப்பாய் வீதி,
உரும்பிராய். (65673)

உ

## பூப்புனித மங்கள நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் வைகாசி மாதம் 2 ஆம் நாள் (16 - 05 - 1999) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணிமுதல் 12-30 மணிவரையுள்ள விசாக நட்சத்திரமும், சித்தயோகமும் இடப லக்கினமும், துலா ராசியும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி

**தனுஷா** அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழாவும் ருது சாந்தியும் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு திருமதி நடராசா
(அவர்களின் பேர்த்தி)
சத்தியா அன் கோ, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். (65684)

[illegible]
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். செல்ல கப்பல் வசதி கோரி
# திருமலையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, மே 15

யாழ்ப்பாணம் திரும்புவதற்கு போக்குவரத்து வசதியின்றி திருமலையில் நிர்க்கதி நிலையில் உள்ள பயணிகள் திருமலைப்பட்டணமும், சூழலும் பிரதேச செயலகம் முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை பிரதேச செயலகம் நோக்கி வீசியதாகவும் —

இதனால் அந்தக் கட்டடத்துக்கு சிறு சேதம் ஏற்பட்டதாகவும் — தெரியவந்தது.

அதன் பின்னர் அவர்கள் பேரணியாக திருமலை நாடாளுமன்ற உறுப்பினர் அ. சம்பந்தன் வீட்டுக்குச் சென்றனர்.

தமக்கு கப்பல்வசதி செய்து தருமாறு அவர்கள் அவரிடம் கோரினர்.

சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு பதில் அளிப்பதாக அவர் உறுதி கூறினார்.

அதே நேரம் —

திருமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு நடத்தப்படும் மூன்று சேவைகளிலும் அகதிகளை மட்டும் அனுப்ப முடிவு செய்யப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது. (இ-3-21)

## ஒன்று கூடல்

கொழும்புத்துறை, மே 15

சுகவாழ்வு உளநலப் பணியாளர்களின் ஒன்றுகூடல் கூட்டம் அருள்திரு டேமியன் தலைமையில் சுகவாழ்வு தலைமையகத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-30)

## மருந்துக் கலவையாளர் நேர்முகப் பரீட்சை

யாழ். மாவட்ட அரசினர் வைத்திய சாலைகளில் கடமையாற்றும் தரம் II 'ஆ' பிரிவிலுள்ள மருந்துக் கலவையாளர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சை, வாய்மொழிப் பரீட்சை என்பன எதிர்வரும் 19-ஆம் திகதியன்று களுத்துறையிலுள்ள தேசிய விஞ்ஞான சுகாதார நிலையத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கஷ்டம், தங்குமிட வசதியின்மை என்பனவற்றினால் களுத்துறைக்குச் சென்று இப்பரீட்சைக்குத் தாம் தோற்ற முடியாதிருப்பதாகச் சம்பந்தப்பட்ட மருந்துக்கலவையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை—

இப்பரீட்சையை யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ். கிளை யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-135)

## பனை விவசாயிகளுக்கு வயல் பாடசாலை

தென்மராட்சி, மே 15

கெயர் நிறுவனத்தினர் பளைப் பிரதேசத்தில் உள்ள மாசார். முகாவில் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கான வயல் பாடசாலையினை முகாவிலில் ஆரம்பித்துள்ளனர்.

கிராம வயல் பாடசாலையில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு கருத்தரங்குகளும், செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் வேம்பொடுகேணி, தர்மக்கேணிப் பகுதிகளில் நடத்தப்பட்ட வயல் பாடசாலையில் பெரும் எண்ணிக்கையான விவசாயிகள் கலந்து கொண்டதும், செய்முறைப் பயிற்சியில் மேற்கொள்ளப்பட்ட பயிர்கள் சிறப்பான விளைச்சலைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## குமுதினிப்படகு படுகொலை நினைவு நாள்

நெடுந்தீவு, மே 15

குமுதினிப் படகுப் படுகொலைச் சம்பவத்தின் 14 ஆவது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு இன்று சனிக்கிழமை நெடுந்தீவு இந்து, கிறிஸ்தவ, ஆலயங்களில் நினைவு நாள் பிரார்த்தனைகள் நடைபெறும்.

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் வந்து கொண்டிருந்த பயணிகள் நடுக் கடலில் வைத்து படையினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே- (ஐ111)

## பங்கீட்டு அட்டை வழங்கல்

கொழும்புத்துறை, மே 15

யாழ். பிரதேச செயலாளர் பிரிவு பணிமனைக்கு உட்பட்ட பகுதி மக்களுக்கு புதிய பங்கீட்டு அட்டையும் ஆறு மாதத்திற்குரிய நிவாரண முத்திரையும் அடுத்த வாரம் முதல் வழங்கப்படவுள்ளன.


தத்தமது பகுதிக் கிராம சேவையாளர் பணிமனையில் நேரில் சென்று இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-30)

## மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், மே 15

மானிப்பாய் கோவில் பற்று லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண், மருத்துவப் பரிசோதனைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது. (க)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 26 — 02 — 1927

உதிர்வு: 15 — 05 — 1998

அமரர்
**நா. தம்பிப்பிள்ளை**
(சின்னமணி)

ஆண்டு ஒன்று ஆனதையா
அன்பு முகம் பார்த்து
ஆண்டு ஆயிரமானாலும்
அகன்றிடுமோ உம் நினைவு!

16—05—99 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்
மனைவி, மாமி, உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

த. இராசாத்தியம்மா,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.
(65660)

## விற்பனைக்கு

செவ்வரத்தை, குறோட்டன் பாம்ஸ், எக்சோறா கன்றுகளும், சைப்பிரஸ் குறோட்டன், பாம்ஸ் முதலியன சாடிகளுடனும் விற்பனைக்குண்டு மற்றும் பலவகையான பூச்சாடிகளும் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகக் கொள்வனவு செய்தால் விசேட கழிவு வழங்கப்படும்.

**பிளான்ற் பரடைஸ்**
**152 / 2, கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்**
(65696)

## தேவை

**ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை**

நேரில் தொடர்பு கொள்ளவும். இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**வாகி பாமஸி**
**கோண்டாவில் சந்தி,**
**கோண்டாவில்.**
(65748)

## சண்றைஸ் என்ரபிறைசஸ்

கொழும்பிலிருந்து பொருள்களைக்
கப்பலில் ஏற்றி இறக்க வேண்டுமா?
புதிய ஓட்டோக்கள், கோழித்தீன்
விற்பனைக்கு உண்டு.

**"சிறந்த சேவை நிதான விலை"**
நாடுங்கள்

யாழ்ப்பாணம்:
சண்றைஸ் என்ரபிறைசஸ்
42, K. K. S Road,
யாழ்ப்பாணம்.

கொழும்பு:
**SUN RISE IMPEX**
102G (S). Dam St. Colombo - 12.
T.P. 451282
(65757)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 08 — 05 — 1904

மறைவு: 15 — 04 — 1999

அமரர்
**கந்தையா வேலுப்பிள்ளை**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

ஸ்ரீ சண்முகானந்தா வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.
(65756)

## ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ
## சிற்றி ரெலிகொம் அன்
## கொம்பியூட்டர் சேவிஸ்

நிறுவனங்களின் ஆதரவில்

## இளங்கலைஞர் மன்ற
## வளர்ச்சி நிதிக்காக

ஈழத்து முன்னணி மெல்லிசைக் கலைஞர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து வழங்கும்

# ராக வஸந்தம்

(திரைப்படப் பாடல் நிகழ்ச்சி)

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
ஜனரஞ்சக அறிவிப்பாளர் S K. குணா

**பாடகர்கள்:**
S பத்மலிங்கம், குகானந்தன், சுரேஷ்.
ராஜேஸ். சியாமளன், சிவரூபன்
நிமல் சங்கர், ஜெயபரதி சசிரேகா.
கஜேந்திரன். சுதர்சன் ஆகியோர்

**இசை நெறியாள்கை:** N செல்வச்சந்திரன்

**16-05-99 ஞாயிறு** 10-30, 2.30
(காலை, மாலை இரு நிகழ்ச்சிகள்)

இடம்: **இளங்கலைஞர் மன்ற கலா மண்டபம்**

அன்பளிப்பு: 100/- 50/-
சிறுவர்களுக்கு 30/-

ரிக்கற்றுகளை மண்டப வாயிலிலும், சிற்றி ரெலிகொம் நிறுவனத்திலும் பெறறுக் கொள்ளலாம்.

மெல்லிசை ரஸிகர்களுக்கு ஓர் அரிய விருந்து
(ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
ரிக்கற்றுக்களுக்கு முந்துங்கள்)

இ. க. மன்றத்தினர்

சட்டநாதர் வீதி,
நல்லூர்
(65743)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டிலிப்பாயில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தெரிவு

சண்டிலிப்பாய், மே 15

இவ்வருடத்தில் (1999) சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக பிரிவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நுண்கருத்திட்டங்களை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக பணிமனை தயாரித்து தூதரகத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் சமர்ப்பித்துள்ளது.

★ காக்கைதீவு மீனவர் குடியேற்றத்திட்டத்திற்கு நீர் விநியோகம் வழங்கும் திட்டம்.

★ ஆனைக்கோட்டையில் கால்நடை வளர்ப்பு, தச்சுத் தொழில், சிறு வியாபாரம் ஆகியவற்றில் ஈடுபடுபவர்களுக்கு சுய முயற்சிக்கடன் வழங்கும் திட்டம்:

★ வடலியடைப்பு கிராமத்தில் விவசாயம், மேசன் தொழில், கால்நடைவளர்ப்பு, சிறு வியாபாரம் ஆகியவற்றில் ஈடுபடுபவர்களுக்கு சுய முயற்சிக் கடன் வழங்கும் திட்டம்;

★ பெரியவிளான், மாரீசன் கூடல் ஆகிய இடங்களிலுள்ள இரு பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்யும் திட்டம் —

ஆகிய செயற்றிட்டங்கள் இவ்வருடத்தில் மேற்கொள்ளுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வி. கனகரத்தினம் தெரிவித்தார்.

(ஐ-135)

## ஜன்னல் ஊடாக நுழைந்து கச்சேரி கிழக்கில் வீட்டில் பொருள்கள் சூறை

அரியாலை, மே 15

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த சமயம் வீட்டு ஜன்னலைப் பிரித்து வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் மோட்டார் சைக்கிள் உட்பட பெறுமதி மிக்க பொருள்களைத் துணிகரமாகத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு யாழ். கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றது.

வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் திருடர்கள் மிகத் துணிகரமாக ஜன்னல் கம்பியைப் பிரித்து வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்; பின்னர் கதவுத் திறாங்குகளை அகற்றி கதவைத் திறந்து பொருள்களை மிகவும் தந்திரமாகத் திருடிச் சென்றுள்ளனர்.

சாளி, மோட்டார் சைக்கிள், சைக்கிள் உட்பட மற்றும் பல பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

திருடர்களின் கைவரிசை இப்பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

கடந்தமாத நடுப்பகுதியில் இங்குள்ள ஒரு வீட்டில் இரண்டு தடவைகள் அடுத்தடுத்து திருட்டு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-17-30-ரீ)

## ஜேர்மன் விபத்தில் தமிழ் யுவதி மரணம்

யாழ்ப்பாணம், மே 15

ஜேர்மனியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த யுவதி உட்பட இருவர் பலியானதாக ஐரோப்பிய செய்திகள் தெரிவித்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜேர்மன் சூல் பார்க் நகரில் இவ் விபத்து நடைபெற்றது.

வீதியின் குறுக்கே பாய்ந்த முயல் ஒன்றைக் காப்பாற்ற வாகனத்தை வீதியோரம் நிறுத்த முயன்ற சமயம் வாகனம் பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் பலியான இருவரில் ஜேர்மன் யுவதி ஒருவரும் அடங்குவார்.

காயமடைந்துள்ள நான்கு பேரில் ஜேர்மன் யுவதியொருவரும் பலியான புதுக்குடியிருப்புயுவதியின் சகோதரர்கள் மூவரும் அடங்குகின்றனர்.

இவர்களில் ஜேர்மன் யுவதி உட்பட மூவரின் நிலை ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-21)

## உலகக்கிண்ண ஞாபகார்த்த நாணயம்

கொழும்பு, மே 15

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை ஒட்டி இலங்கை மத்திய வங்கி நேற்று வெள்ளிக்கிழமை புதிய ஐந்து ரூபா நாணயக் குற்றி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த நாணயத்தில் ஒரு பக்கத்தில் கிரிக்கெட்டில் ஈடுபடும் துடுப்பாட்ட வீரர் ஒருவருடைய உருவமும் விக்கெட் காப்பாளரின் உருவமும் மறு பக்கத்தில் 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் வடிவமும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந் நாணயக் குற்றியின் நிறை 9.5 கிராம் ஆகும்.

(ஐ-க)

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

புன்னாலைக்கட்டுவன் மே15

வலிகாமம் தெற்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சுன்னாகம் பிரதேச சபை அலுவலகத்தில் இடம் பெறும்.

இக் கலந்துரையாடலில் வலிகாமம் தெற்கு முன்பள்ளி ஆசிரியர்கள், உப ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் தெற்கு சனசமூக அபிவிருத்தி அலுவலர் செல்வி இ. சிவயோகம் கேட்டுள்ளார்.

(ஐ-133)

## பொது நூலக கட்டடம்

வேலணை, மே 15

வேலணை பிரதேச சபையின் பொது நூலகக் கட்டடத் திறப்புவிழா விரைவில் இடம்பெற உள்ளது.

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை வேலணை பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் நடைபெற [illegible] மூர்த்தி தெரிவித்தார்.

(இ-167)


## யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம் சகல வர்த்தகர் சங்கங்களுக்குமான அறிவித்தல்

சகல வர்த்தகர் சங்கங்களும் யா. மா. வ. ச சம்மேளனத்தில் பெற்றுக் கொண்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுப் புத்தகங்களின் அடிக் கட்டைகளையும், அதற்கான பணத்தையும் 17-05-99 திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு முன் யாழ் வணிகர் கழகப் பணிமனையில் ஒப்படைத்து 19-05-99 புதன் கிழமை அதிர்ஷ்டம் பார்ப்பதற்கு ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இக்காலப்பகுதிக்குள் ஒப்படைக்காத புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு அதற்கான பணத்தை அந்தந்த வர்த்தகர் சங்கங்கள் செலுத்த வேண்டும் என்பதனை அறியத் தருகின்றோம்.

யாழ். மாவட்ட
வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்
இல. 27, நவீன சந்தை, (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

(சி/ 7546)



## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

கொழும்பிலிருந்து பொருள்களைக் கப்பலில் கொண்டுவரும் வர்த்தகர்களுடனான

## கலந்துரையாடல்

கொழும்பிலிருந்து பொருள்களைக் கப்பலில் கொண்டுவரும் வர்த்தகர்களுக்கும், எமது நிர்வாக சபை உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் 15-05-1999 சனிக்கிழமை பி. ப 3.30 மணிக்கு (புதிய நேரம்) எமது வணிகர்கழகப் பணிமனையில் நடைபெறும். இக் கலந்துரையாடலில் கொழும்பிலிருந்து பொருள்களைக் கொண்டுவரும் சகல வர்த்தகர்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களும் சகல பத்திரிகை நிருபர்களும் இவ் அழைப்பை ஏற்று இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

இல. 27, நவீனசந்தை. [மேல்மாடி]
யாழ்ப்பாணம்

[சி/7545]



## சுனில் ஆட்ஸ்

18-05-99 செவ்வாய்க்கிழமை புகைப்படச் சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

தரமான கலர்ப்படப் பிரதிகளுக்கு நீங்கள் நாட வேண்டிய இடம்:

சுனில் ஆட்ஸ்
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/7544)



சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

காலம்: 16-05-99 ஞாயிறு காலை 9.30 மணி
இடம்: நிறைவாழ்வு இல்ல மண்டபம்

உறுப்பினர் அனைவரும் வருக.

- செயலாளர்

(சி/7543)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 08 — 1962
மறைவு: 16 — 04 — 1999

திருமதி
**பாலச்சந்திரன் கெங்காதேவி**


நெற்கொழு மண்ணில் விளையாடி
உற்றவரை அந்நாளில் மகிழ்வித்து
ஏற்றம் கொண்ட பண்புடையவளாய்
சீற்றம் இல்லாத வாழ்வினிலே
மற்றவர்க்கு புத்திகள் பல கூறி
முற்றத்து வான் நிலவாய் நின்ற நீ
அற்ப ஆசைகளை உதறிவிட்டு
மறைந்து சென்றாயே!

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், சகோதரர்கள்,
தகப்பனாராகிய சிவலிங்கம்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்

கரந்தகேணி,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

[65744]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 21 — 12 — 1943
உதிர்வு: 15 — 05 — 1994

அமரர் அந்தோனிப்பிள்ளை
**இம்மானுவேல் ஜெயசிங்கம்**
[மதுவரி அத்தியட்சகர்]

"உங்களைச் சீவியத்தில் நேசித்தோம்,
மரணத்திலும் மறவோம்"

என்றும் மறவாத
மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

கரவெட்டி.

[C/7541]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் அணி
# வவுனியா, மட்டக்களப்புடன் மோதும்
## 10நாள் சுற்றுலாவாக திங்களன்று புறப்பாடு

யாழ்ப்பாணம். மே 15

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அகிலஇலங்கை ரீதியாகப் பிராந்தியங்களுக்கு இடையில் — 19 வயதுப் பிரிவினருக்காக — நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் அணியும் பங்கு பற்றவிருக்கின்றது.

வடக்கு — கிழக்கை உள்ளடக்கிய ஆறாவது பிராந்தியத்தில் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டப் பாடசாலை அணிகளுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகள் அணி முதல் சுற்றில் மோதும்.

இந்தச் சுற்றில் தெரிவுசெய்யப்பட்டால் அடுத்த சுற்றில் ஏனைய பிராந்திய அணிகளுடன் மோதும்தகுதியை யாழ். மாவட்ட அணி பெறும்.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்க அணியை வவுனியா மற்றும் மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கும் ஏற்பாட்டை யாழ். மாவட்டக் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எஸ். ரஜீவன் செய்திருக்கின்றார்.

சர்வதேச ரீதியில் பல்வேறு நாடுகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியொன்று நடைபெறவிருக்கின்றது.

அச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணியைத் தெரிவு செய்வதற்காக இலங்கை முழுவதும் உள்ள பாடசாலை கிரிக்கெட் வீரர்களின் தராதரம் கணிப்பீடு செய்யப்படவிருக்கின்றது.

அந்தக் கணிப்பீட்டைச் செய்வதற்காகவே பிராந்திய ரீதியில் — மாவட்ட மட்டத்தில் — பாடசாலைக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியை இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்பாடு செய்திருக்கின்றது.

நாளை மறுதினம் விமானம் மூலம் அனுராதபுரத்துக்குச் செல்லும் யாழ். மாவட்டப் பாடசாலைகள் அணி செவ்வாயன்று வவுனியாவில் வவுனியாப் பாடசாலைகள் அணியுடன் மோதும்.

அதன் பின்னர் 20ஆம் திகதி திருகோணமலையுடனும் 24 ஆம் திகதி மட்டக்களப்பு அணியுடனும் யாழ். மாவட்டப் பாடசாலைகள் அணி மோதும். இந்த இரு ஆட்டங்களும் மட்டக்களப்பில் நடைபெறும்.

மூன்று ஆட்டங்களையும் முடித்துக் கொண்டு 26 ஆம் திகதியளவில் யாழ். அணி திரும்பும்.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் அணியில் இடம் பெறும் வீரர்களின் பெயர்கள் வருமாறு:

தே. கௌரிபாகன், அ. டினேஷ் எபநேசர், க. பிரகாசன் (மூவரும் சென். ஜோன்ஸ் கல்லூரி), த. வாசுதேவன், சி. தனுஷ்காந்தன் (இருவரும் யாழ். மத்திய கல்லூரி), ஞா. ந. தேவராஜன், ப. பார்த்தீபன், தி. ஜெயராகவன் (மூவரும் சென். பற்றிக்ஸ் கல்லூரி), சி. லக்ஷ்மிகாந்த், நீ. முரளிதரன், சி. கைலேஸ்வரன் (மூவரும் யாழ். இந்துக் கல்லூரி), பா. அருள் பாலமேனன், க. டினேஷ் (இருவரும் யூனியன் கல்லூரி) கு. சிவகுகன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), க. பிரகாஷ் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத் தலைவரும் யாழ். மத்திய கல்லூரி அதிபருமான க. இராஜதுரை, சங்கத்தின் செயலாளர் சண். தயாளன், யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் உபதலைவர் க. பூபாலசிங்கம் ஆகியோர் யாழ். மாவட்ட அணிக்குப் பொறுப்பதிகாரிகளாகப் பணியாற்றவுள்ளனர்.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் அணி இன்று யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் பயிற்சிக் கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் ஈடுபடவிருக்கின்றது. (உ)

## திருமுறை விழா

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரிஅம்மன் கோயிலின் பரிபாலன சபையின் ஆதரவில் நாளை காலை 8 30 மணி முதல் முழுநாள் சைவத் திருமுறைப் பெருவிழா நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபையின் செயலாளர் டாக்டர் க. லோகேஸ்வரன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக மல்லாகம், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி இ. த வினாசா பங்குபற்றுவார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணானந்தசர்மா ''திருமுறைகள் காட்டும் கிரியை மரபு'' என்ற தலைப்பிலும், பண்டிதை திருமதி பொன். பாக்கியம் ''திருமுறைகள் காட்டும் வாழ்க்கை நெறி'' என்ற தலைப்பிலும், பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி ''திருவாசகத் தேன்'' என்ற தலைப்பிலும், ஆசிரியர் ஆறு. திருமுருகன் ''திருமுறை கூறும் வாழ்வு'' என்ற தலைப்பிலும் பேருரை நிகழ்த்துவர்.

ஆலய 3 ஆவது குடமுழுக்கு பெருவிழா சிறப்பு மலர் வெளியீடும் விழாவில் இடம் பெறும்.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுக்கு பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி, யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ. சி. வேலாயுதம், சமூக ஜோதி கா. கணேசதாசன் ஆகியோர் பல்வேறு தலைப்புக்களில் உரையாற்றுவர். (உ-30)

## விடுதலையானவர் மீண்டும் கைது!

யாழ்ப்பாணம், மே 15

படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மீண்டும் படையினரால் கடந்த புதனன்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அல்வாய், முத்துமாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த ரட்ணசிங்கம் மணிவண்ணன் (வயது 26) என்பவரே இவ்வாறு படையினரால் கைது செய்யப்பட்டவராவார்.

மேற்படி இளைஞர் கடந்த வருட முற்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் கடந்த வருடம் நவம்பர் மாதம் அனுராதபுரம் நீதிமன்றத்தில் வைத்துப் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என இளைஞனின் கைது தொடர்பான முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## வடமராட்சியில் கோழி வளர்ப்பு ஊக்குவிப்பு

வடமராட்சிப் பிரதேசத்தில் கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு பத்துக் குஞ்சு பொரிக்க வைக்கும் இயந்திரங்களை ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம் வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கியுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள கோழிப்பண்ணையாளர்களில் ஐவர் தெரிவு செய்யப்பட்டு ஒருவருக்குத் தலா இரண்டு இயந்திரங்கள் வீதம் வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் சுழற்சி முறையில் அண்மையில் வழங்கியது.

கோழிக்குஞ்சுகளைப் பொரிக்க வைக்கும் இந்த இயந்திரங்கள் வழங்கும் வைபவம் வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் புலோலியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## இடைக்கால...

[முதலாம் பக்கத் தொடர்]

ஜனாதிபதியின் அரசியல் தீர்வுத்திட்ட முன் மொழிவுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படைத்திருத்தங்கள் தொடர்பான தமது பிரேரணைகளை வரதராஜப் பெருமாள் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மாகாணசபைக்கான தேர்தல் நடைபெறும் வரை, இப்போது நடைபெற்று வரும் அரச நிர்வாகங்களுக்கு ஓர் அரசியல் தலைமைத்துவத்தை வழங்கும் வகையாக வடக்கு - கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் உள்ளடக்கியதோர் ஏற்பாட்டைச் செய்யும்படி வரதராஜப் பெருமாள் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளார். அவ்விடயம் தொடர்பாகத் தாம் கவனத்தில் கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசியல் ரீதியானதோர் சுமுகமான நிலைமையை ஏற்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதியும் வரதராஜப் பெருமாளும் நீண்டநேரம் உரையாடினர்.

வரதராஜப்பெருமாளின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஜனாதிபதியவர்கள் மிகுந்த அக்கறை காட்டியதுடன் அதற்கான சிறப்பு ஏற்பாடுகளுக்காக உத்தரவிட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டின் இறுதியில் ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்த வரதராஜப் பெருமாள் பின்னர் இந்திய அமைதிப் படையினருடன் இந்தியாவுக்குச் சென்று அங்கு நீண்ட காலமாக அஞ்ஞாதவாசம் புரிந்தார்.

அண்மையில் கொழும்புக்கு வருகை தந்த அவர் பலதரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் அவரது நடவடிக்கைகள் குறித்து [illegible] உத்தியோகபூர்வமாக அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3-ரி)

## விவசாயக்குழுக் கூட்டம்

வலி. மேற்கு. மே 15

வலிகாமம் மேற்கு பிரதேச இணைப்பு விவசாயக் குழுக்கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 30 மணியளவில் நடைபெறவுள்ளது. பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் விவசாய, பிரதேச நிலைமைகள் தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (ஐ-173)

## வலி.கிழக்குபிரதேசசபையின்
# உறுப்பினர் கொலைக்கு புளொட் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 15

வலி. கிழக்கு பிரதேசசபையின் ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினர் முருகர் பூபாலசிங்கம்சுட்டுக் கொல்லப்பட்டதற்கு புளொட் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக புளொட்டின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வலி. கிழக்கு பிரதேச சபையின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் முருகர் பூபாலசிங்கம் அவர்கள் கொல்லப்பட்டமைக்கு புளொட் அமைப்பு கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது.

யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்களின் கொலைகளுக்கு அரசே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். யாழ். குடாநாட்டில் சுமுக நிலை தோன்றியுள்ளது என்பதை உலகுக்கு உணர்த்துவதற்காகவே தேர்தல் நடத்துவதற்குரிய சூழ்நிலை இல்லை என தமிழ் கட்சிகள் ஒரே குரலில் எடுத்துக்கூறிய போதும் அரசு தேர்தலை நடத்தியது. தேர்தல் முடிந்ததும் தெரிவான உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கக் கூடிய எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு அரசு திட்டமொன்றை அறிவித்தபோதும் நடைமுறைக்கு ஒத்துவராததன் காரணமாக அது செயலிழந்துள்ளது.

இதேவேளை தொடரும் இப்படுகொலைகள் குறித்து மனிதநேயம் கொண்டவர்களும், மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்களும் மௌனம் சாதிப்பது வேதனைக்குரியதாகும். அண்மையில் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியைகளுந்துறைச் சிறையில் தாக்கமுற்பட்டது குறித்தும் பாராமுகமாக விருந்த மனிதநேயம் மிக்கவர்களும் மனித உரிமை பேணுவோரும் மனித உரிமை மீறல்கள் எத்தரப்பில் இருந்து நடத்தப்பட்டாலும் பக்கச் சார்பில்லாமல் கண்டித்துக் குரல் கொடுப்பதன் மூலமே மனித உயிர்கள் அநியாயமாகப்பறிக்கப்படுவதைத்தடுத்து நிறுத்தி மனித உரிமைகளைப் பாதுகாக்க முடியும். கொலை செய்யப்பட்டுள்ள பூபாலசிங்கம் அவர்களுக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் அவர் பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சியினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈ. பி. ஆர். எல். எவ்வும் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், மே 15

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் முருகர் பூபாலசிங்கத்தின்கொலையை ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பும் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைஉறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச்சேர்ந்தவருமான முருகர் பூபாலசிங்கம் (54) நேற்று (13-5-99) மாலையில் நிராயுதபாணியாக தனது கடையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த சமயம் புலிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்வாறு தொடர்ந்து உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களை படுகொலைசெய்வதன் மூலம் மாற்றுக் கருத்துக் கொண்ட அரசியல் தலைமைத்துவம் உருவாவதை தடைசெய்வதும்உள்ளூராட்சி சபைகள் ஊடாக மக்களுக்கு கிடைக்கக் கூடிய அனுகூலங்களைக் கிடைக்காமல் செய்வதுமே இந்தப் படுகொலைகளின் நோக்கமாகும்.

போக்குவரத்து, நீதிமன்றங்களின் செயற்பாடு, சிவில் நிர்வாகம் ஆகியவற்றின் மீது தொடர்ச்சியாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுவரும் அதேவேளை மாற்று அரசியல் கருத்துள்ளவர்களை அழிப்பதும் தொடர்கதையாகத்தான் இருக்கின்றது.

உலகில் மிகமோசமான படுகொலைவாத குழுக்களை தவிர தமது சமூகத்தின் விடுதலைக்காகப் போராடும் எந்த அரசியல் இயக்கமும் இத்தகைய ஈவிரக்கமற்ற படுகொலைகளை மேற்கொள்வதில்லை.

தமிழ் அரசியல் கட்சிகளின் கண்டனங்கள் மாத்திரம் இந்தப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்திவிடாது. மக்கள் மத்தியிலிருந்து இப் படுகொலைவாதப் போக்குக்கு எதிராக எழும் எதிர்ப்பியக்கங்களே இப் படுகொலைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அவசியம். தமிழ் கட்சிகளும், தமிழ்மக்களும் இதனை மனங்கொள்ளல் வேண்டும். கொல்லப்படுபவர்கள் தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தானே என்று கருதி சம்பந்தப்பட்ட கட்சி தவிர்ந்த ஏனையோர் பாராமுகமாக இருந்துவிட முடியாது இந்தப் போக்கினால் பாதிக்கப்படப்போவது வெறுமனே தமிழ் அரசியல் கட்சிகள் மாத்திரம் இல்லை. இதனை கடந்தகால சம்பவங்கள் பலதும் நிரூபித்துள்ளமையை நினைவுபடுத்த விரும்புகிறோம். தமது தரப்பு நியாயங்களைத் துண்டுப்பிரசுரங்கள் மூலம் தெரிவித்துவிட்டால் யாரையும் சுட்டுக் கொல்லலாம் என்ற நிலைப்பாடு சரியானது தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

படுகொலை செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினரின் குடும்பத்தவர்களுக்கும் அவர் சார்ந்த கட்சிக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம் — என்று உள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் தமிழர்கள் கைதாவது தொடர்கிறது

## நேற்றும் ஐம்பது பேர் கைது!

கொழும்பு,மே15

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழர்களைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கை இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது.

ஜிந்துப்பிட்டி, ஆட்டுப்பட்டித்தெரு, ஐந்துலாம்படிச் சந்திப் பகுதிகள் உட்பட பல இடங்களுக்கு பஸ்களில் சென்ற படையினர் அங்கு சோதனை நடத்தினர்.

நேற்றுக்காலை முதல் இடம்பெற்ற தேடுதலில் கைதான 50 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் கடந்த சில தினங்களில் 200க்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-3-ரீ)

# போக்குவரத்து வசதி கோரி திருமலையில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,மே15

யாழ்ப்பாணம் திரும்புவதற்குப் போக்குவரத்து வசதியின்றி திருமலையில் நிர்க்கதி நிலையில் உள்ள ஆயிரக்கணக்கானவர்கள் நேற்று அங்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

திருமலைப் பிரதேச செயலா அலுவலகம் முன்பாகக் கூடிய அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்த பின்னர் ஊர்வலமாக ஆளுநர் அலுவலகம் சென்றனர்.

ஆளுநர் மேஜர்ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவுடன் அவர்கள் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணம் செல்வதற்காக சுமார் ஆறாயிரம் பேர் திருமலையில் பல மாதங்களாகக் காத்து இருப்பதாகவும் -

அவர்கள் பணவசதி இன்றிப் பெரும் கஷ்டநிலையில் உள்ளதாவும் -

ஆகவே உடனடியாகப் போக்குவரத்து வசதியைச் செய்ய வேண்டும் என்றும் -

அவர்கள் ஆளுநரிடம் கோரினர்.

உயர்மட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு போக்குவரத்து வசதி செய்து தருவதாக ஆளுநர் அவர்களிடம் உறுதி அளித்தார்.

அதன் பின்னர் அவர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்துக்குச் சென்று போக்குவரத்து வசதி செய்துதருமாறு கோரி மகஜர் ஒன்றைக் கையளித்தனர். (ஐ-3)

### 285 பட்டதாரிகளுக்கான

# நியமனக் கடிதங்கள் அடுத்த வாரம் வரும்

யாழ்ப்பாணம்,மே15

எண்ணாயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் நியமனம் பெறும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 285 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் அடுத்த வார முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும்.

அநுராதபுரத்தில் இன்று நடக்கும் வைபவத்தில் வழங்குவதற்காக சகல நியமனக்கடிதங்களும் அங்கு அனுப்பப்பட்டுள்ளன.

அங்கு வழங்கப்பட்ட.வை போக எஞ்சிய கடிதங்கள் நாளை மறுதினம் வரவு செலவுத் திட்டப் பணிப்பாளரினால் கொழும்பில் உள்ள யாழ். அரச அதிபரின் இணைப்பு அலுவலகத்தில் கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதங்களை யாழ்ப்பாணத்தில் வைத்துப் பெறுபவர்கள் குறுகிய காலப்பயிற்சி ஒன்றுக்குக் கொழும்புக்கு வரவேண்டும் என்றும் வரவு-செலவுத் திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-3)

# கிரிக்கெட்: முதல் ஆட்டத்தில் இலங்கை தோல்வி

லண்டன்,மே15

நேற்று இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமான உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதல் ஆட்டத்தில் தற்போதைய உலக சாம்பியனான இலங்கை இங்கிலாந்திடம் 8 விக்கெட்டுக்களால் தோற்றுப்போனது!

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து அணி 46.5 ஓவர்களில் இரு விக்கெட் இழப்பிற்கு 205 ஓட்டங்களைப் பெற்று வென்றது.

நேற்றைய ஆட்டம் மழை காரணமாக பல தடவைகள் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் இந்தியாவை எதிர்த்து தென்னாபிரிக்காவும் சிம்பாப்வேயை எதிர்த்து கென்யாவும் மோதவுள்ளன.

## ஜெயலலிதா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏப்ரலில் தமிழக அரசு மூன்று தனி நீதிமன்றங்களை அமைத்தது.

அவை அமைக்கப்பட்டதையே இந்திய உச்ச நீதிமன்றம் தற்போது அங்கீகரித்திருக்கின்றது.

இனி விசேட நீதிமன்றங்களில் விசாரணைகளை எதிர்நோக்குவதைத் தவிர ஜெயலலிதாவுக்கு வேறு வழியில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ-ரி)

## கொழும்பு வர்த்தக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தை அடுத்தே இக்குழு வன்னி செல்வதாகக் கூறப்பட்டது.

வர்த்தக சமூகப் பிரமுகர்கள் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சியின் ஓர் அங்கமாகவே இந்தக்குழு வன்னி செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக்குழுவில் சிங்கள, தமிழ், முஸ்லிம் வர்த்தகப் பிரமுகர்கள் அங்கம் வகிக்கின்றனர். (ஐ-3)


மாபெரும் மலிவு விற்பனை

CLEARANCE SALE

வைகாசி 20ஆம்திகதி வரை

நங்கையர் விருப்பத்திற்கேற்ற

இன்னும் 5நாள்கள் மட்டுமே!

நவநாகரிக பல்வகை.......

சாறிகள், பஞ்சாபிகள்

ஸ்கேட் அன்ட் பிளவுஸ

மற்றும்

டைட்டானிக், பாபிறா, ஜோஜோ

பட்டசில்க், இன்ரகூலர், பலெஸ்

சீத்தை (இந்தியா, சைனா) துணிவகைகள்

ஆடவர், சிறுவர்களுக்கேற்ற

றெடிமேட் ஆடைகள், சேட்டிங், சூட்டிங்

சேட், T சேட், பெனியன்கள்

சாறங்கள், வேட்டிகள்

மற்றும்

ஆடைவகைகளில் எது வேண்டுமோ அவை அனைத்தையும் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றார்கள்.

ரம்பியால் சில்க்ஸ்

121, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

(சி-7505)



BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்.

பிரிவு 2 O/L DAY CLASS

எமது வழமையான 'SUPER GRADE" ஆசிரிய குழு

ஆரம்பம்: 17-05-99 திங்கள் காலை 8 மணி

(65761)



விக்னா

கல்வி நிறுவனம்

2001 கலை/ வர்த்தகப் பிரிவு

சனி, ஞாயிறு 8மணி

ACC.- திரு.பாலவாசன்

ECC.- திரு. விக்கி

COM.- திரு.நந்தீஸ்

LOG. - திரு. சயந்தன

TAM. - திரு. லிங்கம்

H/C. - திரு.பத்மராஜா

GEO. - செல்வி நிர்மலா

HIS. - உங்கள்ஆசிரியர்

CHI. - திரு. வசந்தன்

POL.SC.- திரு.றொபின்சன்

I/Q.- திரு. அன்ரன்

DRAM.- திரு. மதி

(65765)



புதிய 30 மாணவர்களுக்கான அனுமதி

A/L 2000

கணக்கீடு

பங்குடமை

நாளை ஆரம்பம்

பிரிவு I - 1 மணி

II - 12 மணி

D.M.I

366, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7514) D.SAM


## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

**சந்திரபிரபா லோகஞானம்**

(உப அஞ்சல் அதிபர், யாழ். பல்கலைக்கழகம்)

தோற்றம்: 31-10-1956

மறைவு: 15-02-1999

*இறவாத எம் இனிய அன்பே! தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்*

- குடும்பத்தினர்.

திருநெல்வேலி.

(65715)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**சுப்பிரமணியம் தனபாலசிங்கம்**

**(சந்திரன்)**

(உரிமையாளர், சிறி அம்பாள் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி)

*அன்னையின் மடியில்:* 22-07-1956

*ஆண்டவன் அடியில்:* 11-05-1998

ஆண்டொன்று ஆனாலும அடங்காத உன்நினைவால்
ஈண்டு நாம் அழுகின்றோம் எம்முயிரே எங்கு போனாய்?
கண்கண்ட தெய்வமெனக் கைகொடுத்துதவி நின்றாய்
விண்கண்ட தெய்வமென விரும்பித்தான் சென்றனையோ?

வணிகர்களுக்கு இலக்கணமாய வாழ்நாள் வாழ்ந்தவனே

பணிந்தாலும் உன்னைப்போல்
அரவணைக்க யாரெமக்கு?
அணையாத தீபமென அவதரித்த பிள்ளை மூன்றும்
அப்பாவைக் காணாது அந்தரித்தல் காண்பாயப்பா?

சித்திரைப் பௌர்ணமியில் சிவபதம் சேர்ந்தவனே
இத்தரைக்கு நீயுமொரு ஒளிகொடுக்கும் சந்திரனே
சிறி அம்பாள் கடையோடு திருநெல்வேலி எல்லாம்
வெறிச்சோடிப் போச்சுதையா தனபாலா நீயின்றி

ஆயிரம் ஆயிரம் இன்பங்கள் தந்தாய்
காவியம் எனவே காலத்தில் உயர்ந்து நின்றாய்
தாயோடு தந்தை இல்லத்தாள் உடன்பிறப்பு
சேயோடு யாபேரும் வேண்டினோம் உனக்காக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி: **த.கலாநிதி**

பிள்ளைகள்: **துவார்காஷ், ஜெயகௌதன், பிரசாந்த்.**

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

(65718)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்.
பொது சன நூலகம்
15 MAY 1999
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சஞ்சீவி
சஞ்சிகை
சஞ்சீவி 15-05-1999

வெளிநாடுகளிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
மூக்குக்கண்ணாடிகளை குறைந்த
விலையில்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
கண் பரிசோதித்து
கண்ணாடிகளை வழங்குபவர்கள்
துஷா ஒப்ரிசன்ஸ்
544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம.
(சி-7438)

## கருத்துக் கலசம்

மயூரா

### மூல வேரை அறுக்காதீர்!

'...ஆலைகள் வைப்போம்; கல்விச் சாலைகள் வைப்போம்; ஓயுதல் செய்யோம்; தலைசாயுதல் செய்யோம்...' -பாரதியார்-

அறிவு மனிதனை உண்மையான மனிதனாக்கும் அருங்கொடை. அறிவுக்கு அடிப்படையும் அத்திவாரமும் கல்வி. குரு-சிஷ்ய மரபில் - திண்ணைப் பள்ளிக்கூட முறையில் - கல்வி பரப்பப்பட்ட காலம் மறைந்து அருகிப்போயிற்று. பாடசாலை என்னும் கல்விச்சாலையே இந்த நூற்றாண்டின் அறிவொளி பரப்பும் நிலையமாக நிலைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தார் கல்வி அறிவு பெற்று அதில் சிறப்புற்று விளங்குவதற்கு ஆதாரமாக இருந்தவை பாடசாலைகள். மிஷனரிகள் நிறுவிய பாடசாலைகள் எமது பிரதேச மக்களை கல்விப் பாதையில் முன்னேற வைத்தன. அவற்றுடன் கிராமத்துக்கு கிராமம் நிறுவப்பட்ட "சைவப் பள்ளிக்கூடங்கள்" குடாநாட்டு மக்களின் கல்விக்கும், பண்பாடு சார்ந்த ஒழுக்கத்துக்கும் நிலைக்களன்களாக விளங்கின. இன்று பெரிய கல்லூரிகளாக உயர்ந்து நின்று கல்வி ஒளி பரப்பும் கல்விச்சாலைகளில் பல அன்றைய சிறிய ஓலையால் வேயப்பட்ட பள்ளிக்கூடங்களாக ஆரம்பிக்கப்பட்டவையே.

கல்வியின் அவசியத்தையும் மேன்மையையும் உணர்ந்த எமது முன்னோர்கள், அவர்களில் பெரியோர்கள், பரோபகாரிகள் பலர் இப் பாடசாலைகளின் மூலகர்த்தாக்களாகத் திகழ்ந்தனர் என்பதனை அவற்றின் வரலாறுகள் கூறும். அரசாங்க உதவி இல்லாத காலத்தில் அந்தந்தக் கிராமத்து மக்கள் தமது சொந்த நிலத்தில், சொந்தப்பணத்தில் நிறுவிய பள்ளிக்கூடங்களே அந்தந்தக் கிராமத்துப் பிள்ளைகளுக்குக் கல்வி அறிவூட்டின. இவற்றைப்பெரிய கல்வி விருட்சமாக வளர்த்துப் பராமரிக்க உரமாகவும் நீராகவும் நின்று உதவியது "இந்து போர்ட்" என அழைக்கப்படும் சைவ வித்தியாவிருத்திச் சங்கம்.

யாழ்ப்பாணத்தவர்களைக் கல்வியில் முன்னுக்குக் கொண்டு வந்த, அதனை அவர்களின் பிரதான சொத்தாக்கி பெருமைபூத்த இப்பாடசாலைகளில் பலவும் இப்போது மூடப்படுவது அத்திவாரம் அடியோடு பெயர்க்கப்படுவதற்கு ஒப்பானதாகும்!

புதிய கல்வித் திட்டம் என்ற பெயரில் - பல பாடசாலைகளை ஒன்றிணைப்பது என்ற திட்டத்தில் - குடாநாட்டில்உள்ள பல சிறிய பாடசாலைகளை - அன்றைய கிராமத்துக் கல்விக் கோவில்களை - மூடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம்; கருகத் திருவுளமோ?' என்று பாரதி பாடியது கூட இன்றைய கல்வி அதிகாரிகளின் மனங்களைத் தொடவில்லை. கொழும்பு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது; நாம் அதனைச் செயற்படுத்தாமல் இருக்க முடியுமா? என்ற கேள்வியுடன் எங்கள் கல்விப் பாரம்பரியத்தின் மூலவேரை வெட்டி எறியப் புறப்பட்டு விட்டார்கள்! தாமும் கிராமத்துச் சிறிய பாடசாலைகளில் மண்ணிலும், சிலேட்டிலும் "அ" எழுதப் பழகியதை இவர்கள் மறந்து போனார்களே என்பது கவலைக்குரியது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதைப் பார்த்துக்கொண்டு எமது மக்கள் வளாதிருக்கிறார்களே என்பது இந்த மண் கோழையாகி விட்டது என்ற வேதனைக்குரிய நிலையையே மௌனமாகச் சொல்கிறது!

இன்றைய கல்விமான்களும், சமூக நலன் விரும்பிகளும் கண்ணைமூடிக் கொண்டிருப்பது தகுமா?

# 14 ஆண்டுகளின் முன் குமுதினிப் படகில் நிகழ்ந்த கோரப் படுகொலைகள்!

சரியாக பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னர்...
1985 மே 15ஆம் நாள்...

நெடுந்தீவு வாழ் மக்களின் வரலாற்றில் என்றும் மறக்க முடியாத கோர நிகழ்வின் கொடூரநாள். குமுதினிப் படகில் பயணம் செய்த இத்தீவக மக்கள் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு வெட்டியும், கொத்தியும், குதறப்பட்டு, முப்பத்திமூன்று பேர் கொல்லப்பட்டும் மேலும் முப்பதுக்கு மேற்பட்டோர் படுகாயத்துடன் உயிர்தப்பியும் வந்த பயங்கரச் சம்பவம் நிகழ்ந்து இன்றுடன் பதின்நான்கு ஆண்டுகள் நிறைவாகின்றது. இன்றும் இச்சம்பவம் இத்தீவக மக்களின் மனங்களில் ஈர நினைவாக நின்று வருத்துகின்றது.

எக்கொடூரங்களையும் எப்பொழுதும் சந்தித்திராத இம்மக்களிடத்தே அன்றையநாள் மிக அமைதியாகவே புலர்ந்தது. வழமைபோல் காலை 7 மணிக்கு மாவலித்துறைமுகத்திலிருந்து குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட "குமுதினி"யாள் அன்றும் தயாராகவே நின்றாள். பல்வேறு தேவைகளுக்காகப் பயணம் செய்ய வேண்டியவர்கள் துறைமுத்துக்கு வந்து சேர்ந்தனர். உத்தியோகத் தேவைக்காக, வைத்தியத் தேவைக்காக என்று பல்வேறு தேவைகளுக்காக நாளாந்தம் பயணம் செய்யும் இத்தீவக மக்களில் அன்றைய நாளை பயண நாளாகத் தெரிவு செய்தவர்கள் இவர்கள். காலை போய் மாலை வரலாம் என்ற எண்ணத்துடனோ, உற்றார் உறவினருடன் தங்கி வரலாம் என்ற எண்ணத்துடனோ பயணத்துக்குத் தயாராக வந்து நின்ற இம் மக்களின் முகங்களில் மகிழ்ச்சியைத் தவிர வேறு ஒன்றையும் காணமுடியவில்லை. எதிரே நீலத்திரையாக, அமைதியாக விரிந்து கிடந்த கடலும், அதில் தேரென நகர்ந்து செல்லத் தயாராக நின்ற குமுதினியாளும், பயணம் செய்யக் காத்திருந்தோர் மனதில் ஆனந்தத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லைத் தானே! நடுக் கடலில் இவர்களுக்காய் "யமன்விடு தூதுவர்கள்" காத்திருந்ததை அவர்கள் எவ்வாறு உணர்ந்திருக்க முடியும்?

குமுதினியாள் புறப்பட ஆயத்தமானாள். மக்கள் தமது பொதிகளுடன் ஏறி இருக்கைகளில் அமர்ந்தனர். இருக்கைக்கு மேலதிகமானோர் வெளிப்புறக் கூடாரங்களில் முன்னும் பின்னும் ஏறி அமர்ந்துகொண்டனர். படகு புறப்பட்டது. வழியனுப்ப வந்தோர் திருப்தியுடன் வீடேகினர்.

மாலை 5 மணிக்கு மீண்டும் குமுதினியாள் நெடுந்தீவுக்கு வந்து சேர வேண்டும். வழமை போல் வரவேற்க மக்கள் கூட்டம் துறைமுகத்தில் காத்திருந்தது. தினமும் படகு வரும் நேரம் துறைமுகம் களைகட்டும். உறவினரை வரவேற்க ஒருகூட்டம், வெளியூர் புதினங்களறிய,பொழுது போக்க என ஒரு பெருங்கூட்டம்.... அன்றும் இவர்கள் கூடினர். நேரம் கடந்து கொண்டிருந்தது. கண்களை அகலவிரித்துக் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடலைப் பார்த்து ஏங்கி நின்றனர். ஏதோ நடந்து விட்டது. ஒரு வேளை படகு பழுதடைந்திருக்கலாம். அல்லது வேறு ஏதும் பிரச்சினைகளோ என்று எண்ணினரே ஒழிய, காலையில் புறப்பட்டது கரைசேரவில்லையோ நடுக்கடலில் அவலம் ஏற்பட்டு விட்டதோ என்று யாரும் சற்றும் எண்ணியிருக்கவில்லை.



- ஆதவன் -

படகு வரவில்லையே என்ற ஓர் ஏக்கம் மக்கள் மனதில் இருந்ததே தவிர அன்றைய இரவுப் பொழுதும் அமைதியாகவே கழிந்தது. அதிகாலை 'வெரித்தாஸ்' வானொலி விளம்பிய அவலச் செய்தியே ஊரை அல்லோல கல்லோலப்படுத்தி அவலப்பட வைத்தது." நெடுந்தீவுப் படகுப

( XV ஆம் பக்கம் பார்க்க)

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்

## சில குறிப்புகள்

(1) இருபதாம் நூற்றாண்டு முடிவடைய இன்னும் ஒன்றரை ஆண்டுகளே இருக்கும் வேளையில், இந்த நூற்றாண்டில் உலக இலக்கியத்தின் செல்நெறி பற்றி நோக்குவது பயனும் சுவையும் தருவதாயமையும்.

இதற்கு முந்திய மற்றெந்தக் காலத்தையும் விட, இந்த நூற்றாண்டில், விஞ்ஞான, தொழில் நுட்ப, அரசியல் துறைகளில் உலகு காண நேர்ந்த மாபெரும் புரட்சிகளும் மாற்றங்களும் உலக இலக்கியத்தின் செல்நெறியைப் பெருமளவில் பாதிப்புறச் செய்தமை இயல்பானதே.

உண்மையில் இந்த வளர்ச்சிகளின் பலனாகவே 'உலக இலக்கியம்' என்ற பொதுப் பெயரில் மொழி, தேச வாரியாக இலக்கியங்களைப் பார்ப்பதைக் கடந்து - நாம் நோக்கவும் முடிகிறது. இதற்கு முக்கியமாக, பின்வரும் காரணங்களைச் சுட்ட முடியும்.

1) மேற்குறித்த மாற்றங்களும் வளர்ச்சிகளும் உலகை நெருக்கமுற வைத்தமை;

2) இவற்றின் இன்னொரு விளைவால், மானுட அனுபவங்கள் பொதுத்தன்மை கொள்ள நேர்ந்தமை;

3) உலக மாந்தரிடையேயான கல்வி வளர்ச்சி வீதம் அதிகரித்தமை;

4) மொழி எல்லைகளைத்தாண்டி, இலக்கியப் படைப்புக்கள் விரைவாகவே பரவுவதற்கு மொழிபெயர்ப்பு முயற்சிகள் உடனுக்குடன் உதவியமை;

இந்த நூற்றாண்டின் மிக முக்கிய நிகழ்வுகளில் ஒன்றும், அதன் பின் ஏற்பட்ட பல நிகழ்வுகளுக்கு உந்து சக்தியாக அமைந்ததுமான ஒன்று, 1917இல் ருஷ்யாவில் இடம் பெற்றது. அந்த ஒக்ரோபர் சோஷலிஸப் புரட்சியானது, சோவியத் அரசியல்முறை, சோவியத் தேசம் என்பவற்றோடு, 'சோவியத் இலக்கிய'த்தின் பிறப்பிற்கும் காரணமாயமைந்தது.

எனினும் உலகையே குலுக்கிய அந்த மாபெரும் புரட்சி இடம்பெறுவதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பே - அதாவது அந்தச் சுறாவளி மையங்கொள்ள முனைந்த வேளையில் - மாக்ஸிம் கோர்க்கியின் 'தாய்' நாவல் வெளியாயிற்று. ஏற்கனவே தமது பல படைப்புக்கள் மூலம் தம்மை ஒரு தலைசிறந்த எழுத்தாளராக நிறுவியிருந்த கோர்க்கியின் கலையாற்றல் அவ்வேளையில் முதிர்ச்சியுற்ற நிலையிலிருந்தது.

உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டெழுந்த 'தாய்', ஒரு விதத்தில் சரித்திரப் பதிவாகவும் அமைந்தது. அடியடியாக அடக்குமுறைகளுக்கும் நிட்டூரங்களுக்கும் முகங்கொடுக்கும் அமைப்பில் வந்த தாய், புதுவழி நாடிய புரட்சிக்காரனான தன் மகனுடன் இணைந்து போராடுகின்ற கதையை அந் நவீனம் கூறிற்று. ருஷ்ய இலக்கியத்திலும் சோவியத் இலக்கியத்திலும் மட்டுமன்றி முழு உலக இலக்கியத்திலுமே தாக்கமேற்படுத்திய படைப்பாகவும் 'தாய்' குறிப்பிடப்படுகிறது. சோவியத் இலக்கியத்தினதும், அதன் மையவிசையாயமைந்த 'சோஷலிஸ யதார்த்த வாத'த்தினதும் பிதாமகராகக் கொள்ளப்படுபவர் கோர்க்கி.



மாக்சிம் கோர்க்கி

புரட்சியை தவிர்க்க முடியாத ஒன்றாகக் கருதி, அதற்காகக் காத்திருந்து, அதனை வரவேற்றவர் இன்னொரு மூத்த எழுத்தாளரான அலெக்சாந்தர் ஸெர.்.பிமோவிச். அவர் எழுதிய 'இரும்பு வெள்ளம்' நாவல், புரட்சி பற்றி வெளியான ஆரம்பப் படைப்புக்களிலொன்றாகவும், பின்னர் எழுந்த பல ஆக்கங்களுக்கு ஆதர்சமாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஆனால் இவற்றிலும் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவை, இலட்சிய வேகமும், புரட்சியில் தம்மை இணைத்துக் கொண்டதால் ஏற்பட்ட போராட்ட அநுபவங்களும் கொண்டு எழுதப் புறப்பட்ட ஒரு புதிய தலைமுறையினரின் படைப்புக்களாகும். புரட்சி வெற்றி பெற்றகையோடு - இருபதுகளின் தொடக்கத்திலிருந்து - இவை தோற்றம் பெறலாயின.

நிக்கலாய் ஒஸ்த்ரோவ்ஸ்கி எழுதிய 'வீரம் விளைந்தது' திமித்ரி ∴புர்மானவ் எழுதிய 'சப்பாயெங்' மற்றும் அலெக்சாந்தர் ∴பதெயெவ் எழுதிய 'முறியடிப்பு' போன்றவை இம் முனைப்பின் சிறந்த உதாரணங்களாகவும் செம்மை இலக்கியங்களாகவும் அமைந்தன.

ஒஸ்த்ரோவ்ஸ்கியின் வீரமிகு வாழ்வையே அடிப்படையாகக் கொண்டெழுந்த 'வீரம் விளைந்தது' நாவல் உலகில் நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளில் பெயர்க்கப்பட்டுவரும் வரவேற்பைப் பெற்றது. 'புரட்சியின் ஆன்மாவையே படம் பிடித்த ஆக்க'மெனப் புகழ் பெற்றது மட்டுமன்றி, பின்னாளில், இரண்டாம் உலகப்போரின் போது நாஸிப் படைகளுக்கு எதிராகப் போரிட்ட சோவியத் வீரர்களுக்குப் புத்துவீறும் புதுத்தெம்புமளித்த மகத்தான இலக்கியமெனவும் போற்றப்பட்டது.

- சாந்தன் -

ஒக்ரோபர்ப் புரட்சி பற்றிப் பேசுகிற இலக்கியங்களில் தனியிடம் வகிப்பது, நோபல் பரிசு பெற்ற எழுத்தாளரான மிஹயீல் ஷோலக்கவ் எழுதிய 'தோன் நதி அமைதியாக ஓடுகிறது' என்னும் நாவல். இதனை நாவலென்பதிலும் பார்க்க 'வசன காவியம்' என்பதே பொருந்தும். தமது அநுபவ மெய்மை மற்றும் கலையாற்றல் - இவற்றின் பலத்துடன் ஷோலக்கவ் படைத்த 'தோன்நதி', மனித வாழ்வின் அழகுகளையும் அவலங்களையும், அக - புறப் போராட்டங்களையும் உயிர்த்துடிப்புடன் படம் பிடித்தது மட்டுமன்றி, போர் என்கின்ற பிரளயத்தையும், மனித இருப்புக்களையே அசைக்கும் அந்த எரிமலைக் குமுறல்களையும் எடுத்துக் காட்டியது. முழுமையான மானுடத்தைத் தரிசிக்க வைப்பதால் - அதில் வெற்றியும் பெறுவதால் - 'தோன்நதி' ஏனையவற்றிலிருந்து உயர்ந்தே நிற்கிறது. ஏழத்தாழ இரண்டு தசாப்தங்களில் நிகழ்கின்ற கதை அது. நான்கு பாகங்களாக வெளிவந்தது.

(சிந்தனை தொடரும்)

### குறிப்புகளுக்கு முன் ஒரு குறிப்பு

ஒரு நீண்ட வாசிப்பின் நினைவுப் பதிவுகள் இவை.

இன்றைய சூழலின் நிர்ப்பந்தத்தாலும், ஆங்கிலம் அந்நியமாக்கப்பட்டு விட்டதால் அடைபட்டுப்போன வாய்ப்புக்களாலும், உலக இலக்கிய முனைப்புகளுடனான பரிச்சயங்களும் சாத்தியப்படவியலாதுபோன-இலக்கிய ஆர்வமிக்க - இளந்தலைமுறையொன்றிற்கு ஓரளவாவது பயன்படுமென்ற நம்பிக்கையில் இவை இங்கே எழுத்திலும் பதியப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசகு பிசகான வீடியோ மனைவிக்குக் காட்டலாமா?

**சங்குவேலி. ஆர்.மதனா.**
படங்களுக்குக் 'கலர்' இருப்பது போல பேச்சுக்களுக்கும் கலர் இருக்கின்றது என்கின்றார்களே. உண்மையா?

☺ **ஏன் உண்மையில்லை? பக்கத்து வீட்டுக்காரர் குடித்து விட்டு பச்சை பச்சையாகப் பேசுகின்றாரே! (வித்துவான் பதிலும் பச்சையாக இருப்பதாக சில வாசகர்கள் முணுமுணுப்பது உங்கள் காதுகளில் விழுவதில்லையா?)**

❁ ❁ ❁

**மந்திகை. மலர்மகள்.**
வீட்டில் மகளுக்குத் தனி ரியூஷனுக்கு ஏற்பாடு செய்யலாமா?

☺ **நன்றாக ஆராய்ந்து ஏற்பாடு செய்யுங்கள். சில ஆசிரியர்கள் தங்களுக்குத் தெரிந்த எல்லாப் பாடங்களையும் சொல்லிக் கொடுத்து விடுகிறார்களே!**

❁ ❁ ❁

**மானிப்பாய். சந்திரா.**
மலா அழகுடனும் தேனுடனும் இருப்பது ஏன்?

☺ **வண்டைக் கவர்ந்து அதனுதவியுடன் இனவிருத்தியைத் தொடங்குவதற்குதான்.**


❁ ❁ ❁

**வேலணை. ப.கண்ணன்.**
இசகுபிசகான படங்கள் வீடியோ கசெற்றில் வெளிவருகின்றனவே. மனைவிக்குப் போட்டுக் காட்டலாமா?

☺ **சவாரிக் குதிரைக்கு மதுபானம் பருக்குவதா?**

❁ ❁ ❁

**சுதுமலை. சி.சயந்தன்.**
வித்துவான் ஸார்! குடாநாட்டில் உலகக்கிண்ணக் கிரிக்கெட் களைகட்டிவிட்டதா?



☺ **அநேக வீடுகளில் களை கட்டியுள்ளது. அங்கு கட்டியுள்ள அன்ரனாக்கள் உயர, உயரப் போவதைப் பார்த்தால் அவற்றில் ஏறி நின்று பார்த்தாலே உலகக் கிண்ணத்தை நேரடியாகவே பார்க்கலாம் போலிருக்கிறது.**


❁ ❁ ❁

**மானிப்பாய். அ.சுஜிதரன்.**
வித்துவானே! சமீப காலமாக வெளிவரும் திரைப்படங்களின் துள்ளிசை கால்களை ஆட்டம் போட வைக்கின்றனவே?

☺ **ஏன் கைகளை ஆட்டம் போட வைக்கவில்லையா?**

❁ ❁ ❁

**மானிப்பாய். கௌசல்யா.**
மோட்டார் சைக்கிள் ஓடும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?



☺ **மிகவும் நல்லவர்கள். அவர்கள் திருகுவது - ஆக்ஸிலேட்டரை; கணவன் காதை அல்லவே! அவர்கள் உதைப்பது - கிக்கரை; கணவனை அல்லவே!**

❁ ❁ ❁

**உரும்பிராய். சி.சுமதி.**
பச்சையாகப் பதில் தரும் வித்துவான் அவர்களே! தாங்கள் வருகின்ற வருடம் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி பெறுவதாகக் கனவு கண்டேன். அது பலித்தால் என்ன நடக்கும்?




☺ **பகல் கனவு பலிப்பதில்லை தங்காய்!**

❁ ❁ ❁

**கைதடி. ஈ.கேஜினி.**
வித்துவதன் ஐயா! ஆண்களில் இராமன் கிடையாதா?

☺ **ஏன் இராமன் ஆண் இல்லையா?**

❁ ❁ ❁

**மல்லாகம். திருமதி.எம்.கேதீஸ்.**
ஓர் ஆண் எப்போது தன்னைப் புரிந்து கொள்கிறான்?

☺ **முளைக்கும் போதுதான் - மீசையைச் சொன்னேன்.**

❁ ❁ ❁

**மாதகல். ந.சத்தியா.**
பத்திரிகைகள் வாயிலாக சமூகத்தைக் கெடுப்பவர்கள் குறித்து.......?

☺ **எனது தலைக்கு சரியாக விழுவதற்கு வீசப்படும் தொப்பி போல அல்லவா இக் கேள்வி உள்ளது?**

❁ ❁ ❁

**யாழ்ப்பாணம். செ.திலீபன்.**
வித்துவானே! உம்மை வாஜ்பாய்க்கு ஒப்பிடும் வாசகர்கள் குறித்து....?

☺ **அவர் கட்டைப் பிரமச்சாரி. ஆனால் கொடுத்து வைத்தவர். நான் கட்டிய சம்சாரி. அதனால் பரிதாபத்துக்குரியவன்.**

❁ ❁ ❁

**மடத்தடி. பா.சத்தியசுதன.**
சமைப்பதில் சமர்த்தர் ஆண்களா? பெண்களா?

☺ **சமைப்பது ஆண்கள்; சமைவது பெண்கள்.**

❁ ❁ ❁

# வித்துவான் பதில்கள்

**பண்ணாகம். எஸ்.பிரதீபன்.**
காதல் அழகானதா? அறிவானதா?

☺ **அழகு அவரவர் பார்வையைப் பொறுத்தது; அறிவு அவரவர் சிந்தனையைப் பொறுத்தது. ('காதலுக்குக் கண் இல்லை என்றும், 'காதல் போதை தருவது என்றும்' கூறுவதைப் பார்த்தால் அழகும் அறிவும் அதற்கு இல்லை என்றுதான் படுகிறது.)**

❁ ❁ ❁

**மீசாலை. ரி.சுமே.**
'முந்திரிக்கொட்டை' என்று பேசுகின்றார்களே, அதன் அர்த்தம் என்னவோ?

☺ **ஏதோ தான் பெரிய ஆள் என்பது போல முந்திரிகைப் பழத்தை இடித்துக் கொண்டு முன்னே நீட்டிக் கொண்டிருக்கும் அதன் கொட்டை. அவ்வளவுதான்! அதற்கு வேறு அர்த்தம் பண்ணிவிடாதீர்கள்.**

❁ ❁ ❁

**புத்தூர். ப.வைத்தி.**
மனைவியைத் தவிர இன்னொருத்தியை வைத்திருந்தால் அது சின்னவீடு. பலரை வைத்திருந்தால்.....?

☺ **'சின்னக் குப்பம்' என்று சொல்லலாமா?**

❁ ❁ ❁

**நாலர்மடம். ம.தேவன்.**
'கைக்கெட்டியது வாய்கெட்டவில்லையே' என்ற பழமொழிக்கு என்ன பொருள்?

☺ **சில பழமொழிகள் பிரமச்சாரிக்கு விளங்காது. சம்சாரிக்கு மட்டுமே விளங்கும்.**

❁ ❁ ❁

# 'ராகிங்' குறைந்துவிட்டதா?

**சங்கானை. க.கோனா.**
சீதனத்துக்காகத் திருமணம் செய்பவரை சாமி மன்னிக்குமா?

☺ **சாமி மன்னிக்கலாம். ஆனால் நிச்சயமாக மாமி மதிக்கமாட்டார்.**

❁ ❁ ❁

**மனிப்பாய். எஸ்.பிறேம்.**
வித்தூ! உமக்கு மாலைக்கண்ணாமே! உண்மையா?

☺ **அதுசரிதான். எனக்குப் பச்சையாகப் பேசுதல், மஞ்சள் பத்திரிகை வாசித்தல், நீலப்படம் பார்த்தல், சிவப்பு விளக்குக்குப் போதல்..... முதலிய ஒன்றும் தெரியாது.**

❁ ❁ ❁

**கைதடி. ஏ.கதிரவன்.**
'தாரமும் குருவும் தலைவிதிப்படி' என்கின்றார்களே! உங்களுக்கும அதே அனுபவம்தானா?

☺ **தாரமும் குருவும் என்னைத் தங்கள் தலைவிதி என்றல்லவா அர்ச்சனை செய்கின்றார்கள்?**

❁ ❁ ❁


**அச்சுவேலி. மதிநிதன்.**
'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'- இந்தப் பழமொழியை சற்று வித்தியாசமாக விளக்குங்களேன்.... பிளீஸ்......!

☺ **மனித உயிர் வாழ்வின் உற்பத்தியை விளக்கும் அற்புதமான தத்துவம் இது.**

❁ ❁ ❁

# பேச்சுக்கு 'கலர்' உண்டா?

**தட்டாதெரு. இ.பஞ்சு.**
வித்துவானே! ஒலிபெருக்கியில் பொருத்தும் கோனில் ஆண் 'கோன்', பெண் 'கோன்' என்று இருக்கிறதாமே! உண்மையா?




☺ **இது கவுண்டமணி, செந்தில் ஜோடியின் பகிடி காணும்!**

❁ ❁ ❁

**கொக்குவில். நா.பிறேம்குமார்.**
பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' குறைந்து விட்டதாமே! உண்மையா?

☺ **நாய்வாலை நிமிர்த்துவது அவ்வளவு சுலபமல்ல. ('ராகிங்' என்றதும் நாய் பற்றிய நினைவுதான் வருகின்றது. கோபிக்காதீர்கள்!)**

❁ ❁ ❁

**மட்டுவில்கிழக்கு. நா.றஞ்சிதா.**
உங்கள் மகனை நான் மாப்பிளை கேட்டு வரலாமா?

**உங்கள் பேர்த்திக்கா?**

❁ ❁ ❁

**மல்லாகம். மனோ.**
திறப்பில்லா பூட்டு உண்டா?

☺ **ஏன் இல்லை. பெண்களின் வாய் உள்ளதே. பூட்டவே முடியாத அந்தப் பூட்டுக்கு திறப்பு எங்கே இருக்கப் போகிறது?**

❁ ❁ ❁

கடிவாளம் குதிரைக்கு மட்டுமா?

☺ **ஏன் கணவன்மார் இல்லையா?**

❁ ❁ ❁

**கோண்டாவில். ச.நிதாகரன்.**
பெண்கள் தலை நிறையப் பூ வைத்துக் கொள்ளாமா?

☺ **முதலில தலையில் முடி வளர விடட்டுமே. பிறகு பூ வைப்பது குறித்து யோசிக்கலாம்.**

❁ ❁ ❁

**சங்குவேலி. றொஸ்டன்.**
வித்துவானே! உலகக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் தொடரில் டெண்டுல்கரைத் தெய்வம் போல நம்புகின்றேன். ஜொலிப்பாரா?




☺ **தெய்வம் பக்தனைச் சோதிப்பதுண்டு. ஆனால் கைவிட்டு விடுவதில்லை. டெண்டுல்கர் ஒரு வைரம். எனவே அவர் ஜொலித்துத்தானே ஆக வேண்டும். அவர் ஜொலிக்கிறாரா அல்லது இத்தோடு ஒளிக்கிறாரா பார்ப்போம்!**

❁ ❁ ❁

பிரமச்சாரிக்கு வரைவிலக்கணம் கூறுங்களேன்?

☺ **காலையில் படுக்கையில் இருந்து எந்தப் பக்கத்தாலும் எவன் ஒருவனுக்கு கீழே இறங்கக் கூடிய வசதிகள் இருக்கின்றதோ அவன் பிரம்சாரி.**


❁ ❁ ❁

**குருநகர். இன்பராஜ்.**
வித்துவானே! உமது முடிக்கு என்ன'ஷம்போ' வைக்கின்றீர்? இவ்வளவு நீட்டாக இருக்கின்றது.

☺ **'ஷம்போ' எதுவும் தடவுவதில்லை. அதனால் தான் நீட்டாகவும் 'நீற்'றாகவும் இருக்கின்றது.**

❁ ❁ ❁

**மல்லாகம். ஜெ.மனோகரி.**
ஜெயலலிதாவை நம்பிக்கெட்ட சோனியா பற்றி தாங்கள் நினைப்பது என்ன?



☺ **நல்ல மாட்டுக்கு ஒரு சூடு! சோனியாவுக்குப் புரியாவிட்டால் ஆண்டவன் விட்ட வழி.**

❁ ❁ ❁

பிள்ளை விரும்புவது சுதந்திரத்தையா?கட்டுப்பாட்டையா?

☺ **சுதந்திரத்துடன் கூடிய கட்டுப்பாட்டை.**

❁ ❁ ❁

**வலி.வடக்கு. திருமதி.ஜெகதீஸ்.**
'அவல வாழ்வு' - விளக்குக?

☺ **யாழ். மக்களின் வாழ்க்கை.**

❁ ❁ ❁

**மீசாலை. கார்த்தி.**
எனது மன மேடையில் ஒருத்தி பகலிரவாக நடமாடுகின்றாள். அவளை என்ன செய்யலாம்?

☺ **மனமேடையில் வருபவளை மண மேடையில் சந்தியுங்களேன்!**

# சமைப்பதில் சமர்த்தர் ஆண்களா பெண்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாவியா? விடத்தல்தீவா? படையின் அடுத்த இலக்கு எது?




வன்னியில் 'போர்க்கோஷம் -II' .ராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து படையினர் வடமேற்கே தொடர்ந்து நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நடவடிக்கை மூலம் கடந்த 7ஆம் திகதி படையினர் பெரியமடுப் பகுதிவரை முன்னேறியதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. ஆனால் படையினர் அப்பகுதியில் எவ்வளவுதூரம் முன்னேறினர் என்பது குறித்து முரணான தகவல்கள் வெளியாகின. படையினர் பெரியமடுவரை முன்னேறிவிட்டு உடனடியாகவே முன்னைய நிலைகளுக்குத் திரும்பியதாக ஒரு தகவலும், படையினர் தொடர்ந்தும் பெரியமடுப் பகுதியில் நிலைகொண்டிருப்பதாக இன்னொரு தகவலும் தெரிவித்தன.

## பலவீனமான முனைகளூடாக முன்னேறும் படைத் தந்திரம்

பெரியமடுவைக் கைப்பற்ற மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்று இடம்பெற்றதாக 'தமிழ் நெற்' என்ற சர்வதேச கணனி தகவல் தொடர்பு அமைப்பில் வெளியான செய்தி தவறு என்று வவுனியாவில் உள்ள படை உயர் வட்டாரங்கள் மறுதலித்தன.ஆனால் இதனை எழுதிய சமயத்தில் பெரியமடுக்குளம், சிராட்டிக்குளம் ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே மோதல்கள் நடைபெறுவது உறுதிப்படுத்தப் பட்டிருந்தது. பெரியமடுக்குளத்துக்கும் சிராட்டிக் குளத்துக்கும் இடையே கடந்த திங்கட்கிழமை (மே 10) படையினருடன் மோதல் நடந்ததை விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான புலிகளின் குரலும் ஊர்ஜிதம் செய்தது.

அந்த மோதலில் தமது தரப்பில் இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்ததாகவும் அந்த வானொலி தெரிவித்தது.

### தேர்தலுக்கு முன் 'போர்க்கோஷம்-III'

தென்மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் ஜூன் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர் படைநகர்வு ஒன்று நடப்பதற்கு சாத்தியம் உள்ளது. இந்தப் படை நகர்வுக்கு முந்திய - நாடிபிடித்தறியும் - நகர்வுகளே தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

மடுப்பகுதியில் இருந்து வடக்கே மல்லாவிப் பகுதியை இலக்குவைத்து அல்லது வடமேற்கே விடத்தல்தீவு பகுதியைநோக்கிப் பெரும் படைநகர்வு இடம்பெறலாம் என அப்பகுதி பொதுமக்களிடையே எதிர்பார்ப்பு நிலவுகிறது. மல்லாவிப் பகுதியில் இருந்து ஏற்கனவே பெரும் எண்ணிக்கையான மக்கள் வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டனர்.

மடுவில் இருந்து காட்டுவழிகள் ஊடாக சுமார் 6மைல் தொலைவில் பெரியமடு உள்ளது. முன்னர் இது ஒரு குடியிருப்பு பிரதேசமாக விளங்கியது. பெரியமடுப் பகுதிக்கு முன்னேறிய படையினருடன் புலிகள் ஆங்காங்கே மோதி உள்ளனர். பெரியமடுவில் இருந்து ஏழு கிலோ மீற்றர் மேற்கில் பள்ளமடு உள்ளது. பெரியமடுவில் இருந்துவரும் கிறசர் வீதி மன்னார் - பூநகரி வீதியில் சந்திக்கிறது. இந்தச் சந்திப்பில் இருந்து மேற்கே சுமார் ஒன்றரை மைல்கள் சென்றால் விடத்தல்தீவை அடையலாம். கரையோர மீன்பிடிக் கிராமமான விடத்தல்தீவில் கடற்புலிகள் தளம் அமைத்துச் செயற்படுவதாக படையினர் நம்புகின்றனர். அத்துடன் இந்தப்பகுதியில் இருந்தே தள்ளாடி மற்றும் மன்னார்த் தீவுப் பகுதிகள் மீது புலிகள் ஆட்டிலறி ஷெல் தாக்குதல்களை நடத்திவருவதாகவும் படைத் தரப்பில் கூறப்படுகிறது.

பாக்குநீரிணை ஊடான புலிகளின் போக்குவரத்தில் முக்கிய நிலையமாகவும் விடத்தல்தீவு விளங்குகிறது.

இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு விடத்தல்தீவு நோக்கிய நகர்வை படையினர் திட்டமிட்டிருக்கக்கூடும்.

ஆனால் தற்சமயம் பெரியமடுவிலிருந்து முன்னேறி விடத்தல்தீவு வரை செல்வதை விடுத்து பள்ளமடுவிலிருந்து தெற்கே நகர்ந்து தள்ளாடி முகாமுடன் படையினர் இணைந்து கொள்ளக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்து மூன்று முறிப்பில் இருந்தும் வன்னி விளாங்குளத்தில் இருந்தும் நகர்ந்து மல்லாவிப் பகுதியைக் கைப்பற்றுவது நோக்கமாக இருக்கலாம். இவற்றில் ஏதாவது ஓர் இலக்கை நோக்கிய பெரும் நகர்வு அடுத்த சில நாள்களுக்குள் இடம்பெறலாம் எனப் புலிகளும் எதிர்பார்க்கின்றனர்.

கடந்தவாரம் படையினர் மேற்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக எதனையும் தெரிவிக்கவில்லை. ஆனால் இந்த நடவடிக்கைக்கு 'போர்க்கோஷம்-III'எனப் பெயரிட்டு தெற்கு சிங்களப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி உள்ளன.

வன்னிப் பெருநிலப்பரப்பு ஊடாக குடாநாட்டுக்கு தரைவழிப்பாதை ஒன்றைத் திறப்பதாகக் கூறி அரச படைகள் சண்டையில் இறங்கி இரு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அந்த நோக்கத்தைக் கைவிட்டு புலிகளின் பிடியில் உள்ள வன்னிப் பெருநிலப்பரப்பையே முழுவதுமாகக் கைப்பற்றும் நீண்ட போரில் படையினர் இறங்கியுள்ளனர்.

மேற்குலக போர் நிபுணர்களின் ஆலோசனையுடன் நடைபெறுவதாகக் கூறப்படும் இந்த வன்னிப் போர்த் திட்டம் வன்னியின் இருதயப் பகுதியாகக் கருதப்படும் பிரதேசங்களை இன்னமும் தங்கள் பிடியில் வைத்திருக்கும் விடுதலைப்புலிகளுக்கு ஒரு சவாலாகவே மாறி வருதை அவதானிக்க முடிகிறது.

'ஒப்பரேஷன் ஜெயசிகுறு' (வெற்றி உறுதி) நடவடிக்கைக்கு எதிராக - சுமார் 17 மாதகாலம் - கடும் எதிர்ச் சமர்களையும், அதிரடித் தாக்குதல்களையும் மேற்கொண்டு வந்த புலிகள் இந்நடவடிக்கையில் இலங்கைப் படைகளுக்கு வரலாறு காணாத தோல்வியை ஏற்படுத்தினர். கண்டி வீதியை (ஏ-9) மட்டும் ஒரே இலக்காகக் கொண்டு இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. வன்னிப் பெருநிலப்பரப்பை ஊடறுக்கும் இந்நடவடிக்கையை முறியடிக்க புலிகள் இவ்வழியில் பலமான நிலைகளை நிறுவி எதிர்ச்சமர் புரிந்தனர். பெரும் உயிரிழப்பு, உடைமை, ஆயுத தளபாட இழப்பு என்பவற்றுக்கு மத்தியிலும் எதிரியின் பலமான முனை ஒன்றை நோக்கி (கண்டி வீதியை நோக்கி) படையினர் மெல்லமெல்ல நகர்ந்தனர். ஆனால் இந்த படை நகர்வை எதிர்த்து தீரமுடன் புலிகள் நடத்தி வந்த எதிர்ச் சமர்கள், அதனால் ஏற்பட்ட இழப்புக்கள், அரச பாதுகாப்பு உயர்பீடத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள், விமர்சனங்கள் என்பன காரணமாக - கண்டி வீதியில் மாங்குளம் வரை முன்னேறிய நிலையில் - படை நடவடிக்கை கைவிடப்பட்டது.

இதற்கிடையில் கிளிநொச்சி, மற்றும் பரந்தன் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த ஆயிரக் கணக்கான படையினரைக் கூண்டோடு இலக்கு வைத்து புலிகள் தொடுத்த 'ஓயாத அலைகள் II'தாக்குதல் தேசத்தையே அதிரவைத்தது.

சுமார் 2 ஆயிரம் படையினரைக் களத்தில் இருந்து ஒரே இரவில் அப்புறப்படுத்திய இந்தத் தாக்குதல் நடைபெற்று ஏழு மாத காலம் கடந்து விட்டது.

இக்காலப் பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் நேரடியான தலையீட்டுடன் புதிய போர் உத்திகள் வகுக்கப்பட்டன. வன்னிப் படைத்தலைமையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. கண்டி வீதிக்கு கிழக்குப் பக்கமாக உள்ள நிலப்பரப்பினுள்ளும் மேற்குப் பக்கமாக உள்ள நிலப்பகுதியினுள்ளும் மூன்று படை நடவடிக்கைகள்(சூரியசக்தி, போர்க்கோஷம்I, போர்கோஷம் -II) இக்காலப் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டன. ஒரேசமயத்தில் பல முனைகள் திறக்கப்பட்டன. பரந்த பிரதேசங்களில் இராணுவ நிலைகள் விஸ்தரிக்கப்பட்டன.

இந்த 7 மாதக் காலப்பகுதியில் இடம்பெற்ற படை நடவடிக்கைகளின் போது குறிப்பிடக் கூடிய எதிர்ச்சமர்களையோ அன்றிப் பெரிய அளவிலான அதிரடித் தாக்குதல்களையோ எந்த முனையிலும் புலிகள் நடத்தவில்லை. புலிகளின் இந்த நீண்ட மௌனம் தொடர்பாக இராணுவ ஆய்வாளர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவற்றில் ஒன்று படையினரைப் போன்றே புலிகளும் ஆள்பற்றாக் குறையை எதிர்நோக்குகின்றனர் என்பதாகும்.

### பொதுமக்களுக்கு உடற்பயிற்சி

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பொதுமக்களுக்கு உடற்பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றை வன்னியில் புலிகள் ஆரம்பித்திருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் வளர்ந்தோர் அனைவருக்குமாக இந்த உடற்பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பொது இடங்களில் வைத்து பெரும் எண்ணிகையானோருக்கு ஒரே சமயத்தில் பயிற்சி அளிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

புலிகளின் இந்தத் திட்டம் கட்டாய இராணுவப் பயிற்சியே என்று அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால் புலிகள் இது ஓர் ஆயுதப்பயிற்சித்திட்டம் அல்ல என அறிவித்துவருகின்றனர்.

பொதுவாக புலிகள் நடத்தும் எந்த ஒரு நிகழ்ச்சியின் முடிவிலும் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற கோஷம் எழுப்பப்படும். தற்போது புலிகள் நடத்தும் இந்த உடற்பயிற்சித் திட்டத்தில் திளமும் பயிற்சி பெறுவோர் பயிற்சியின் இறுதியில் ஒன்றுகூடி "நமது தாகம் தமிழீழத் தாயகம்" என்று கோஷமிடுவதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் மூலம் அறியவந்தது.

புலிகளைவிட ஆள்பற்றாக்குறை நெருக்கடியை பெரியளவில் எதிர்கொள்ளும் இராணுவம் அதைச் சமாளிக்க - வெளியே காட்டிக் கொள்ளாதிருக்க - பல புதிய உத்திகளைக் கடைப்பிடித்து வருகிறது.

கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இராணுவத்தினரின் செறிவை இயன்றளவு குறைப்பது அவற்றில் ஒன்றாகும். வன்னியில் கைப்பற்றிய பிரதேசங்களில் இராணுவத்தினரின் செறிவை ஐதாக்கி பாதுகாப்பு பொறுப்புக்கள் பொலீஸ மற்றும விசேட அதிரடிப்படையினரிடம் கைமாற்றப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து சண்டையிடும் படையாக இராணுவத்தை முன்னணி நிலைகளில் குவித்து மேலும் முன்னேறி எல்லைகளை விஸ்தரிப்பது அடுத்த உத்தி.

இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பதற்கான பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டு வருகின்றபோதும் அவை எப்போதும் எதிர்பார்த்த பலனைக் கொடுத்ததே இல்லை. ஆயினும் - பெரும் ஆள் பற்றாக்குறைக்கு மத்தியிலும் - வன்னியில் புதிய போர்த்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க முடிவது பின்னணியில் இந்த உத்திகளைக் கையாள்வதனாலேயே ஆகும்.

கைப்பற்றிய பிரதேசங்களை பொலீஸ் மற்றும் துணைப்படைகளுடன் பாதுகாக்க முடிகின்ற பட்சத்தில் இராணுவம் புதிய நகர்வுகளை மேற்கொள்வது சாத்தியமாகின்றது. அத்துடன் புலிகள் எதிர்பாராத முனைகளில் நகர்வதும், புலிகள் எதிர்ச்சமர்களைப் புரியாமல் இருப்பதும் கால்போன போக்கில் முன்னேறிவிடும் தைரியத்தை படையினருக்கு ஏற்படுத்துகிறது.

புலிகளின் ஆள்பற்றாக்குறையை வாய்ப்பாகக் கருதும் படைத்தரப்பு மடுப்பகுதி போன்ற இராணுவ ரீதியில் முக்கியத்துவம் இல்லாத நிலப்பிரதேசங்களுக்குள்ளும் தொடர்ந்து முன்னேறுகிறது. இதன் மூலம் தங்கள் படைப்பல செறிவை எந்த முனையில் அதிகரிப்பது என்ற குழப்பத்தை புலிகளுக்கு ஏற்படுத்துவதும், புலிகளின் செறிவை ஐதாக்குவதும் படையினரின் திட்டமாகும்.

வன்னியின் கிழக்கு நிலப்பரப்பிலும், மேற்கு நிலப்பரப்பிலுமாக பரவிப்படர்வதன் மூலம் அங்கும் இங்குமாக புலிகளின் செறிவை ஐதாக்குவது -

இறுதியாக புலிகளின் முக்கிய தளங்கள், தலைவர்களின் இருப்பிடங்கள் அமைந்துள்ளதாக நம்பப்படும் வன்னியின் இருதயபகுதியை நோக்கி பெரும் படை நடவடிக்கை ஒன்றைத் தொடங்கும் போது அதை முறியடிக்க அந்த முனையில் புலிகளின் படைப்பலம் குவிவதை - படையணிகள் திரள்வதை - இதன் மூலம் தடுத்தல் -

இந்த நோக்கத்திலேயே தற்போதைய வன்னிப் போத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதையைத் திறப்பது மறக்கப்பட்ட ஒரு விடயமாக மாறிவரும் போதிலும் பூநகரி - மன்னார் வீதி வழியாக, சங்குப்பிட்டி - கேரதீவு ஊடாக ஒரு பாதையைத் திறப்பதற்கு தற்போதைய படை நகர்வுகள் வாய்ப்பாக அமையலாம்.

வன்னியின் இருதயப் பகுதியாக கிழக்கு நிலப்பரப்பையே படையினர் கருதுகின்றனர். அங்கேதான் புலிகளின் முக்கிய போர்த் தளங்கள், தலைவர்களின் தங்குமிடங்கள் அமைந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது. எனவே அந்தப் பகுதிக்குள் படையினர் மேற்கொள்ளும் நகர்வுகளைக் கட்டுப்படுத்துவதிலேயே புலிகள் தங்கள் முழுப்பலத்தையும் பிரயோகிப்பர் எனப் படைத் தலைமை நம்புகிறது. எனவே வன்னியின் மேற்கு நிலப்பரப்பில் தற்போது மேற்கொள்ளப்படும் நகர்வுகளைத் தடுக்கப் புலிகள் பெரும் எதிர்ச்சமர்களில் இறங்கமாட்டார்கள் என்றும் படைத் தரப்பு கணிப்பிடுகிறது.

இந்தக் கணிப்புடனேயே பலவீனமான முனைகளுடாக 'போர்க் கோஷம்' துருப்புக்கள் மேலும் நகரத் தொடங்கி உள்ளன.

புலிகளைப் பொறுத்தவரை இராணுவத்தின் இந்தப் புதிய போர்த்திட்டத்தை முறியடிக்க ஆள்பலம் போதாமல் உள்ளது. புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' பத்திரிகை அதன் ஆசிரிய தலையங்கப் பத்தியில் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் புலிகள் அண்மைய நாள்களில் தங்கள் தாக்குதல் தந்திரோபாயங்களை மாற்றிக் கொண்டுள்ளனர்.

பெரிய எதிர்ச் சமர்களைத் தவிர்த்து படையினரை நகரவிடுதல் -

பின்னர் இராணுவம் கைப்பற்றும் பகுதிகளுள் ஆங்காங்கே தாக்குதல்களைத் தீவிரமாக்கி பாதுகாப்பு நெருக்கடியை ஏற்படுத்துதல் -

இதுவே புலிகளின் திட்டம்.

இந்த வகையில் இராணுவத்தினரின் பலம் ஐதாக்கப்பட்ட பகுதிகளில் பொலீஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருக்கு எதிரான புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. வன்னியல் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளில் பொலீஸாரும் அதிரடிப்படையினரும் அண்மைக் காலத்தில் சந்தித்து வரும் உயிரிழப்புகள் புலிகளின் புதிய உத்தியையே காட்டுகின்றன.

### ஊரடங்கு மேலும் தளர்த்தப்படும்?

குடாநாட்டில் அமுல் செய்யப்பட்டு வரும் இரவு ஊரடங்கு நேரத்தை மேலும் ஒரு மணிநேரம் தளர்த்துவது குறித்து பலாலியிலுள்ள படைத்தலைமை ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

தற்போது இரவு 9.00 மணிமுதல் அதிகாலை 5.00மணிவரை ஊரடங்கு அமுல் செய்யப்படுகின்றது. இதனை இரவு 10.00மணிமுதல் அமுல்செய்வது குறித்து படைத்தரப்பு ஆலோசிக்கிறது. பொதுமக்களின் போக்குவரத்து, பஸ் போக்குவரத்து, வர்த்தக நடவடிக்கைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டே இந்த ஊரடங்குத் தளர்வை அமுல்செய்ய ஆலாசிக்கப்படுவதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் ஊரடங்கு இரவு 9.00 மணிக்கு அமுலுக்கு வருகின்றபோதும் நகரப்பகுதிகள் தவிர்ந்த குடாநாட்டின் பெரும்பகுதியில் இரவு 7.00 மணியுடனேயே மக்கள் நடமாட்டமமுடங்கி விடுகின்றது. சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகள் இருக்கும் என்பதனால் மக்கள் தங்கள் நடமாட்டங்களைக் குறைத்துக் கொள்கின்றனர்.

குடாநாட்டில் இயல்புநிலை முழுமையாக வழமைக்குத் திரும்பிவிட்டதாகக் காட்டுவதற்கு இந்த இரவு ஊரடங்கு நீக்கப்படவேண்டும். மக்களின் சுதந்திரமான போக்குவரத்து அனுமதிக்கப்படவேண்டும். ஆனால் இரவு வேளைகளில் மக்களை நடமாட அனுமதிப்பது புலிகளின் நடவடிக்கைகளுக்குப் பெரு வாய்ப்பாக அமைந்துவிடும் எனப் படைத்தரப்பு அஞ்சுகின்றது.

முக்கிய ஆலய உற்சவங்கள் மற்றும் பண்டிகை நாள்களின்போது ஊரடங்கைத் தளர்த்துமாறு பொது அமைப்புகளால் விடுக்கப்படும் கோரிக்கைகளைக் கூட படைத் தலைமை மிகுந்த தயக்கத்துடனேயே பரிசீலிக்கின்றது.

குடாநாட்டில் ஊரடங்கை அமுல்செய்வதை இப்படியே நீடிப்பது அரசுக்கு சாதகமாக இருக்காது. எனவே ஊரடங்கு நேரத்தை படிப்படியாகத் தளர்த்தி இயல்புநிலை மேலும் சீரடைந்து வருகின்றது என்பதை வெளிப்படுத்தியாக வேண்டிய அவசியம் அரசுக்கு உள்ளது. *

மறுபக்கம் வார விமர்சனம்
நல்லூர் தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விருது

அசுரரும் போற்று மசகாய சூரா!
விசரரும் வீணரும் வெட்கி - நசிந்திடத்
தூயதோர் நோக்கும் துணிந்த கரமு
மாயக் கிடைத்த கனி.

வீர விருதினை வென்றநம் நாளிதழே!
ஆரத் தழுவியுனை அர்ச்சித்தோம்! - போரெனும்
பேரரக்கன் மாளப்போர்ப் பித்தரும் தாம்மறையப்
பேருதயா! பேருதையாய்ப் போடு.

பணிவும் துணிவும் பரந்தநன் னோக்கும்
இணைந்தநின் தொண்டா லுதயா! - இணையில்லாத்
தாய்த்தமி ழன்னைக்குத் தாழ்ந்து பணிசெய்யச்
சேயுனைத் தேடிவரும் சீர்.

குப்பையும் கூளமுங் கோலி வருமொரு
சப்பி யிதழெனச் சாடியவர் - அப்பப்பா!
துப்பு முகரப்போய்த் தூணொடு மோதியதோர்
தப்புநெறி தந்தபெருந் தாழ்வு.

மஞ்ச ளிதழென்றும்; மாதவியின் தாயென்றும்,
பிஞ்சு மனதைப் பிளக்குமோர் - நஞ்சென்றும்
கஞ்சல் பொறுக்கியவர், கண்ணிவெடி காலுடைக்க
அஞ்சி மறைந்தா ரடுத்து.

ஊரிற் சிலநாவி லூத்தைநீ ரூறினும்
பேரா யிரவர் பெரும்போர் - வரித்தொரு
தீரா இடுக்கண் திரைமறைவிற் செய்யினுஞ்
சோரா துழைப்பாய்! சுபம்!!

-அங்குசன்.

# மரங்களுக்கா சொன்னீர் பகுத்தறிவு இல்லையென்று?

சிறகை உதிர்த்து விட்டு எழுந்து நிற்கும்பறவையைப்போல்
சருகை உதிர்த்து விட்டுத் தலை நிமிர்ந்து
கொண்டையெங்கும்
புதுத்துளிர் அணிந்து புன்னகைப் பூ பூத்து
பொன்னிழலைக் கம்பளமாய்ப் பூமியிலே விரித்து நிற்கும்
என் மரத்தின் கீழே இளைப்பாறி இருப்பதென்றால்
சந்தோசம் எந்தனுக்கு!
வேரே..... தல்லையணையாய்.......
வந்தணைந்து வான் வெறித்துக் கிடப்பதுவும்,
தென்றல் வருடுகையில் தேவாரம் தெம்மாங்குச்
சிந்தை முணுமுணுத்துச் சிலிர்ப்பதுவும்,
அந்தியிலே
நிழலோரம் 'நூலோடு' நிட்டை கூடிக் கிடப்பதுவும்,
கிளைகளிலே வந்தமரும் கிளி, குயிலின் வாய்மொழியில்
இலக்கணப் பிழைகண்டு இழிப்பதுவும்,
சில நேரம்
வம்பளக்கும் பொடியளுடன் வாலிபத்தை ரசிப்பதுவும்
என்ன சுகமப்பா?
ஈடில்லா இதமப்பா??
நிலாக்காலம் என்றால் நிலவை நான் வரவழைத்தென்
கவிதைகளைச் சொல்லிக் காட்டி மகிழ்வதற்கு
உதவுவதும் இந்த
விருட்சத்தின் உறவெல்லா?
முழுநிலவு காலிக்க முகிழ்ந்து வரும் கவிதைகளை
எழுவதற்குத் தாளின்றி நானேங்க... தன் சொந்த
இலையை "எழுதென்று"
ஈயுமரம் இதுவெல்லா?
பசியென்று நான் துடிக்க நிலவூட்டும் பாலைத்தன்
இலையால் எனக்கள்ளி ஊட்டும் தாய் இதுவெல்லா?
எறும்பு முதற் கொண்டு
எந்தனுக்கும் உரிமைதந்து
சரிசமானம் காக்கும் சந்நிதியும் இதுவெல்லா?
வாடகைகள் இன்றி வரும் குருவி வரங்கேட்க
கூட்டுக்கிடம் கொடுக்கும்
குளிர்நெஞ்சு இதுவெல்லா?
நண்பரில்லா ர்ாவில்
அருளோடு ஞானம்
ரெண்டும் பெறவைத்தென் புலம்பலுக்கும் பதில்தந்து
சிந்தில் பிழைபிடித்து,
திறமென்றால் சிலிர்த்தெனக்குப்
'பழப்பரிசு' உதிர்த்துப் பசி தணித்துத்,
துயர் சுமக்கும்,
என் மனதைப் பஞ்சாக்கும் போதிமரம் இதுவெல்லா?
ஆர்சொன்னார் மரத்தை ஐந்தறிவுச் சீவனென்று?
போரென்று மனித நேயத்தைப் புதைத்துவிட்டு
மரந்தறித்து,
தன்னுறவை மாளவைத்து, தினந்தோறும்
சவப்பெட்டி ஆணிகளைத் தயாரித்து மகிழ்கின்ற
'ஆறறிவு மாக்களின்' முன்
அன்புருவாம் தாவரத்தை....
ஆர்சொன்னார் இங்கு ஐந்தறிவுச் சீவனென்று!

- த. ஜெயசீலன் -

# தமிழ் பேசு தமிழா

கொச்சைத் தமிழ் பேசி
மிச்சம 'இங்கிலிஷ்' போட்டு-
சொச்சம்
சிங்கள முமாய் திரியும்
எங்களேவரே நீரும் கேளீர்!

அச்சம் தவிர் என்ற
அஞ்சா மொழி கொண்ட - துச்சா
எம் தழிழர் நீரும்
வம்பாய் எம்மொழி சிதைத்தீர்!

'மம்மி' எனச் சொல்லி
கம்மி உம தன்பை ; தும்மி
கொட்டாது: அம்மா வென்ற
தெவிட்டா மொழி சொல்வீர்!

அப்பா என்னும் அன்பை
தப்பாய் மொழி போட்டு-பொப்பாய்
'டாட்' போட்டு ஏன்
போட்டீர் தமிழை!

கற்றுக் கொண்ட எம்தமிழா
கற்றுக் கொஞ்சம் வேணுமப்பா-
சுற்றும்
இந்தப் பூமிதனில் தமிழும்
சிந்திக்க வேணு மப்பா!

அகதிகளாய் உலகமெல்லாம்
சகதிகளாய் இருந்தாலும்
அகத்தில்
சங்கத் தமிழதை
சங்கமித்தே வாழப் பாரும்!

கலைகளிலே உன் தமிழை
அலைகளாக உசுப்பி விடு-வலை
விரித்தால் எங்கும் தமிழே
தரித்திடும் காலமது மலர்த்து!

தமிழ் மறந்தால் பெருமையென்று
உமிபோல் அகற்றி விட்டு - சமி
பாடு அடைந் தாயேயுன்
நாடி இன்றி அலைந்தாயே!

குட்டியாக உனக்கொரு பேர்
சுட்டியாக வைத்து விட்டு - குட்டி
நாய்க்கு மாம் அப்பெயர்
பாயாதே அதை போல் நீ!

பெட்டிப் பாம்பாய் உன்னறிவை
கட்டி நீயும் வைத்ததனால் -
தொட்டி
உள்ளே மீனைப் போல
நல் தமிழதை விட்டாயே!

ஆ.ஜென்சன் றொனால்ட்.

## அகராதி

**வானமும் பூமியும்**
நீ அழும் போது
நான் சிரிக்கிறேன்
நீ சிரிக்கும் போது
நான் அழுகிறேன்.

**நிலவு**
வானக்கடலில்
மேக அலைகள் சூழ
நட்சத்திரத் தோழியரோடு
குளிக்கும் பெண்.

**முகில்கள்**
காற்று யுத்தத்தால்
கலைந்து செல்லும்
அகதிக் கூட்டம்
வே(ா)ட்டு கேட்க
பல்வேறு வடிவங்களில்
பவனி வரும்
அரசியல்வாதிகள்.

**குடை**
மழைக் கெதிராக
ஆர்ப்பாட்டம் செய்யும்
போர்க் கொடி.

**அடையா(ள) அட்டை**
சோதனை (சாவடி)கள்
சந்திக்கும் போது
கையேந்தும் கடவுள்

**வயோதிபர்**
விமானம் மூலம்(?)
விண்வெளி செல்ல
விசா எடுத்தவர்கள்
நம்பர் வராததால்
நாளைக் கடத்துகிறார்கள்

கவிதை முற்றம்

# எமக்கென வேண்டும் ஒரு வரலாறு!!

விடிகின்ற வேளையில் அடிவானில் ~ ஒரு
விடிவெள்ளி கொடிகட்டும்! ~ நாளை,
தமிழர்க்கு நல்விடிவு எட்டுமென,
தரணியெங்கும் பறைசாற்றும்!!

தமிழ்நாட்டில் பிறந்த தமிழ், உலகெங்குமதவழும்தமிழ்,
அமிழ்தினுமினிய எம் தமிழே! ~ பாரதி புரட்சியுடன்,
சீறிட்ட தமிழ்! நாவலன் காத்திட்ட தமிழ்!!
சிதைந்தே அழிவுறுதல் தகுமோ?

வீரமுரசொலிக்க, மூவேந்தர் அரசாண்ட,
தார் மீக நிலையிங்கு வருமோ? ~ இல்லை!
கோர அரக்கர்களின், கூரிய வாளால் ~ எம்
வீர சரித்திரம் சாயுமோ?

சங்கிலியன் கொடி பறந்த மண்ணில்! ~ தமிழ்
மங்கியே போதல் சரிதானோ! ~ அற்பர்
தங்கியே ஈங்கு தமிழதைச் சிதைப்பதால்,
பொங்கியே எழுந்திடல் புதிதாமோ?

எட்டப் பறந்திடும் வெண்புறாவை ~ நாம்
எட்டியே பிடித்திடல் வேண்டும்! ~ நல்ல
திட்டமுடனொரு தமிழ்நிலம் வேண்டும்! ~ அங்கு
கட்ட வேண்டும் தமிழ்வீர வரலாறு!!

- அச்சுவேலி சு. சுஜிதா.

# கவிதா எனது காதலி

| | | | |
|---|---|---|---|
| கவிதாப் | பெண்ணைக் | காதலியாய்(க்) | |
| | கவர்ந்து | கொள்ள | ஆசை(ப்)பட்டு(ப்) |
| புவியில் | அவட்கு | நற்பூண்கள் | |
| | பூட்டி | மகிழ்ந்து | தொடர்ந்துவந்தேன் |
| எதுகை | மோனை | எனும் நடையில் | |
| | அவளின் | வரவை | உளங்கொண்டு |
| அதுகை | களாக | அவள்வீச | |
| | அணிகள் | காப்பாய் | இட்டுவந்தேன் |
| சீரும் | தளையும் | சீராகச் | |
| | சேர்த்து | அவளைச் | சீண்டிவிட்டு(க்) |
| கூரும் | அன்பால் | அணைத்தென்றும் | |
| | குலவி | இன்பம் | கொண்டுவந்தேன் |
| சொல்லும் | பொருளும் | பயனுமெனச் | |
| | சுடரும் | தமிழால் | முத்தான |
| வெல்லும் | சொற்கள் | தேர்ந்தெடுத்து | |
| | விளக்கிச் | சூட்டி | விருப்புற்றேன் |
| உள்ளத் | துள்ளே | உணர்வொன்ற | |
| | உடன்பா | டான | கருத்துடனே |
| மெள்ள | அவளின் | கைப்பிடித்து | |
| | மேவி | இதயம் | கொண்டிட்டேன் |
| இசையும் | அசையும் | அவட்காக | |
| | இதமாய்ப் | பதமாய் | அமைத்திருந்து |
| பிசையும் | போது | ஊடலின்றிப் | |
| | பிரியா | திருந்து | கூடிவந்தேன் |
| தூங்கும் | போதும் | கனவினிலே | |
| | தொட்டு | உளத்தை | வாங்கிவிட்டு(ப்) |
| பாங்குக் | கவிகள் | படைத்திடுவாள் | |
| | பாசாங் | கில்லாப் | படைப்பாளி |
| எழுது | கோலை | எடுஎன்பாள் | |
| | ஏற்று | நாவால் | இசைத்திடுவாள் |
| பொழுது | போயும் | விடமாட்டாள் | |
| | போகம் | தந்துமே | புல்லரிப்பாள் |
| இவ்வா | றெல்லாம் | தொடர்ந்திவட்காய் | |
| | இலக்க | ணத்தின் | வழிநின்றேன் |
| அவ்வா | றவளும் | காதலித்து, | |
| | அள்ளி | அள்ளிப் | பாபடைத்தாள் |
| வெண்பா | கலிப்பா | கொச்சைப்பா | |
| | வேண்டும் | பிறபா(ப்) | புலமைபெற(த்) |
| தன்பா | பாட்டில் | தந்திடுவாள் | |
| | தணியாள் | கவிதைக் | காதலியாள் |
| கற்பனைக் | குதிரைகள் | பூட்டிவிட்டு(க்) | |
| | கருத்தில் | தெளிவைப் | புகட்டிவிட்டு |
| நற்பயன் | பேணி | நாவசைத்தேன் | |
| | நாளும் | வந்து | குடியிருந்தாள் |
| எத்தனை | புலவர் | காதலித்தார் | |
| | இவளும் | விரும்பி | இன்புற்று |
| மெத்த | கவிதைகள் | புனைந்திட்டு | |
| | மீண்டும் | கன்னியாய் | நடைநடந்தாள். |

-நாக. சண்முகநாதபிள்ளை .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டம் அன்றும் இன்றும்

-கோபி-

(16)

என்ன, யாருக்கு வெற்றி? அட உங்களைத்தான் கேட்கிறேன். வென்றது இலங்கையா இங்கிலாந்தா? ஆட்டம் எப்படி விறுவிறுப்பாக இருந்தது?

பொதுவாகத் துடுப்பாளர்கள் அடித்தாடும் போதுதான் பார்க்க விறுவிறுப்பாக இருக்கிறது. இங்கிலாந்தின் மைதானங்கள் பந்தாளர்களுக்கு ஓரளவு சாதகமாக அமையலாம் எனினும் இரசிகர்களின் மனங்களைக் கொள்ளை கொள்ளப் போவதென்னவோ துடுப்பாளர்கள்தான் என்பதில் சந்தேகமில்லை.

அது சரி, இம்முறை சிறப்பாக ஆடி மக்கள்



கெரி கேர்ஸ்ரன்

மனங்களில் நீக்கமற நிலைக்கப்போகும் வீரர் யார்? இங்கே தரப்பட்டுள்ள அட்டவணைகளிற் காணப்படும் பெயர்களிலொன்று அவருடையதாக இருக்கலாம்.

இந்த உலகக்கிண்ணத் தொடரிலே சிறப்பாக ஆடப்போகின்றவர்கள் எனக் கருதப்படுகின்ற சிலரைப்பற்றிய விவரங்களை ஓர் அட்டவணை தருகின்றது. ஐயாயிரம் ஓட்டங்களை நெருங்கும் ஹான்சி குறோன்ஜே, நாலாயிரம் ஓட்டங்களை நெருங்கும் கெரிகேர்ஸ்ரன், ஏழாயிரத்தைத் தாண்டிய அர்ஜுனா ரணதுங்கா மற்றும் சலீம் மலிக் போன்றோரும் சிறப்பாக ஆடக்கூடியவர்களே.

## இலங்கையர்களில்...

இவர்களில் அர்ஜுனா ரணதுங்கா இந்த உலகக் கிண்ணத் தொடரோடு ஓய்வு பெறலாம். உலகக்கிண்ணத்தை மீண்டும் இலங்கைக்குப் பெற்றுத் தந்துவிட்டு ஓய்வு பெறுவதே அர்ஜுனாவின் இலட்சியம். எனவே அவர் தன் தனிப்பட்ட சாதனைகளை விட அணியின் வெற்றிக்கே முக்கியத்துவமளிப்பார் என நாம் எதிர்பார்க்கலாம். அதற்காகத்தான் கட்டுப்பாட்டுச் சபையுடன் மல்லுக்கட்டித் தனக்கு விருப்பமான, சிறந்த அணியைத் தெரிந்து இங்கிலாந்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்.

அர்ஜுனா சிரமப்பட்டு அழைத்துச் சென்றவர்களுள் ஒருவர் றொஷான் மஹாநாம. மஹாநாம இவ்வருட ஆரம்பத்தில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற கால்ரன் அன்ட் யுனைற்றட் தொடரில் ஐயாயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். இவருடன் இருபத்தொருவர் இச்சாதனையை எட்டியுள்ளனர்.

கடந்த உலகக்கிண்ணத் தொடரிலே படு பயங்கரமாக விளாசித்தள்ளி ஒரு கலக்குக் கலக்கியவர் சனத் ஜெயசூரியா. சனத் சுகயீனம் காரணமாகக் கடந்த சில மாதங்கள் அணியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைஅணியின் இன்னொரு நம்பிக்கை நட்சத்திரம் அரவிந்த டி சில்வா. அண்மையில் எண்ணாயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்த அரவிந்த இப்பொழுதெல்லாம் அப்படியொன்றும் அற்புதமாக ஆடுவதில்லை. எனினும் தேவையானபோது தேவையான அளவில் ஓட்டங்களைக் குவிக்க வல்லவர். இவரைப் போலவே எண்ணாயிரத்தைத் தாண்டி இப்பொழுது ஆடிக் கொண்டிருக்கும் இன்னொரு துடுப்பாளர் அஸாருதீன்.

## இந்தியத் துடுப்பாளர்கள்

ஒரு நாள் போட்டிகளிலே சுமார் 8950 ஓட்டங்களைக் குவித்தவர் அஸாருதீன். ஒரு வேளை அவர் இன்று நடைபெறும் தென்னாபிரிக்காவுக்கெதிரான ஆட்டத்தில் கூட தன ஒன்பதாயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்யலாம். அண்மைக்காலங்களில் அஸாரின் ஆட்டமும் அவ்வளவு சோபிக்கவில்லை என்பதையும் இவ்விடத்தில் கூறத்தான் வேண்டும்.

இந்திய இரசிகர்களால் மட்டுமன்றி துடுப்பாட்டத்தை அறிந்தவர்கள் எல்லோராலும் அதிகம் எதிர்பார்க்கப்படுபவர் சச்சின் டெண்டுல்கர். இந்த உலகக் கிண்ணப் போட்டிகளை முன்னிட்டு சச்சினின் உருவம் பதித்த - 24 கரட் தங்கத்தில் செய்யப்பட்ட - பதக்கம் ஒன்று வெளியிடப்பட்டமை தெரிந்ததே. அதன் விற்பனை விலை இந்திய ரூபாவில் 4500!

ஒன்பதாயிரம் ஓட்டங்களை நெருங்கும் அஸாருதீன், எண்ணாயிரத்தை நெருங்கும் டெண்டுல்கர், நாலாயிரத்தைத் தாண்டிய ஜடேஜா, மூவாயிரத்தைத் தாண்டிய கங்குலி, ஏறத்தாழ 35 என்ற ஓட்டச் சராசரியுடன் ஆடும் திராவிட் ஆகிய சிறந்த துடுப்பாளர்கள் இந்திய அணியில் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் ஒன்றாகச் சிறப்பாக ஆடினால் உலகக் கிண்ணம்... ஆனால் அவர்கள்தான் அவ்வாறு ஆடுவதில்லையே!

இவ்விடயத்தில் தென்னாபிரிக்கர்கள் இந்தியர்களுக்கு நேர்மாறானவர்கள். கூட்டாக முயன்று வெல்ல வல்லவர்கள். குறோன்ஜே, கேர்ஸ்ரன், கலினன், கிப்ஸ் போன்ற சிறந்த துடுப்பாளர்களும் கலிஸ், குளூஸ்னர் போன்ற சிறந்த சகலதுறை வல்லுநர்களும் தென்னாபிரிக்க அணியிலிருக்கின்றனர்.

## தென்னாபிரிக்க - நியூசிலாந்து தொடர்

கடந்த பெப்ரவரி 15 வரை சுமார் பத்து ஒரு நாள் இனிங்ஸ்களில் கெரி கேர்ஸ்ரன் பத்தினை விட அதிக ஓட்டங்களைப் பெற்றது இரண்டே இரண்டு தடவைகள்தான். ஆனால் அதன்பின் நியூசிலாந்துடனான போட்டித் தொடரில் மீண்டும் தன் திறமையைக் காட்டினார் கேர்ஸ்ரன். நியூசிலாந்திற்கெதிராக குறோன்ஜே, கலினன், காலிஸ், குளூஸ்னர் ஆகியோரும் சிறப்பாகவே ஆடினர்.

குறோன்ஜே மார்ச் 27 இல் தன் நூறாவது இலக்கைப் பெற்றதன் மூலம் ஒரு நாள் போட்டிகளில் 1000 ஓட்டங்கள் மற்றும் 100 இலக்குகளைப் பெற்ற பதினாறாவது வீரரானார்.

ஜேக்கஸ் கலிஸ் இரண்டு சதங்களை அடித்ததுடன் சிறப்பாக பந்தும் வீசினார். இந்த உலகக் கிண்ணத் தொடரிலே சிறந்த சகலதுறை வல்லுநராக கலிஸ்தான் விளங்குவார் என்பது விமர்சகர்களின் எதிர்பார்ப்பு.

குளூஸ்னர் ஆட்டமிழக்காமல் ஒரு சதம் அடித்ததுடன் பல இலக்குகளையும் சாய்த்தார். குளூஸ்னர் பெற்ற சதத்தையும் வீழ்த்திய இலக்குகளையும் விட முக்கியமானது அவர் அடித்த ஓர் ஆறு!

1986 இல் மியன்டாட் ஒஸ்ரலேசியா கிண்ணத்துக்கான இறுதியாட்டத்தின் இறுதிப் பந்து வீச்சில் 'சிக்ஸ்' அடித்து வென்றமை உங்களுக்குத் தெரிந்ததே. ஆனால் லான்ஸ் குளூஸ்னர் இவ்வாறு சிக்ஸ் அடித்தது - அதுவும் மிக அண்மையில் அடித்தது - உங்களிற் பலருக்கு தெரியாததொன்று.

1999 மார்ச் 26 நியூஸிலாந்தின் Napier மைதானத்தில் 40 பந்துப்பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டத்தில் தென்னாபிரிக்க - நியூஸிலாந்து அணிகள் மோதிக் கொண்ட நாள் அது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 38.4 பந்துப்பரிமாற்றங்களில் 191 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்கா வெற்றிப்பாதையில் அற்புதமாகவே முன்னேறிய போதும் இடைவெளியில் கடகடவென இலக்குகள் சரிந்தன. ஓட்டம் பெறும் வேகமும் குறைந்தது.

ஒரு கட்டத்தில் எட்டு இலக்குகளை இழந்திருந்த தென்னாபிரிக்கா இறுதியிரு பந்துப்பரிமாற்றங்களில் 19 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. ஆனால் முதல் ஒன்பது பந்து வீச்சுக்களில் குளூஸ்னர் பெற்ற 3 நான்குகள் உட்பட 13 ஓட்டங்கள் பெறப்பட்டன. மூன்று பந்து வீச்சுக்களில் ஆறு ஓட்டங்கள் தேவை!

கடைசிப் பந்துப் பரிமாற்றத்தின் நான்காவது பந்து வீச்சில் குளூஸ்னர் ஓர் ஓட்டத்தைப் பெற்றார். அடுத்த பந்தை எதிர்கொண்ட எல்வோதி ஓர் ஓட்டத்தை விரைவாக ஓடி முடித்தார்.

இறுதிப் பந்து!

நாஸ் (Nash) குளூஸ்னரை,york பண்ணி ஆட்டமிழக்கச் செய்ய முயன்றார். ஆனால் பந்து இலக்குத் தவறி முழங்கால் உயரத்தில் full toss ஆகக் குளூஸ்னரிடம் சென்றது. குளூஸ்னர் ஓங்கியடித்தார். பந்தாளரின் தலைக்கு மேலாக பந்து பறந்தது. 'சிக்ஸ்'!

அதற்கடுத்த போட்டியிலும் வென்று தென்னாபிரிக்கா தொடரையே வென்றது.

இத்தொடரிலே நியூசிலாந்தின் நாதன் அஸ்ற்றே சதம் அடித்தார். ருவோஸ், பரோரே, ஹோாண், ஹரிஸ், கெயின்ஸ் ஆகியோரும் சிறப்பாகவே ஆடினர். இவர்களில் கிறிஸ் ஹரிஸும் கிறிஸ் கெயின்ஸும் சிறந்த சகல துறை வீரர்கள். ஹரிஸ் வில்ஸ் உலகக் கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலியாவிற்கெதிரான கால் இறுதி ஆட்டத்தில் 130 ஓட்டங்களைக் குவித்தது ஞாபகமிருக்கலாம்.

கெயின்ஸ்(cairns) ஓர் ஆக்ரோஷமான துடுப்பாளர். ஒருநாள் போட்டிகளின் வேகமான சதங்களிலொன்றை அடித்தவர்.(அட்டவணை வேகமான சதங்களை அடித்தவர்கள் பற்றிய முழுவிவரத்தைத் தருகின்றது)

கால்ரன் அன்ட் யுனைற்றட் தொடர், இந்திய மும்முனைத் தொடர், ஷார்ஜா மும்முனைத் தொடர், ஆஸ்திரேலிய - மேற்கிந்தியத் தீவுகள் தொடர் என்பன இவ்வாண்டில் நடைபெற்ற மேலும் சில முக்கிய போட்டித் தொடர்கள்.

## கால்ரன் அன்ட் யுனைற்றட் தொடர்

1998 - 99ற்கான கால்ரன் அன்ட் யுனைற்றட் தொடரை ஆஸ்திரேலியா வென்றது. அது ஆஸ்திரேலியாவின் பதினேழாவது ஒரு நாள் போட்டித் தொடர் வெற்றி.

அத்தொடரிலே ஆஸ்திரேலியாவின்



லாறா

மார்க் வோ 6000 ஒரு நாள் ஓட்டங்களைப் பெற்ற பன்னிரண்டாவது வீரரானார். இலங்கைக்கெதிராக அடம் கில்கிறிஸ்ற் 154 ஓட்டங்களைப் பெற்று இரு சாதனைகளை ஏற்படுத்தினார். ஓர் ஆஸ்திரேலியர் மற்றும் ஓர் இலக்குக் காப்பாளர் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை 154 என்பதே அச்சாதனைகள்.

அடம் கில்கிறிஸ்ற் ஏறத்தாழ 50 ஒரு நாள் போட்டிகளில் ஆடி ஐந்து சதங்களைப் பெற்றுள்ளார். ஓர் இலக்குக் காப்பாளர் இத்தனை சிறப்பாகத் துடுப்பெடுத்தாடுவது ஆபூர்வமானதே.

மேலும் கால்ரன் அன்ட் யுனைற்றட் தொடரில் மைக்கல் பெவன் 3000 ஓட்டங்களைப் பெற்ற 8ஆவது ஆஸ்திரேலியரானார். டறன் லெமன் 1000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். ஸ்ரீவ் வோ 250 போட்டிகளில் ஆடிய ஆறாவது வீரரானார். ஸ்ரீவ் ஒரு நாள் போட்டிகளில் 5000 ஓட்டங்களையும் பூர்த்தி செய்துள்ளமை தெரிந்ததே. மொத்தத்தில் மார்க்வோ, அடம் கில்கிறிஸ்ற், ஸ்ரீவ் வோ, றிக்கி பொன்ரிங், டறன் லெமன், மைக்கல் பெவன் போன்ற சிறந்த பல துடுப் (XII ஆம் பக்கம் பார்க்க)

### கடந்த இரு உலகக் கிண்ணங்களில்...

| நாடு | வீரர் | 1992இல் | 1996இல் | ஓட்டங்கள் | சராசரி |
|---|---|---|---|---|---|
| இந்தியா | டெண்டுல்கர் | 283(7-6) | 523(7-6) | 806 | 67.16 |
| ஆஸ்திரேலியா | மார்க் வோ | 145(5-4) | 484(7-6) | 629 | 62.90 |
| இலங்கை | அரவிந்தா | 175(7-7) | 448(6-5) | 623 | 51.91 |
| மே.இ.தீவுகள் | லாறா | 333(7-7) | 269(6-5) | 602 | 50.16 |
| இலங்கை | ரணதுங்க | 262(7-5) | 241(6-2) | 503 | 71.85 |
| இங்கிலாந்து | ஹிக் | 264(9-8) | 212(5-4) | 476 | 39.66 |
| இந்தியா | அஸாருதீன் | 332(7-7) | 143(6-5) | 475 | 39.58 |
| ஆஸ்திரேலியா | ஸ்ரீவ் வோ | 187(7-7) | 226(7-5) | 413 | 34.41 |
| தெ.ஆபிரிக்கா | கேர்ஸ்ரன் | | 391(6-5) | 391 | 78.20 |
| தெ.ஆபிரிக்கா | குறோன்ஜே | 102(6-3) | 276(6-5) | 378 | 47.25 |
| இங்கிலாந்து | ·.·பெயார்பிறதர் | 285(7-5) | 88(5-3) | 373 | 46.62 |
| பாகிஸ்தான் | இன்ஸமாம் | 225(10-10) | 145(5-3) | 370 | 28.46 |

(அடைப்புக்குள் துடுப்பெடுத்தாடிய இனிங்ஸ், ஆட்டமிழந்த தடவைகள்.)




பதக்க மெடலுடன் சச்சின்

### சில சிறந்த துடுப்பாளர்கள்

| நாடு | வீரர் | போட்டிகள் | ஓட்டங்கள் | சராசரி | 100 | 50 |
|---|---|---|---|---|---|---|
| இந்தியா | அஸாருதீன் | 315 | 8950 | 37.76 | 7 | 56 |
| இலங்கை | அரவிந்த | 254 | 8020 ✓ | 36.12 | 11 | 55 |
| இந்தியா | டெண்டுல்கர் | 211 | 7801 | 42.39 | 21 | 43 |
| ஆஸ்திரேலியா | மார்க் வோ | 181 | 6261 | 38.41 | 11 | 40 |
| பாகிஸ்தான் | அன்வர் | 170 | 6172 | 40.07 | 15 | 30 |
| பாகிஸ்தான் | இன்ஸமாம் | 182 | 5867 | 39.37 | 6 | 41 |
| மே.இ.தீவுகள் | லாறா | 141 | 5628 | 45.02 | 12 | 37 |
| இலங்கை | சனத் | 178 | 4672 ✓ | 28.66 | 7 | 29 |
| இந்தியா | கங்குலி | 99 | 3509 | 40.80 | 6 | 25 |
| தெ.ஆபிரிக்கா | கலினன் | 113 | 3413 | 35.18 | 3 | 22 |
| இங்கிலாந்து | ஹிக் | 91 | 3112 | 38.41 | 5 | 20 |
| ஆஸ்திரேலியா | பொன்ரிங் | 73 | 2566 | 39.47 | 5 | 14 |
| பாகிஸ்தான் | அப்ரீடி | 82 | 1912 | 24.83 | 2 | 10 |
| இங்கிலாந்து | நைற் | 44 | 1620 | 39.51 | 3 | 9 |

தகவல்கள் 13 - 05 - 1999 இல் உள்ளவாறு

### அதிவேக ஒரு நாள் சதங்கள்

| பந்துகள் | வீரர் | அணி | எதிராக | மொத்தம் |
|---|---|---|---|---|
| 37 | சாயிட் அப்ரீடி | பாகிஸ்தான் | இலங்கை | 102 (40) |
| 48 | சனத் ஜெயசூரியா | இலங்கை | பாகிஸ்தான் | 134 (65) |
| 62 | மொகமட் அஸாருதீன் | இந்தியா | நியூஸிலாந்து | 108* (65) |
| 67 | பாஸிற் அலி | பாகிஸ்தான் | மே.இ.தீவுகள் | 127* (79) |
| 68 | இஜாஸ் அஹமட் | பாகிஸ்தான் | இந்தியா | 139* (84) |
| 72 | ஷாஹீர் அப்பாஸ் | பாகிஸ்தான் | இந்தியா | 149 (99) |
| 72 | விவியன் ரிச்சட்ஸ் | மே.இ.தீவுகள் | இந்தியா | 118 (86) |
| 72 | சனத் ஜெயசூரியா | இலங்கை | பங்களாதேஷ் | 108 (83) |
| 72 | சச்சின் டெண்டுல்கர் | இந்தியா | சிம்பாப்வே | 124* (92) |
| 73 | ஜாவெட் மியன்டாட் | பாகிஸ்தான் | இந்தியா | [illegible] (77) |
| 75 | விவியன் ரிச்சட்ஸ் | மே.இ.தீவுகள் | இந்தியா | 110* (77) |
| 75 | கிறிஸ் கெயின்ஸ் | நியூஸிலாந்து | இந்தியா | 115 (80) |

## கில்லாடி கிட்டு



"வரவர இவருக்கு ஞாபக மறதி அதி கமாயிட்டுது!"
"எப்படிச் சொல்கிறாய்?"
"இப்பப்பார். கிரிக்கெட் மட்டையை மறந்துபோய் வெறும் கையோடு வந்து நிற்கிறார்....!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி
## உங்கள் கவிதைகள்...

மரங்களில் தத்திச் செல்லும்
ஓணான்களாய்......
மனசுகளைக் குத்திச் செல்லும்
நிஜங்கள்...!
கொண்டவன் குடிபோதையில்....
குழந்தைகள் பட்டினியில்.....
மாராப்புக் கிழிந்த நிலையில்
மறைத்திடக் கைகள்
துணையில்.....
ஒட்டிய பல்லியை....
தட்டிடக் கையில்லை....
உணர்வுகள் எதிர்த்தாலும்....
உதறக் கை.... அறுந்த நிலை

- த. சாம்பவன் -

ஒரு நள்ளிரவில்
நீ சூறையாடப்பட்டபோதும்
மௌனித்திருந்தாய்.....
உன் பிடுங்கப்பட்ட
நிர்வாணத்தின் போது
பேசாதிருந்தாய்
நாங்கள்
இறுதிவரை உனக்காய்ப்பேசோம்...
எழுந்து நீயே பேசு
உனக்காயும்
எமக்காயும்

-எம்.சாம்-
குருநகர்.

அன்று.....
இடியுடன் கூடிய
போர் மேகம் கொட்டிய
கொடிய புயல் வெள்ளம்
உன்னைப் பலாத்காரமாக
இழுத்துச் செல்லாவிட்டால்
இன்று....
ஈழத்தில்...
ஒரு முடிவுடன்...
கார் குழல் முடியா....
சபதம் காக்கும்
பாஞ்சாலியாக
நான்....
மாறியிருக்கமாட்டேன்.

- நா. சோபினி -
சண்டிலிப்பாய்.

கண்ணே என்றார்
கண்ணின் மணியே என்றார்
காதலாகினேன்.....
கசிந்து உருகினேன்...
கனவுகளோடு
கைகோர்த்துத் திரிந்தேன்
கடற்கரை மணலில்
காலாற நடந்தேன்...
பின்பொருநாள்,
கல்யாணம் எப்போ.....?
என்றுதான் கேட்டேன்.
போனவர் போனவர்தான்.

- எஸ்.யு.காந்தன் -
தல்லையபுலம்.

இவற்றுக்கும் உன் மேல் விருப்புண்டு!
இதை எதிர்த்திடு வெற்றி உனக்குண்டு
எதற்கும் நீ இருந்தாயே பயந்து
இன்றேன் நிற்கின்றாய் வியந்து?
கண்ணனை அழைத்தாயோ அன்று
யாரை நீ அழைப்பாய் இன்று?
இது போலப் பலருண்டு பரந்து
இருப்பரே உன்னோடும் கரந்து
துணிந்து நீ எடு ஒரு கம்பு
எவன் செயவான் உன்னோடு வம்பு?

- தி. ஜனகன் -
இமையாணன்.

மனிதன் என்னை உரிந்தான்
மரமோ எனக்கே உரியாயிற்று

- சைதன்யன் -



கட்டியவனுக்கு மட்டுமே தமிழிச்சி முந்தானை
காடையர்கள் தொடுவது கற்புள்ளவளிற்காகாது
பற்றி நின்ற முந்தானையை பகைவர்கள் துகிலுரிய
பார்த்து நின்ற பச்சோந்தியும் பழிதீர்க்க பாய்கிறது
பெற்றவனை கண்முன் பிணமாக மாற்றிவிட்டு
பேய் போல் வந்தவர்கள் நாய் போல் பாய்கின்றனர்

- சொ. மயூரன் -
பருத்தித்துறை.

இத்தனை காலமும்
இத்தரை மீதிலே
எத்தனை சோதனைகள்
எத்தனை வேதனைகள்- நினைக்கையில்
நடுங்குது தேகம் - இது
நாய்படும் கோலம்
காலம் சென்றாலும்
கதிரவன் தெற்கில் உதிப்பதில்லையாம்
மாற்றம் பல வந்தாலும்
மங்கை விலங்கு உடைவதில்லையாம்
ஆயினும்
இழப்புக்களை
ஈடுசெய்ய
தனிமரமாய் நான் செல்ல
ஒட்டிக் கொண்ட ஐந்தறிவே
நீ எதை தேடி என் பின்னே...?

- சதீஸ்வரி -
வல்வை.

கைகட்டி
தலை குனியும்
இந்த நிலை
இனி வேண்டாம்
பெண்ணே.....
முகம் திருப்பு
நிலவாகவல்ல
கொடுமைகளை
சுட்டெரிக்கும்
சூரியனாய்!

- நாகராசா -
நுணாவில்.

இருள் மறந்த இரவு;
ஒளிர மறுத்த பகல்;
சோகம் படந்த தேசம் நடுவே....
இனம் புரியாத இன்னொரு சோகம்
முகவரியைத் தொலைத்துவிட்டு
முகாரி இராகம் பாடும் உன்னை
வாழ்க்கை வசந்தத்திலிருந்து
தெருவுக்குத் துரத்தி விட்டதா...?

- ப. பிருந்தா -

தளிர்த்திடும் துளிராகி.....
தள்ளாடும் கொடியாகி
முன்னைப் புலவர்களால்
உவமை சொன்ன
பெண்ணே.....பாவியரின்
பார்வையால் - நீ
பட்டமரமாகி விட்டாயோ...?
காலம் இன்னும் போகவில்லை
கண் திறவாய் பெண்ணே!
காலத்தை வென்றிடும் - புதுக்
கண்ணகி ஆகிடு!!

- சி. சிவகௌரி -
மட்டுவில் வடக்கு.

மோகப் பல்லி ஊரும்
மோகன மங்காய்!
உன்
சேலைக்குள்ளே
ஆபாசத்தைத் தேடும்
இன்றைய (அ)நாகரிம்
உன் ஆடைகளை
ஒன்வொன்றாய்க் களைந்து
அழகு பார்க்கும் இது,
சினிமா யுகம்!

- சி.சிவாணி -
கந்தர்மடம்.

அவள்
தன் உரிமைகளுக்காய்
அவனோடு
போராடுகையில்;
அவனோ
அவள் துகிலோடு
துச்சாதனனாய்....

-இராஜகிருபன்-
அல்வாய்.

கன்னியே!
கனவு சுமந்தால்
காலம் கழியும்....
கருவி சுமந்தால்
காலம் மலரும்!

- நிலாப்பையன் -

சாதி, சமயம்
உன் பிறப்புக்கு முன்னே
ஒட்டிவிட்ட பல்லிகள்....!
நிதி நிறம்
உன் பிறப்போடு ஏறிய பல்லிகள்
கொள்கை, கோட்பாடு....
உன்மேல் கொட்டப்பட்ட பல்லிகள்
பெண்ணே!
எல்லாப் பல்லிகளும் ஏறவிட்டு
ஏக்கத்தில் நீ ஒடுக்கி...
எப்போது நீ சிலிர்த்தெழுவாய்?
உரிமைத் தளைகளை உதறிக்கொள்வாய்?

-த.தர்மதா-

இது ஓர்
முற்றுப் பெறாத.......
பாரத அத்தியாயம்!
மீண்டும்......
ஐந்தறிவு துகிலுரிகிறது!
தேசம் மௌனித்துப் பார்க்கின்றது
பாண்டவர்களாய்!

- ஜகந்தியா -
சங்கத்தானை.

பெண் சுதந்திரம் இன்று
பெருகிவிட்டதால்,
இதோ........!
இன்னுமொரு அகலிகை
உடல் சுருக்கி
உணர்வுகள் மரத்து
காலடி வரம் கேட்டுக்
காத்திருக்கிறாள்

- க. விஜித்தா -
திருநெல்வேலி.

சிரேஷ்ட மாணவரின்
சிந்தனையில் உருவான
சித்திரவதையின் ஒரு
சிறிய பகுதி இது -
சின்னப் பெண்ணே
சிலையாக நிற்க வைத்து
சினம் கொண்ட பல்லியால் இச்
சிற்றுடல் அளக்கப்படுகிறது!

- ஆ. திலீபன் -

முகம் காட்ட மறுக்கும்
முதிர் கன்னியே
வாழ்வுண்டு உனக்கும்
வான் வளைத்து
நிலாக்குடம் சரித்து
வெள்ளிக்காசுகளை நாம்
அள்ள முடிந்த பின்பு...
வீர இளைஞர் நாம்
சீதனம் கேளோம்!

- சாரங்கா -
சங்கத்தானை.

## மௌனமொழி - 34



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது.
இதனைவரைந்த வர் மானியூர் ரட்ணேஸ்.

வதைபட்டு
சிதைபட்ட
சகோதரியே
இரு பெண்களாட்சியிது
அருவருத்து ஒதுங்குதற்கு
கரையேதுமில்லையே தாயே
செம்மணிக் கிருஷாந்திக் கதைகள்
உன்னோடு முடியட்டும்
கண்மணி நீ புயலாயெழும்பு - பூமி
உன்னால் விடியட்டும்!

- பண்ணாக நாரதன் -

ஊரை விட்டு
ஊர்ந்து சென்ற ஞபாகத்தில் நீயிருக்க
ஊன்று கொடுக்க வந்தவர்
ஊர நினைக்கிறார் உன்னுடலில்!

- மோனா -
சுண்டுக்குழி.

மானத்தைப் பறிக்கும்
மனிதர் நடுவில்
மா பெரும்
பாஞ்சாலியாக
நடை போடு!
வெட்கத்தை விட்டு
புதிய வேட்கையைத்
தொடங்கு

-ஜோ.ஜெஸ்ரின்-
கொழும்புத்துறை.

எதற்குத்தான்
பயப்படுவது!
பெண்ணே
உதறிவிடு
அச்சத்தை
தூக்கிலிடு!
துணிவையே
துகிலாக்கிக்கொள்......-

-ந.சிறீதரன்-
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 MAY 1999 மாநகராட்சி ... யாழ்ப்பாணம்

# இந்த வார இராசி பலன்

## மகாதேவா ஜோதிடம்

**15-05-1999 இலிருந்து 21-05-1999 வரை**

| வி | சந் சனி | சூ புத | வெ |
|---|---|---|---|
| | இராசிச்சக்கரம் | | ராகு |
| கே | | | |
| | | | செவ் |

*மாற்றம்: பரணி நட்சத்திரம்-மேடம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*நாட்டிலும்சரி, வீட்டிலும்சரி கலகம் பிறந்துதான் நியாயம் பிறக்கின்றது. அரசியலில் நிலையில்லாத் தன்மை, ஒரு தளம்பல்நிலை நாட்டில் ஏற்படலாம். அந்நிய நாடுகளின் அழுத்த நிலைகள், பொருளாதார மாற்றம், மக்கள், மாணவர்கள், தொழிலாளர்களின் நம்பிக்கையீனம், யுத்தநிலையின் தொடர்கதையால் மனப்பேதங்கள் ஏற்படலாம். இந்தியாவில் அரசியலில் நிலையில்லாத்தன்மை தொடரும். மீண்டும் எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். சொல்வாக்கு செல்வாக்கைத்தரும். ஐ.நா.வின் நிலை - நேட்டோ நாடுகளின் யுத்த அழுத்தம் யூக்கோசிலோவியாவை பணியவைத்தாலும் அழிவுகள் தொடரலாம். மத்திய கிழக்கில் யுத்த நெருக்கடி தோன்றும். அணு ஆயுதங்களால் செயற்கை அழிவுகள், இயற்கை அழிவுகள் உருவாகும் என கிரகநிலைகள் காட்டுகின்றன.*

### மேடம்

என்ன சோகமும் - வேதனையும் மாறி மாறி வருகின்றதா? காணி பூமியால் கலக்கமொன்று வந்து தொல்லை தரும். தொழில்ஸ்தானத்தில் விகடப் பேச்சு வினையாக வரலாம். ஆனால் தொழிலில் நற்பலன் முன்னேற்றம் கொடுக்கும். சகடயோக வாழ்வுதான். புத்திரரால் கலங்குவீர். இனஜனங்களால் அல்லற்படுவீர். களைப்பு, வயிற்றுப்பெருமல், கை கால் கடி, காயம், வலி சிலருக்கு வரலாம். உடம்பைக் கவனிக்கவும். அரச உதவிகள் கிடைக்கும். போக்குவரத்து, மீன்பிடித் தொழில், நிர்வாகம், புடைவை, விவசாயம், கமிஷன் வியாபாரம் செய்பவர்கள் அதிக இலாபம் அடைவார்கள். அடுத்தவன் காணிக்குள் எட்டி இடம் பிடிப்பவர்களை விட்டுவிடமாட்டீர்கள். சட்டமுறைக்கு ஓட வேண்டி வரலாம். சிலர் தந்திரமாக கெட்டித்தனமென செய்யும் செயற்பாடுகளால் பின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டியவர்கள் ஆகின்றார்கள் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள்,புதன்.*

### இடபம்

அமைதியாக இருக்கும் நீங்களா இப்படி அவசரப்படுகின்றீர்கள்? ஏன் உடம்பில் மின்சாரம் பிடித்தமாதிரி துடிக்கிறீர்கள்? புதிதாக மின்சார பில் வந்துவிட்டதோ? புதியதிட்டம், அழகுக்கு அழகுபடுத்தும் மனோபாவம், வாக்குச் சாதூரியம் என்பவற்றாலும்- வெளிப்படையான செயற்பாடுகளாலும்தொழில்ஸ்தானத்தில் செல்வாக்கு பெறுவீர்கள். குடும்பத்தில் கலக்கம்தான். பெற்றோர் எதிர்ப்பார்கள். காணி பூமி சேரும். எதிர்பாலாரில் என்ன திடீர் அக்கறை எனச் சிலர் கேட்பர். வேலி தாண்டாமல் இருக்கவும் அல்லது துன்பம் வரும். எண்ணெய், உருக்கு, இரும்பு, மரம், கமிஷன், பாதுகாப்பு, நீதி, மருந்துத் துறையினருக்கு பல ஆதாயங்கள் தேடிவர இடமுண்டு. நரம்பு, நெஞ்சுநோ, சலவருத்தம், நாரிநோ என்பன கொடுக்கலாம்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

### மிதுனம்

அழகுக் கன்னி வெள்ளி உதயத்தில் மின்னி மறைகிறாள். ஆயிரம் கற்பனை உள்ளத்தில் வந்து அலை மோதித் தெறிக்கின்ற காலம். எதிர்பாலாரில் ஏன் இந்த அக்கறை? கேட்டால் சந்தியில் வைத்து விதானையார் முன்னிலையில் அடிவாங்க வேண்டி வருமோ? ஆயினும் தொழிலில் சிந்தை கொண்டு சமாளிப்பீர்கள். மேலதிகாரிகளை வசீகரித்து பல உதவிகளைப் பெறுவீர்கள். தொழில்ஸ்தானத்தில் பலவித புதிய திட்டங்களால் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தினரிடையே அபிப்பிராய பேதம் ஏற்படலாம். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். உடல் வலி, தலைவலி, வாதஉளைவு, வாய்வுத்தொல்லை என்பன சிலரை வருத்தலாம். பத்திரிகை, ரெலிபோன், மருந்து, இரசாயனம், இரும்பு, சட்டம், விவசாயம், பலசரக்குவியாபாரம் செய்பவர்களுக்கு பல மாற்றங்களும் நன்மைகளும், வருமான அதிகரிப்புகளும் ஏற்படும். இடமாற்றங்களையும், பிரயாணங்களையும் தவிர்த்துக்கொள்ளுக.

*அதிர்ஷ்ட்டநாள்:-திங்கள், புதன.*

### கடகம்

உதயத்தில் இராகு என்னும் பிணிகாரகன் உபத்திரவம் தந்தாலும், ஞானவானும், வைத்தியகாரகனுமான வியாழ பார்வையால் தகுந்த முறையில் சிறந்த பலனைத்தந்திடும் காலமாகும். கெட்ட புத்தியுள்ள நட்பு எப்பொழுதும் கஷ்டங்களைத்தான் தரும். காணி, வீடுமனைச் செலவு அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமை ஏற்படும். சமாளித்துக்கொள்ள இடமுண்டு. புத்திரரால் மகிழ்ச்சி ஏற்படாது. இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கைகால்பிடிப்பு, நெஞ்சுப் படபடப்பு, சலவருத்தங்கள், மனச்சோர்வு, யோசனை என்பன கொடுக்கலாம். நகை, மருந்து, பலசரக்கு, செய்தித்துறை, ரி.வி, சங்கீதம், வியாபாரம் போன்ற துறையினருக்கு அதிக இலாபங்கள் ஏற்படும். புதிய திட்டங்களால் பல நன்மைகள் ஏற்பட வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன், வியாழன்.*

### சிங்கம்

நம்பிக்கை உணர்வுகளால் உருவாகும் குடும்பம் போன்று - ஒரு நிர்வாக பீடத்தை தகுதியின் அடிப்படையில் உருவாக்கும் திறமை உங்களுக்கு உண்டு. தொழில்பீடத்தில் புதிய திட்டங்களை துணிவுடன் செயற்படுத்தி வெற்றி அடைவீர்கள். வாக்குச் சாதூரியத்தால் பல காரியங்கள் அனுகூலமாகும். காணி, பூமியில் மாற்றம் ஏற்படலாம். இனஜனங்களால் துன்பம் அடைவீர்கள். நெஞ்சுப்படபடப்பு, உடல்வலிகள், வரட்சித்தன்மை, உஷ்ணபீடைகள், பித்தக்கொதிப்பால் அடிக்கடி கோபம் என்பன ஏற்படலாம். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நிர்வாகம், பிரயாணம், சட்டம், குரு, பலசரக்கு வியாபாரம் போன்ற துறையினருக்கு நன்மைகள் ஏற்படும். தெய்வத் திருப்பணி தொடர்வதனால் அதிக நன்மை அடைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:-புதன், வியாழன்.*

### கன்னி

ஒருவரை ஒருவர் ஆதரிப்பதனாலோ, எதிர்ப்பதனாலோ எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடுமா? காலம் வரும்பொழுதுதான் எதுவும் நடக்கும். தொழில்ஸ்தானத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். புத்திரரால் சஞ்சலம், மனப்போராட்டம் அடிக்கடி ஏற்படும். பெற்றோர் வழியினரால உதவிகள் கிடைக்கும் காலமாகும். அவசரப்புத்தியால் அவதிகள் சிலருக்கு ஏற்படலாம். காணிபூமி சம்பந்தமான இடங்களிலும், வாகனம், இடாம்பீகப் பொருள்களிலும் அதிக செலவுகள் செய்து அழகுக் கருவிகளையும் சேர்த்து அடுக்கியபடி இருப்பீர்கள். அரச உதவிகள் பலருக்குக் கிடைக்கும். பொதுச்சேவைகளில் செல்வாக்கு அதிகரிக்கும். நரம்புச் சோர்வு, களைப்பு, சளி, இடுப்புவலி, வாத வாய்வு உளைவு என்பன சிலருக்கு ஏற்பட்டு வேதனை தரலாம். போக்குவரத்து, நகை, மருந்து, பத்திரிகை, செய்தித்துறை, குருத் தொழில துறையினருக்குப் பல மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:-புதன், வியாழன்.*

### துலாம்

சிலர் மனைவியைத் திருப்திப்படுத்த என்னவெல்லாம் செய்கிறார்கள். அதனால் மற்றவர்களுக்கும் பல கஷ்டங்களைக் கொடுக்கின்றார்கள். ஆனால் நீங்கள் சமநீதியுடன் பாரபட்சமின்றி நடப்பீர்கள் என நம்பலாமா? சனீஸ்வரன் ஏழாம் இடத்தில் நின்று பார்க்கின்றான். ஒட்டிநின்றது பட்டுவிடுமோ? எதையும் சமாளித்து வெற்றிபெறும் நீங்கள் நம்பிக்கையை மட்டும் இழக்கக்கூடாது. தொழில்ஸ்தானத்தில் நம்பிக்கையுடன் செயற்பட்டு எல்லோரினதும் அன்பைப்பெறுவீர்கள். வைராக்கிய சிந்தை, இலட்சியப்போக்குக் கொண்டவர்களுக்கு தூக்கம் பெரிதல்ல. பல தியாகங்களுக்கு மத்தியில்தான் நன்மையான பொக்கிஷம் உருவாகும். தலைவலி, அதிக யோசனை, அடிவயிற்றுநோ, குடல்வருத்தங்கள் என்பன ஏற்படும். நீதித்துறை, நிர்வாகத்துறை, போக்குவரத்து, இரும்பு, உருக்கு, கடல் தொழில் செய்பவர்களுக்கு இலாபம் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்:-ஞாயயிறு, புதன், வியாழன்.*

### விருச்சிகம்

படித்தவர்கள், பண்புள்ளவர்களாக நடக்கவேண்டும். சிலர் உங்களை போன்று உணர்ச்சிவசப்பட்டு கோபத்தால் கைகாலை நீட்டிவிடுவதனால் பல விளைவுகள் - அவமானங்கள் ஏற்படுகின்றன. அறிவுக்கிரகமான சூரியன் - புத்திஸ்தானாதிபதியான புதன் ஏழாமிடத்திலிருந்து எட்டிப் பார்த்தபடி இருக்கின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுங்கள். புத்திவான் பலவான் அல்லவா? காணிபூமியில் பிரச்சினைகள் வந்துபோகும். நெஞ்சுநோ, கிருமித்தாக்கம், வயிற்றுநோ, இரத்த நோய்கள், விஷபீடைகள், உஷ்ண வருத்தங்கள் வரலாம். அரசியல், பத்திரிகை, கமிஷன், இரும்புவேலை, புடைவை, சமயல் போன்ற துறைகளுடன் சம்மந்தப்பட்டவர்களுக்கு. நன்மைகள் அதிகரிக்கும். புத்திரர்களோ, சகோதரர்களோ அதிகநன்மை - முன்னேற்றம் அடைய வாய்ப்புக்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள் - ஞாயிறு, புதன், வியர்ழன்.*

### தனுசு

விடிவெள்ளிபோன்று வடிவழகி வெள்ளி ஏழாமிடத்தில் சுழன்றுவரும் பொழுது கற்பனையில் ஆயிரம் கனவுகள் தோன்றி மறையும் காலமாகும். தொழில்ஸ்தானத்தில் அசுரகுரு சுக்கிரன் போன்று பல வித்தைகளை, திட்டங்களைக் கருவாக்கி உருவாக்குவீர்கள். எதிர்பாலாருடன் கொஞ்சம் நிதானமாக நடவுங்கள். அல்லது வீண்பழி - பகை சிலருக்கு ஏற்படலாம். இடுப்பு வலி, உஷ்ணபீடைகள் ,வயிற்றுநோ, வாய்வு வாதஉளைவு, பித்தமயக்கம். சிலரை வருத்தலாம். விவசாயம், மருந்து, பிரயாணம், குரு, சமய சாஸ்திரத் துறையினருக்கு தொழில் முன்னேற்றங்கள் ஏற்பட இட முண்டு.

## ஜோதிட சஞ்சீவி

நீங்கள் இக்காலத்தில் சட்டத்திற்குக் குற்றவாளியாகவும் தர்மத்திற்கு சுத்தவாளியாகவும் இருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் வரலாம். நிதானமாக நடவுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:-ஞாயிறு, திங்கள், புதன், வியாழன்.*

### மகரம்

நல்லவர்கள் முழுவதும் நல்லவர்களுமல்லர். கெட்டவர்கள் எப்பொழுதும் கெட்ட செயல் செய்பவர்களுமல்லர். அவர்களிடமும் நல்ல குணங்கள் இருக்கின்றன. ஒருவர் செய்த செயற்பாடுகளின் பலன் அவரின் பிற்பகுதியில் பிரதிபலிக்கும். இதை நீங்கள் அறியாதவரல்லர். தொழில்ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்த பலன்கள் நடக்கும். நண்பர்கள், எதிர்பாலார்கள் உதவி செய்வார்கள். குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். சொந்த பந்த உறவு தொடரும் பலன் உண்டு. திட்டமிட்ட செயற்பாடுகளால் நன்மைகள் ஏற்படும். வயிற்றுக்கோளாறு, நரம்புச்சோர்வு, அடிக்கடிகோபம், மனக்கவலை, அலைச்சலால் உடல் களைப்பு என்பன வரலாம். நீதி, நிர்வாகம், மதம், மருந்து, ரி.வி., நகை, பலசரக்கு, இரும்பு முதலிய துறையினருக்குப் பல வித மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. எதையும் கொஞ்சம் பார்த்து செய்வோம் எனச் சொன்னபடி இருப்பீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வியாழன்.*

### கும்பம்

என்ன கவலை?அதிகயோசனை? திட்டமிட்ட செயல் திடீரென நடக்கவில்லை என்ற ஏக்கமோ? பொறுத்திருந்து பாருங்கள். காணிபூமியில் வாகனத்தில் செலவுகள் அதிகரிக்கும். பொதுத்தொண்டு செய்து குறை கேட்பீர்கள். தொழிலால் பல வித மாற்றம், இலாபம் அதிகரிக்கும். அரச உதவி கிடைக்கலாம். இன ஜனங்களுக்காக ஓடியாடித்திரிவீர்கள். எதையும் துருவித்துருவி ஆராய்ந்து கண்டுபிடித்து விடுவீர்கள். உங்களையும், சுற்றுச் சூழலையும் அழகுபடுத்துவதில் அதிக நேரம் செலவு செய்தபடி இருப்பீர்கள். கைகால்பிடிப்பு, நெஞ்சுப் படபடப்பு, வரட்சித்தன்மை இருக்கும் வாயுத்தொல்லை சிலரை வாட்டும். விவசாயம், இரும்பு, நிர்வாகம், குருத்துறை, பத்திரிகைத் துறை, கமிஷன் செய்தித்துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்- திங்கள், வியாழன்.*

### மீனம்

சிலர் ஒட்டி நின்றும் பலர் எட்டி நின்றும் செயற்படுவார்கள். ஆனால் நீங்களோ ஓடி ஓடிச் செயற்படுவீர்கள். எதிலும் ஒரு வேகம். அதனால் தொழில்ஸ்தானத்தில் சிலநேரம் நம்பிக்கையீனம் ஏற்பட்டு மற்றவர்களின் பேச்சுக்கு ஆளாவீர்கள். சிரித்துக் கவர்ச்சியாக - நாசூக்காக - எவரையும் வசீகரித்துவிடச் சந்தர்ப்பம் ஏற்படும். மற்றவர்களின் குறைகளை பெரிது படுத்தினால் உங்கள் குறை மறையும் என எதிர்பார்க்கிறீர்களோ? குடும்பத்தில் கலகம்தான். எல்லை மீறிய உறவுகள் வெறுப்பைத்தராதா? சளித்தொல்லை, வாய்வு வாதப்பிடிப்பு, குடல், கல்லீரல், நாரிநோ வரும். கண்டபடி மருந்துகளை பாவியாது டாக்டரின் ஆலோசனைப்படி நடவுங்கள். அல்லது நரம்பைப் பாதிக்கும் அல்லவா? நகை, மருந்து, பாதுகாப்பு, நிர்வாகம், வியாபாரம் சம்பந்தப் பட்டவர்களுக்கு பல மாற்றங்கள் தேடி வரும். சிரித்துச் சிரித்து, காரியம் ஆற்றுங்கள். எதிலும் வெற்றி வரும்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வியாழன்.*

*

## குறள் வெள்ளம்

தக்கார் யார்? தகவிலார் யார்? எவர் மனதில் நேர்மையுடையார்? எவர்மனதில் கரவு குடிகொண்டிருக்கும்? இந்தப்பூனையும் பால் குடிக்குமா?

உடனடியாகக் கண்டுபிடிப்பது கடினம் என்று விட்டார் வள்ளுவர். மனதுக்குள் புகுந்து பார்ப்பது கடினமான காரியம்தான்.

காலம் பதில் சொல்லும்!

ஒருவருடைய நடை உடை பாவனைகளோ செயற்பாடுகளோ நெஞ்சிலே மறைந்திருக்கும் நேர்மையையோ கரவினையோ காட்டாமற் போகலாம்.

இவர் தகுதியுடையாரா? நெஞ்சிலே நடுவுநிலைமை கொண்டவரா? இல்லை ஒருபக்கம் - வாய்த்தபக்கம் சார்வாரா? என்று செயல்கள் உடனடியாக காட்டாமல் மறைத்துவிடலாம்.

ஆனால் அந்த நடிப்புமாயை கனகாலம் எடுபடாது.

அவரது எச்சங்கள் நாளை அவரது தகுதியைக் காட்டிவிடும். அவருக்குப்பின்னால் எஞ்சிநிற்கும் புகழும், பழியும், சந்ததியும் கூட மனநிலையை வெளிப்படுத்தி விடும்.

ஒருவரது செயல்களின் விளைவுகள் கூட அவரது மனநிலைக்கு ஏற்பவே சிறக்கும். அல்லது அழிவைத்தரும் என்றார் வள்ளுவர்.

நாளடைவில் உலகின் கண்களுக்கு எதையும் மறைக்க முடியாமற் போய்விடும் என்பதே உண்மை.


*தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
*எச்சத்தாற் காணப்படும்.*

-0114

நடுவுநிலைமை

*-அம்பிகைபாகன்.*

## பொன் அள்ளிய பொன்னப்பன்



பொன்னப்பன் என்றோர் இளைஞன் இருந்தான். எப்படியாவது பொருள் சேர்த்து உயரவேண்டுமென்ற விருப்புடன் ஒரு மந்திரவாதியை நாடி உபாயங்கேட்டான். "ஊர்க் கோடியிலுள்ள புளிய மரத்தில் ஏறித் தனித்திரு! விழித்திரு! பொன் கிடைக்கும்" என்று மந்திரவாதி சொன்னார்.

அன்று அமாவாசை இருட்டு. பொன்னப்பன் புளியமரத்தில் ஏறித் தனித்திருந்தான். விழித்திருந்தான். பொழுது படத்தொடங்கியது. இருண்ட மரக் கொப்பு ஒன்றில் அமர்ந்துகொண்டு விழாமல் இருக்க இன்னொரு கொப்பைக் கெட்டியாகக் கையால் பிடித்துக் கொண்டிருந்தான். நடு நிசியாகிக் கொண்டிருந்தது.

இரண்டு கள்ளர்கள் அந்தப் புளியமரத்தின் கீழ் வந்து உட்கார்ந்து, தாங்கள் களவெடுத்துக்கொண்டு வந்த பொன்னையும் மணியையும் பங்கிடத் தொடங்கினார்கள். இருவருக்குமிடையே கருத்து ஒற்றுமை வரவில்லை. திரும்பத் திரும்பப் பங்கீடு செய்து கொண்டிருந்தார்கள்.


**யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்**

மரக்கொப்பின் மேலிருந்த பொன்னப்பனுக்கு கடும் நித்திரை வந்தது. கண்ணயர்ந்துவிட்டான். மரக்கொப்பிலே பிடித்திருந்த கை நழுவியது. மரத்தின் மேலிருந்து தொப்பென்று ஒரு கள்ளனது முதுகின் மேல் விழுந்தான். "ஐயோ பூதம்" என்று சொல்லிக்கொண்டு இரு கள்ளரும் பொன்னையும் மணியையும் விட்டுவிட்டு ஓட்ட மெடுக்கத் தொடங்கினார்கள். பொன்னப்பன் அவ்வளவு பொன்னை யும் மணியையும் அள்ளிக்கொண்டு வீட்டுக்குப் போனான்.

-தொகுப்பு: கலாநிதி சபா.ஜெயராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பறவை உலகின் ஆண் அழகன்கள்"



ஆடும் ஆணழகன் மயில். முன்னால் பெண் மயில்.

பல பறவை இனங்களில் ஆண்கள் மிக அழகானவை: பளிச்சென்ற கவர்ச்சியான நிறங்களையும், பெரிய அழகான இறகுகளையும் உடையவை. பெண்கள் மந்தமான நிறங்களையும், அழகற்ற தோற்றத்தையும் உடையவை. தம் இனப் பெண்களைக் கவருவதற்கு ஆண்கள் பலதரப்பட்ட காதலாடல் காட்சிகளில் (Courtship Display) ஈடுபடும். தம் அழகிய தோற்றத்தையும், கவர்ச்சியான இறகுகளையும் விளம்பரப் படுத்துவதுடன், பல தரப்பட்ட நடன நிகழ்ச்சிகளிலும் ஈடுபடும். பெண்களைக் கவருவதற்கு இந்த ஏற்பாடு என்று கொண்டாலும், இயற்கை அன்னையின் நோக்கம் வேறு. பளிச்சென்ற நிறங்களையுடைய ஆண்கள் அவற்றின் எதிரிகளுக்குச் சுலபமாக புலப்பட, மந்தமான நிறைங்களையுடைய பெண்கள்

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

தப்பித்துக் கொள்கின்றன. இங்ஙனம் இனவிருத்திக்கு முக்கியமான பெண்கள் தப்பிக்க, இனம் அழியாமல் பாதுகாக்கப்படுகின்றது. பறவைகளுக்கு மாத்திரமல்ல, பொதுவாக விலங்குகளுக்கும் இது பொருந்தும். சாதாரண வீட்டுக் கோழிகளில் பேடுகள் எங்காவது அமைதியாகப் படுத்திருக்க சேவல்கள் அட்டகாசமாக ஆடி கண்களை மூடிக் கொண்டு கூவுவது வில்லங்கத்தை விலைக்கு வாங்குவதற்கென்றே கொள்ள வேண்டும்.

பறவை இனங்களில் ஆணழகன்கள் கோழி, மயில், வான் கோழி, தீக்கோழி, பெசன்ற் (Pheasant) பறவைகள் இன்னும் பல இனங்களில் காணப்படும். ஆயினும் பறவை உலகின் ஆண் அழகன்களாக யாழ் பறவையும் (Lyre Bird) சொர்க்கத்துப் பறவையுமே (Bird of Paradise) கருதப்படுகின்றன. இவை இரண்டும் ஆஸ்திரேலியாவுக்குரியவை. யாழ் பறவை அந்நாட்டின் தேசிய சின்னம். யாழ்ப் பறவையின் அழகான நீண்ட பல வர்ணங்களையுடைய வால் இறகுகள் ஆடலின் வேளை உயர்த்தப்பட்டிருக்கும் போது யாழ் வடிவத்தைத் தோற்றுவிக்கும். அதனால் அப்பறவைக்கு இப்பேர் சூட்டப் பட்டது.

சொர்க்கத்துப் பறவையின் பெயர் வந்த கதை வேறு. ஆதிவாசிகள் இப்பறவையைப் பிடித்து கால்களை நீக்கிவிட்டு இறகுகளுடன் தோலை உரித்து உலர்த்திப் பின் பறவையின் வடிவம் வரக்கூடியதாக பொதி செய்து வெள்ளையர்களிடம் 'இது சொர்க்கத்துப் பறவை. பூமியில் தரிப்பதில்லை. அதனால் தான் கால்கள் இல்லை.' - என்று கூறி நல்ல விலைக்கு விற்றார்கள். வெள்ளையர்களும் அதை நம்பி சொர்க்கத்துப் பறவை என்ற பெயரைச் சூட்டினார்கள். இது நடந்தது வெள்ளையர்கள் அங்கு குடியேறிய காலத்தில். கங்காருவின் பெயர் வந்த கதை இதைக் காட்டிலும் வேடிக்கையானது. மடியில் குட்டியைச் சுமந்து கொண்டு குதித்துக் குதித்தோடும் விநோத விலங்குகளைக் கண்டு இது என்ன விலங்கு என்று ஆதிவாசிகளிடம் வினவ அவர்களும் "கங்காரு" எனப் பதிலளித்தார்கள். அதனால் அப்பிராணிகளுக்கு கங்காரு என்ற பெயர் வந்தது. ஆயினும் ஆதிவாசிகளின் மொழியில் "கங்காரு" என்றால் "எனக்குத் தெரியாது" என்று அர்த்தம். இவ்விடயம் பின் தெரியவந்தும் காங்காரு என்ற பெயர் நிலைத்து விட்டது.



ஆண் "யாழ் பறவை" (LYREBIRD) தன் அழகான இறகுகளை விளம்பரப்படுத்துகின்றது.

இதைச் சொல்லும் போது வெள்ளையர்கள் தொடர்பான ஒரு வேடிக்யையான கதை ஞாபகத்துக்கு வருகின்றது. சென்னைப் பட்டினத்துக்கு அக்காலத்தில் வந்த ஒரு வெள்ளைக்காரன் பட்டினம் பார்க்கவென்று ரிக்ஷாவில் சென்றானாம். அவனுக்குத் தமிழ் தெரியாது. ரிக்ஷாகாரனுக்கு ஆங்கிலம் தெரியாது. இருந்தும் ஏதோவொரு போக்கில் சம்பாஷணை நடந்தது. அதை நேரிடை வர்ணனையாகக் கவனிப்போம். ரிக்ஷாவில் போய்க் கொண்டிருக்கும் போதே இது நிகழ்ந்தது.

"Whose Factory is this?"

"தெரியாது"

சிறிது தூரத்தில் "Who Built this School"?

"தெரியாது"

மேலும் சிறிது தூரம் சென்ற பின் Whose Palatial House is this ?"

"தெரியாது?"


இப்படியே வினாவும் விடையும் அமைய, ஒரு மரண ஊர்வலம் வந்தது. "Whose funeral Procession is this?"

"தெரியாது?"

"Oh my God! The Great Philonthropist 'theriyathu' has died, Stop Man Stop." - என்று கூறி ரிக்ஷாவில் இருந்து குதித்து தொப்பியை அகற்றி குனிந்து நின்று "தெரியாதவருக்கு" மரியாதை செலுத்தினாராம் அந்த வெள்ளையர்.


-குகன்-

அலம்பியது போதும். இனி விடயத்துக்கு வருவோம். காதலாடலின் போது ஆண் யாழ் பறவை கற்களையும் சுள்ளிகளையும் கொண்டு ஒரு சிறிய குன்றை ஏற்படுத்தி அதன் மேல் ஏறி நின்று கொண்டு ஆடும். வால் இறகுகளை விரித்து அவற்றைக் குலுக்கிக் கொண்டு ஆடும். இது ஓர் ஆடலழகன் மாத்திரமல்ல, அனுகரணத்திலும் (Mimicry) சிறந்தது. சாதாரணமாக காடுகளுக்குரிய சகல பறவைகளின் ஒலிகளையும் இது எழுப்பும் - சுருதி சுத்தமாக. இது மாத்திரம் அல்ல. நாயைப் போல குரைப்பது, விறகு வெட்டியின் கோடரி ஒலியை எழுப்புவது, மரங்கள் உராயும் போது ஏற்படும் நெரிடும் சத்தத்தை எழுப்புவது, மரங்களை வெட்டி வீழ்த்தப் பயன் படுத்தப்படும் வட்ட மின்வாளின் அலறல் ஒலியை எழுப்புவது போன்ற குரல் விளையாட்டுக்களும் இதன் அனுகரணப் பட்டியலில் அடங்கும். பல சுருதிகளில் மெல்லியதாக ஒலிக்கும் சொந்தக் குரலுமுண்டு. பெண் பறவை பெண்மயில் போல் மந்தமான அழகுடையது.



தீக்கோழித் தம்பதிகள் -அழகானது ஆண் வலப்புறத்திலுள்ளது.

யாழ் பறவையின் ஆடலரங்கு தரையிலிருக்க, சொர்க்கத்துப் பறவையின் ஆடலரங்கு மரக்கிளைகளில் இருக்கும். இது சிறப்பாக நியூகினி நாட்டுக்குரியது. ஆண் பறவை மிகவும் அழகானது. அதன் நெடிய வாலும் இறகுகளும் மிகவும் அழகானவை. ஆண் பறவை ஏற்றதொரு மரக்கிளையைத் தேர்தெடுத்து, குனிந்த நிலையில், செட்டைகளை விரித்து அடித்துக்



காட்டுக்கோழிச் சேவல்



ஆண் சொர்க்கத்துப் பறவை.

கொண்டும் வால் இறகுகளை உயர்த்தி அசைத்துக் கொண்டும் முன் பின் நகர்ந்தும் ஆடும். தன் அழகு அனைத்தையும் விளம்பரப்படுத்தும் வகையில் காதலாடலில் ஈடுபடும். ஆடல் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். பெண் அதே கிளையில் அல்லது பிறிதொரு கிளையில் அமர்ந்து காட்சியை ரசித்துக் கொண்டிருக்கும். ஆடலில் சிறந்த வித்துவானுக்கு பெண்ணின் நேயம் கிடைக்கும் என்பதில் வியப்பேதுமில்லை.

யாழ் பறவையும், சொர்க்கத்துப் பறவையும் அடர்த்தியான காடுகளுக்குரியவை. மனிதனின் கண்களில் சிக்குவது மிக அருமை. அதனால் இவற்றின் சரியான எண்ணிக்கை தெரியாது. பெண்களின் ஆடம்பரத் தொப்பிகளுக்கு இவற்றின் இறகுகள் பயன்டுத்தப்பட்ட காரணத்தால் இவற்றின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து, சில பிரதேசங்களில் இவை முழுமையாக மறைந்து விட்டன. ஆயினும் இப்பொழுது சிலவற்றுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் இவற்றின் தொகை அதிகரித்திருக்கலாம் என்றும் இவை அழிந்து படும் நிலை இல்லை என்றும் நம்பப்படுகின்றது.

மனிதன் தன்னை அலங்கரிப்பதற்காகப் பிற பிராணிகளின் எண்ணிக்கையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவது



"சொர்க்கப்பறவைகள்" (BIRD OF PARAD… ஆண் ஆடுகின்றது, பெண் அவதா… கின்றது.

நல்லதல்ல. தொப்பிகளுக்கு பலதரப்… பறவைகளின் இறகுகளைப் பயன்படுத்… முடிகளுக்குத் தீக்கோழி இறகுகளைப்… படுத்துவது, டம்பப் பைகளுக்கு சிறு… மான், புலி, பாம்பு, முதலை ஆகியவ… தோல்களைப் பயன்படுத்துவது, கம்… சட்டை (Fur Coat)களுக்கு, மிங்க் (M… ஏர்மைன் (Ermine), விக்குனா (Vic… வெள்ளிநரி (Silver Fox) போன்ற பல வி… களின் தோல்களைப் பயன்படுத்துவ… இப்பட்டியலை நீட்டிக் கொண்டே போக… அது நீண்டு கொண்டே போகும். மனி…

இப்போக்கினால் பல விலங்கினங்கள்… கோளிலிருந்து மறைந்துவிட்டன. பல ம… தறுவாயில் உள்ளன.

எத்தனையோ சட்டதிட்டங்களி… விலங்குகளைக் களவாடுவதை … தடுக்க முடியவில்லை. சில நூற்… ளுக்கு முன் தம் இனத்தையே இ… பயன்படுத்தியிருக்கின்றான் மனிதன். … பியர்கள் அமெரிக்… குடியேற ஆரம்பித்… கட்டத்தில் எதிர்த்… விந்தியர்களை எ… கொன்று குவித்து … களின் மார்பகத் … பணப்பைகள் … அதைப்பெருமையாக… டித் திரிந்தார்கள். … தியர்களோ தாம் … வெள்ளையர்களின் … யில் ஓட்டுடன் ஒரு … முடியை வெட்டி… பட்டியில் இணைத்… பில் கட்டித் திரிந்… செவ்விந்தியர்கள் … இன எதிரிகளுக்கு… னையே செய்தார்கள். காரணம் அ… செய்வதனால் தாம் கொன்றவர்களி… தங்களுக்கு வரும் என்று கருதினார்க… னால் ஒரு போர் வீரனின் இடுப்பு… யிலுள்ள மயிர்க் கற்றைகளை எண்ணி… கொன்ற எதிரிகளின் எண்ணிக்கையை … கொள்ள முடியும். செவ்விந்தியர்களி… யோடு கழற்றும் (Scalping) செயலை… மேலைநாட்டவர்கள் நிறைய எழு… கிறார்கள். ஆனால் மார்பகப் ப… தொடர்பாக அவ்வளவு தூரம் … கொள்ளவில்லை. மனிதாபிமானமும், … யானது போலும். பூமியில் முதன்மு… தோன்றிய உயிரியிலிருந்து கடை… தோன்றிய மனிதன்வரை DNA தொட… - ஆனால் மாற்றங்களுடன் - கடத்த… கொண்டே வருகின்றது. அதனால் சக… களும் பரம்பரைக்குரிய வகையில் இ… களே. இதை மனிதன் உணரும் … என்றோ?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# தெரியுமா?

1) நானும் நண்பனும் திரையரங்குக்குப் போனோம். வழியில் எதிரில் ஏழுமலை வந்தான் - தன் ஏழு மகன்களுடன். ஏழு மகன்களும் ஏழு மனைவியருடன் இருந்தனர். ஏழு மனைவியரும் ஏழு குழந்தைகளை வைத்திருந்தனர். திரையரங்குக்குப் போனவர்கள் எத்தனை பேர்?


2)

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 1 |
| | | | | 4 |
| | | | | |
| | | | | |
| 3 | | 2 | | |

மேலே உள்ள அட்டவணையில் வரிசைக்கு ஐந்து வீதம், ஐந்து வரிசைப் பெட்டிகள் உள்ளன. ஒன்று முதல் ஐந்து வரையான எண்களைக் கொண்டு இந்தப் பெட்டிகளைப் பூர்த்தி செய்யவேண்டும். ஒவ்வொரு எண்களையும் ஐந்து, ஐந்து தடவைகள் பயன்படுத்தலாம். ஆனால் மேலிருந்து கீழாகவோ, இடமிருந்து வலமாகவோ, மூலைக்கு மூலையாகவோ பார்க்கும் போது ஒரு வரிசையில் ஒரே எண் மறு முறை வரக்கூடாது. நான்கு எண்களை நாமே நிரப்பி விட்டோம். மீதியுள்ள பெட்டிகளை நீங்களே நிரப்புங்கள் பார்க்கலாம்.


3) 


மேலே உள்ள படத்தில் பாதை ஒன்றின் தடம் காட்டப்பட்டுள்ளது. A யிலிருந்த புறப்பட்டு B க்குச் செல்ல வேண்டும். ஆனால் எல்லாப் பாதைகளிலும் நடந்திருக்க வேண்டும். ஒரு முறை தான் நடந்த வழியில் மறுபடியும் திரும்ப நடக்கக் கூடாது. எங்கே நடந்து காட்டுங்கள் பார்க்கலாம்.

4) 

இதுவும் ஒரு பாதைப் புதிர்தான். ஒரு நந்தவனத்தில் அமைந்துள்ள பாதைகளைப் படத்தில் காண்கின்றீர்கள். நந்தவனப் பாதை முழுவதும் சுற்றிவர வேண்டும். போன வழியில் மறுபடியும் போகாமல், கடந்த பாதையின் குறுக்கே தாண்டிப் போகாமல் - நடப்பதற்கு வழி காட்டுங்களேன் பிளீஸ்.


## பாகங்களைப் பொருத்துங்கள்




இங்கே தரப்பட்டுள்ள இரு ஜாடிகளினதும் உடைந்த பாகங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பொருத்தமான பாகங்கள் எவை எனக் கண்டு பிடித்து சரியான இடங்களில் பொருத்துங்கள் பார்க்கலாம்!

(விடை XV ஆம் பக்கத்தில்)


# எத்தனை?



1) மேலே உள்ள படத்தில் எத்தனை சதுரங்கள் உள்ளன?




2) மேலே உள்ள படத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?



3) மேலே உள்ள படத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?
(விடை XV ஆம் பக்கத்தில்)

## சிறுவர் சுடர்


# கண்டு பிடியுங்கள்



ஒழுங்குவரிசைப்படி புள்ளிகளை இணைத்து இங்கு ஒழிந்திருப்பது யார் என்று கண்டுபிடியுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை பிடித்த காகம்



முன்னொரு காலத்தில் பேராசை பிடித்த காகம் ஒன்று வாழ்ந்து வந்தது. தன்னைக் காட்டிலும் மற்றவர்கள் எல்லோரும் மிகவும் வசதியாக இருந்து வருவதாகவே அதற்கு எப்போதும் தோன்றியது.

ஒரு முறை அது இரு முட்டைகளை இட்டது. என்றாலும் அவை மிகவும் குறைவான எண்ணிக்கையாக இருப்பதாக அதற்குத் தோன்றியது.

காகத்தின் கூடிருந்த மரத்திற்கு அடுத்த மரத்தில் கழுகு ஒன்று வாழ்ந்து வந்தது. காகம் முட்டையிட்ட அதேவேளை கழுகும் முட்டையிட்டிருந்தது. இதனை அறிந்த காகம் கழுகு இரைதேடத் தன் கூட்டைவிட்டுப் பறந்து செல்லும் வரைக் காத்திருந்தது. அதன் பின் அதன் கூட்டுக்குள் புகுந்து இரண்டு முட்டைகளைத் திருடித் தன் கூட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தது. அவற்றைத் தான் இட்ட முட்டைகளோடு சேர்த்து அடைகாத்து வந்தது. விரைவிலேயே முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவந்தன. காகம் அந்தக் குஞ்சுகளுக்கு இரைதேடிக் கொடுத்து அவற்றைப் பேணி வந்தது. காக்கைக் குஞ்சுகள் சீக்கிரமே வளர்ந்து விட்டன. விரைவில் அவை கூட்டை விட்டுப் பறந்து செல்லவும் தொடங்கின. காகம் அடைகாத்து பொரித்தெடுத்த கழுகுக் குஞ்சுகளும் வளர்ந்தன. அவை முதலில் காக்கைக் குஞ்சுகளைக் கொன்று தின்றன. பிறகு அந்தக் காகத்தையே தின்று விட்டன.

பேராசை கொண்டதற்காக அந்தக் காகம் இவ்வாறு தான் தண்டிக்கப்பட்டது.

*கி.கல்கிராஜ்.*
(தரம்-8, மானிப்பாய் இந்துக்கல்லூரி.)

# யாரோ?

கண்ணிற்கு ஒளி கொடுத்த
கலைஞனவன் யாரோ? - அந்த
வெண்ணிலாவை எட்டாது
வைத்தவனும் யாரோ?

பசுமையினை உலகிற்கு
பரிசளித்தவன் எவனோ? - அந்த
விசும்பைக்கூட நீலமாக்கி
விட்டவனும் எவனோ?

பந்து போன்ற உலகைப்
படைத்தவனும் எவனோ - அதை
விந்தையாகச் சுழல
விடுபவனும் எவனோ?

மறையவரும் மக்களும்
மற்றவரும் போற்றுகின்ற - அந்த
இறைவனவன் தானே - இனிமை
கொடுப்பதவன் சாலே!

*வி.உ.தேஸ்*

# விடுகதை

1. அறிவைப் புகட்டுவான். ஆனால் பேசமாட்டான். அவன் யார்?
2. பூக்காது, காய்க்காது. ஆனால் வெட்ட வெட்ட வளரும். அது எது?
3. வாயால் வாங்கி வயிற்றால் கொட்டுவான். அவன் யார்?
4. கையுண்டு விரலில்லை. கழுத்துண்டு தலையில்லை. அவன் யார்?
5. நாக்கிலே கயிற்றுடன் தூக்கிலே தொங்குகிறான். அவன் யார்?

*விடைகள்:-*

1. புத்தகம் 2. தலைமயிர் 3. தபால்பெட்டி
4. சட்டை 5. கோயில்மணி

# பாப்பாவுக்கு ஒரு நாள் கழிகிறது...

மகிழ்ச்சியான கனவிலே திளைத்திருந்த பாப்பாவுக்கு, அம்மாவின் அதட்டலான அழைப்புக் குரல் நாராசமாய் விழுந்தது. அவளின் இனிய கனவினை அது கலைத்து; நனவுலகுக்கு இழுத்து வந்தது.

"பாப்பா! பாப்பா!! எழும்பு... எழும்படி, நேரம் ஐஞ்சாச்சு"

பாப்பா சோம்பல் முறித்தபடி படுக்கையில் இருந்து எழுந்தாள். அவள் எழும்புவதற்கே காத்திருந்தது போல சுவர்க்கடிகாரத்திலிருந்து வெளிப்பட்ட சின்னக்குருவி ஐந்து தடவை கடிகாரத்தை கொத்தி ஒலி எழுப்பிவிட்டு மறைந்து போகிறது. லண்டனில் இருந்து மாமா அனுப்பி வைத்த கடிகாராம் அது! வந்த நாளிலிருந்து நாள் தவறாது தனது இன்பக்கனவுலகை அது கலைத்துச் சிதைப்பதனால் அதன் மீது பாப்பாவுக்கு அளவு கடந்த வெறுப்பு..... கோபம்!

ஆனால் வெறுப்பையும் கோபத்தையும் தன்னுள்ளே விழுங்கிக் கொள்வதைத் தவிர அவளால் என்னதான் செய்ய முடியும்? அம்மா என்ற பற்றரியின் இயங்கு விசையால் அந்தக் கடிகாரக்குருவி இயங்குவது போல இயங்குவதற்கென்றே பிறந்தவள் அவள்!

அம்மா அப்பாவுக்குச் செல்லப் 'பாப்பா' ஆகவும் கல்லூரி ஆசிரியைகளுக்கு 'மகிழினி' ஆகவும் சக மாணவிகளுக்கு 'மகிழ்' ஆகவும் விளங்கும் அந்தச் சிறுமி, வேண்டா வெறுப்போடு சென்று தனது படிப்பு மேசையின் முன்புள்ள நாற்காலியில் அமர்ந்தாள்.

தூக்கம் முற்றாகக் கலையாது தேங்கிவிட்ட கண்களைத் திறப்பதே பெருஞ்சிரமமயிருந்தது. திறந்த விழிகளைப் பாடப் புத்தகத்தின் ஒவ்வொர் எழுத்தும் பூதமாய் மாறிப பயமுறுத்தியது. ஆனாலும் அவள் ஆறரை மணி ஆகும் வரை அங்கிருந்து அசைய முடியாது. படித்தே ஆக வேண்டும்.

படிப்பது போல் பாசாங்கு செய்யவும் முடியாது.

அம்மாவின் கண்களும் காதுகளும் சர்வவல்லமை படைத்த கடவுளுடையவை போல சர்வவியாபகமானவை என்பது பாப்பா அனுபவ பூர்வமாகப் பெற்ற முடிவு!

அன்றன்றைக்குரிய பயிற்சிகளைச் செய்து முடிக்காவிட்டால் அம்மாவின் பயங்கர கோபத்துக்கு ஆளாக நேரிடும்; 'பரதேசி','மொக்கு', 'மூதேவி' என்று லட்சார்ச்சனையில் இறங்கிவிடுவாள்!

பாப்பா புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடையாவிட்டால் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தலையிறக்கம், கௌரவக் குறைச்சல் ஏற்படுமாம்.

அப்பா வங்கிக்கிளை ஒன்றில் முகாமையாளர். அம்மா பாடசாலை அதிபர். அவர்களுக்கு தங்கள் ஏக புத்திரி தங்களிலும் சிறந்த படிப்பாளி என்று பெயர் எடுப்பது மட்டும் தான் நோக்கம் அல்ல. அப்பாவின் வங்கியிலே சிற்றூழியனாய் உள்ள முத்தையாவின் மகன், சென்ற ஆண்டு புலமைப்பரிசிற் பரீட்சையில் சிறப்பாகச் சித்தி பெற்றதற்காக அவன் வாய் எல்லாம் பல்லாய் வந்து, வங்கி ஊழியர்களுக்கு 'கன்டோஸ்' வழங்கிக் கொண்டாடியது இவர்களுக்கு பெரும் மன உறுத்தல். சாமானியனின் மகன் சிறப்புச் சித்தி பெற்றால் சகல வசதிகளும் படைத்த தங்களின் ஏகபுத்திரி யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே முதன்மைச் சித்தி பெறவேண்டாமா? அந்த வெற்றியை அவர்கள் பெரிய 'பார்ட்டி' கொடுத்துக் கொண்டாடாவிட்டால் அவர்களின் கௌரவம் என்னாவது?


* * *

பக்கத்து வீட்டுச் சேவல் பெருங்குரல் எடுத்து விடியலைக் கூவி அழைக்கின்றது.

வெள்ளைவெளேர் என்ற பால் வண்ண மேனியும் இரத்தச் செம்மையோடு கூடிய சொண்டும் உள்ள அந்தச் சேவல் கம்பீரமாய் நடந்து வருவதைக் காணப் பாப்பாவுக்கு கொள்ளை ஆசை. நான்கு பக்கச் சுவர்களுக்கிடையே அடைக்கப்பட்டுக் கிடக்கும் அவளுக்கு அந்தக் காட்சி என்றைக்கும் கானல் நீர்தான்.

காலைக் கதிரொளியிலே பொன் மணிகளாய் நெல்மணிகளைச சுமந்து கொண்டு மெல்லிய காற்றின் தழுவலிலே கிறங்கிப்போய் அசைந்தாடும் நெற்கதிர்கள் அவளின் சின்னஞ் சிறிய உள்ளத்திலே ஏற்படுத்தும் களிப்பினை என்ன என்பது?

பக்கத்து வீட்டுப் பிள்ளைகளோடு கிளித்தட்டு, கெந்தல், கொக்கான், பசுவும் புலியும் விளையாடுகையில் ஏற்படும் உற்சாகம், அம்மா



பழக்கும் பார்மின்ரனில் அவளுக்கு என்றும் உண்டானதில்லை.

சென்ற ஆண்டு விடுமுறைக் காலத்தில் கண்டி சென்று அங்கு கண்ட அழகிய இயற்கைக் காட்சிகளிலே நெஞ்சைப் பறிகொடுத்தது இன்றும் நினைவில் பசுமை அழியாது நிலைத்திருக்கின்றது. பாப்பாவின் உள்ளத்திலே பொங்கிப் பூரித்து விரிகின்ற சின்னச் சின்ன ஆசைகள் பெரும்பாலும் நிறைவேறாமல் போவதுதான் வழக்கம்!

* * *

பாப்பா மேசையிலே புத்தகத்தை விரித்த நிலையில் இன்னும் பாதிக் கண்களை மூடியபடியே கற்பனையுலகில்தான் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

'நங்' என்ற சத்தத்துடன் அவளின் தலையிலே பலத்த குட்டு! அம்மாவின் இந்த எதிர்பாராத தாக்குதல் அவளை நிஜ உலகுக்கு அழைத்து வந்தபோது தலையில் ஏற்பட்ட கொடிய வலி அவளை பதைபதைத்துக் கிறுகிறுக்க வைத்தது.

பாடசாலையில் அன்று நடைபெறப்போகும் ஆங்கிலப் பேச்சுப் போட்டியின் முதற்சுற்றுக்கு ஆயத்தம் செய்யாமல், மகள் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு தூங்கி வழிகின்றாளே! அந்த ஆதங்கத்தின் வெளிப்பாடுதான் பலமான அந்தக் குட்டு.

பாப்பாவின் விழிகளிலே நீர் முத்துக்கள் உருண்டோடின அம்மாவின் செய்கை சினத்தைக் கிளப்பியது.

அவள் சிறுமிதான். ஆனால் பெரும் பிடிவாதக்காரி. கைகால்களை உதறியபடி விம்மிப் பொருமிய வண்ணம் ஓடிச் சென்று கட்டிலில் சுருண்டு படுத்து விட்டாள்.

இனி அம்மா என்ன? ஆண்டவனாலும் அவளை அசைக்க முடியாது.

அம்மாவின் கோபம் ஆரோகண கதியில் ஏறியது.

சமையல் வேலை ஒரு புறம். கடமைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் மறுபுறம்.

அதிபர் வேலைப்பளு, கணவனின் ஒத்தாசையின்மை, இத்தனைக்குமிடையே மகளின் குணமறிந்தும் அவளைச் சீண்டிவிட்ட குற்ற உணர்வு, அதிகாலைப் பொழுதிலே அவளின் தலையைப் பதம் பார்த்ததால் வந்த கழிவிரக்கம்... எல்லாமாகச் சேர்த்து அவளின் [illegible] கணவன் மீது திசை திருப்பிவிட்டன.

வங்கியிலே முதல் நாள் மாலையில் இடம்பெற்ற பிரியாவிடை ஒன்றில் கலந்து கொண்டு, இரவு ஏழு மணியளவில் நிறைவெறியோடு வந்து படுத்தவர்தான். தலையணை ஒன்றைத் தழுவியபடி இன்னும் குறட்டை விடுகிறார்.

"இங்கையப்பா. உங்கடை செல்லப்பிள்ளையின்ர திமிரைப் பாருங்கோ. அவ இண்டைக்குப் பள்ளிக்கூடம் போகாமல் மட்டம் போடப் பிளான் போடுகிறா. வந்துபாருங்கோ"

அம்மாவின் குரல் அப்பாவின் காதைக் குடைந்தது. எரிச்சலும் சலிப்புமாய் அவர் உருண்டு மறு பக்கம் படுத்தார்.

"பிள்ளையைத் தலையில வைத்துக்கூத்தாடிறதும் நீர்தான். இப்ப குட்டிப் போட்டு அவளை அழவைச்சதும் நீர்தான். எனக்கேன் சொல்லுறீர்? நீர்பாடு, உம்முடைய பிள்ளை பாடு." அப்பா தொடர்ந்து பேசவுமில்லை; படுக்கையிலிருந்து எழுந்து வரவும் இல்லை.

"என்கென்ன? அவள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும். நீங்கள் குசாலாய் நித்திரை கொள்ளுங்கோ."

விரக்தியின் விளிம்பில் தகப்பனையும் மகளையும் ஏசிவிட்டு அம்மா அடுக்களைக்குள் நுழைந்து விட்டாள்.

* * *

பாப்பாவுக்கு அப்பாவிலும் அம்மாவிலும் கோபம் கோபமாய் வந்தது. தன்னில் அவர்களுக்கு அன்பு இல்லை; அக்கறை இல்லை என்று அவ்வேளையில் அவள் நினைத்துக் கொண்டாள்.

"நான் காய்ச்சலாய் படுத்திருக்க வேணும். இவையின்ர நடப்பு அப்ப தான் தெரியும். இண்டைக்கு அம்மா எவ்வளவு கெஞ்சினாலும் சாப்பிடவே கூடாது." என்று அவள் உறுதி செய்து கொண்டாள்.

ஆனால் பாடசாலைக்குப்போவது?

* * *

இந்த ஆர்ப்பாட்டத்தில் மணி 6-30ஐத் தொட்டுவிட்டது. 7-15க்கு பஸ் நிலையம் சென்றால் மட்டுமே பாடசாலை பஸ்ஸில் இடம் கிடைக்கும்.

பாப்பா பரபரப்போடு எழுந்தாள். இன்று பாடசாலை போகாவிட்டால் நாளை லீவுக் கடிதம் இல்லாது வகுப்பாசிரியை வகுப்புக்குள் அனுமதிக்க மாட்டா. அம்மா கடிதம் தருவதும் சந்தேகம்தான். அதனோடு இன்று அவளின் பிரியதோழி அவளுக்கு ரோஜாப் பூக்கள் கொண்டு வந்து தருவதாக உறுதி அளித்திருக்கிறாள்.

வகுப்பாசிரியையின் கண்டிப்பும், தோழியின் ரோஜாப் பரிசும் பாப்பா பள்ளி செல்ல வேண்டும் என்பதை முடிந்த முடிவாக்கிக் கொள்ள வைத்தன.

எழுந்தாள்; அவசரம் அவசரமாக காலைக் கடன்களை முடித்தாள். வழக்கமான குளிப்பு அன்று இல்லை. அம்மாவின் உதவிகளையும் நாட முடியாது.

[illegible] முகம் கழுவி, விபூதி பூசி, [illegible] தெய்வங்களுக்கு சலாம் போட்டு, அரைகுரையாகப் பவுடரை முகத்தில் அப்பி, தனக்குத் தெரிந்தபடி தலைவாரி, பாடசாலைச் சீருடை அணிந்து, பள்ளிக்குப் புறப்பட நேரம் 7-00 என்று காட்டியது.

அம்மா சாப்பிட அழைத்தாள்.

"உங்கட சாப்பாட்டை நீங்களே சாப்பிடுங்கோ." என்று சீறி விழுந்து விட்டு, புத்தகங்களை அவசரம் அவசரமாகப் பைக்குள் திணித்துக் கொண்டு பஸ் நிலையம் நோக்கிப் புறப்பட்டு விட்டாள்.

அம்மா பலவந்தமாகத் தந்த சாப்பாட்டுப் பெட்டியைப் பெற்ற பொழுது அதன் கனத்திலிருந்து காலை, மதியம் இரு நேரங்களுக்குமான சாப்பாடு அதனுள் இருப்பது தெரிந்தது. எனினும் மதிய இடை வேளைக்கு முன்பு சாப்பாட்டைத் தொடக்கூடாது என்று தீர்மானித்தக் கொண்டாள்.

அம்மாவுக்கு 'றற்றா' காட்டாமல் புறப்படுவது என்னவோ போலிருந்தாலும் அவவின் கண்களிலே நீர் திரளுவதைக கடைக்கண்ணால் பார்த்த போதிலும் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு பாப்பா பஸ் நிலையத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

* * *

பாப்பா விழுந்தடித்துக் கொண்டு பஸ் நிலையம் வந்த போது பாடசாலை பஸ் புறப்படத் தயாராயிருந்தது. "ஏதோ வீட்டில வேலை செய்து கொட்டிற மாதிரி வாற நேரத்தைப்பார். இண்டைக்கு உம்மாலே ஐந்து நிமிஷம் லேற்" என்று பஸ் நடத்துநரின் முணுமுணுப்பைப் பொருட்படுத்தியும் பொருட்படுத்தாமலும் அவள் பஸ்ஸில ஏறி மாணவக் கிழங்கடுக்கினுள் தானும் ஒருத்தி ஆனாள்.

இதுவரை அடக்கியிருந்த அழுகை மீறிக் கொண்டு வெளிவருவேன் என்று பயமுறுத்தியது. மிகுந்த சிரமத்துடன் அடக்கிக்கொண்டாள்.

பஸ் செல்லும் வழியில் சில மணித்தியாலயங்களுக்கு முன்புதான் 'கிரனைட்' விசப்பட்டதால் ஏற்பட்ட பதகளிப்பு இன்னும் அடங்கவில்லை. அதனால் வழியிலுள்ள பல பரிசோதனை முகாங்களிலும் பஸ்ஸில் இருந்து இறங்கி ஏறிச் செல்ல வேண்டியதாயிற்று.

ஒருவாறு பஸ் தரிப்பிடத்தில் இறங்கி ஓட்டமும் நடையுமாகப் பாடசாலை சென்றடைந்த பொழுது நேரம் 8.35.

பிரார்த்தனை முடிந்து வகுப்புக்கள் தொடங்கி ஐந்து நிமிடங்களாகி விட்டன.

நேரம் பிந்தி வந்ததனால் வகுப்பாசிரியை வகுப்பறையின் வெளியிலே முதற்பாடம் முடியும் வரை பாப்பாவை நிற்குமாறு பணித்தாள்.

பசிக்களை, பஸ்ஸில் நசுங்குண்டகளை, ஓடியும் நடந்தும் வந்த களை எல்லாமாகச் சேர்ந்து அவளை அலைக்கழித்தன. கால்கள் கெஞ்சின.

ஆனால்...... இன்னும் நாற்பது நிமிடங்களுக்கு அவள் நின்றே ஆக வேண்டும்......நின்றாள்.

* * *

வகுப்பில் நுழைந்ததும இரண்டாவது பாடம் தமிழ். அவள் ஆசிரியை முதல் நாள் தந்த பயிற்சிகளைச் செய்து வரவில்லை. ஆசிரியையின் ஏச்சுக்கு உள்ளானாள். முன்னரே நொந்து கிடந்த அவளின் பிஞ்சு உள்ளம் வகுப்பறையில் தனக்கு ஏற்பட்ட அவமானத்தால் வெதும்பிப் போயிற்று.

அடுத்து வந்த ஆங்கிலப் பாடமும், தொடர்ந்த இரு பாடங்களும். ஆங்கிலப் பேச்சுப் போட்டி முதற் சுற்றுக்கென ஒதுக்கப்பட்டன.

ஒவ்வொரு தடவையும் ஆங்கிலப் பேச்சில் முதலாவதாகவோ அல்லது இரண்டாவதாகவோ வருவதை வழக்கப்படுத்திக் கொண்ட பாப்பாவால் இன்று அது கூடவில்லை. அம்மாவின் அச்சுறுத்தலால் பேச்சினைக் கரைந்த பாடமாய் ஆக்கியிருந்த போதிலும் மனக்களைப்பும் உடற்களைப்பும். சேர்ந்து இன்று இவளை ஐந்தாம் இடத்துக்குத் தள்ளிவிட்டன.

வெளிப்பட அழுவதற்குக் கூசி, குமுறிக்குமுறி பாப்பா மனத்திற்குள்ளேயே அழுதாள்.

தோழியின் ஆறுதல் மொழிகளும் அவள் தந்த ரோஜாப் பூக்களும் அவளின் கவலை நோவுக்கு ஒத்தடம் கொடுக்கத் தவறிவிட்டன.

இடைவேளையில் சாப்பாடும் கசந்தது. அதன் பெரும் பகுதியை வெளியே வீசிய பொழுது வழக்கமாகச் சூழ்ந்து வெளியிலே காத்திருக்கும் காகங்கள், சாப்பாடு நிலத்தில் விழ முன்பே 'லபக்' என்று கௌவிக் கொண்டன. பக்கத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த தோழி. 'வெல் கோட் கேள்ஸ்' (Well Caught Girls) என்று சொல்லிச் சிரித்ததும் அவளுக்கு இரசிக்கவில்லை.

இடைவேளைக்குப் பின்பும் நடந்த பாடங்களும் அவளின் மூளைக்குச் செல்லவில்லை. அவளின் சோர்ந்து களைத்த முகத்தைக் கண்டு, சூழல் பாட ஆசிரியை காரணம் கேட்ட போழுது. 'தலைவலி' என்று கூறிச் சமாளிக்க நேர்ந்தது.

ஒருவாறு 2-30 க்கு பாடசாலை விடும் மணி அடித்ததும், பாடசாலை வாசலில் நின்ற பஸ்ஸில் ஏறிக் கொண்ட பொழுது, பாப்பா முற்றாகக் களைத்துப் போயிருந்தாள். பஸ் சாவகச்சேரி பஸ் நிலையத்தை அடைந்த பொழுது நேரம் 3-30 மணி.

பாப்பா வீட்டை அடைந்த பொழுது அம்மா இன்னும் பாடசாலையிலிருந்து வந்து சேரவில்லை. இன்று பாடசாலையில் ஆசிரியர் கூட்டம் என்று அவ் அப்பாவுக்கு நேற்று மாலை சொன்னது நினைவுக்கு வந்தது. பாப்பாவுக்கு எல்லாமே சலித்தன. வெறுத்தன.

**சொ.வாசுகி**

இந்தச் சலிப்பினையும் வெறுப்பையும் அதிகரிக்கச் செய்யும் வகையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு அவளைத் ஆயத்தம் செய்துவிட ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஆசிரியரும் வந்து சேர்ந்தார்.

உடைமாற்றி, முகம்கால் கழுவி, தாகத்தைத் தணிக்க தண்ணீர் அருந்திய பின் ஆசிரியரின் முன் வந்து அமர்ந்தாள். ஆசிரியர் திறமைசாலி. மிக நுணுக்கமாகக் கணக்குகளை விளக்கும் திறம் படைத்தவர். அன்றும் அவர் தமது கடமையைச் சரிவரச் செய்த போதிலும் பாப்பாவின் மூளைக்குள் அவை சென்று சேரவில்லை.

எல்லாம் சிதம்பர சக்கரமாய் இருந்தன.

பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமை காத்தாள்.

4-30 மணிக்குப் பாடம் முடிந்தது. அம்மாவும் வந்தாள்; சோறு பரிமாறினாள். அதிகாலையில் சமைத்த சோறு. விறைத்துப் போயிருந்தது. இதனோடு பல மணி நேரம் பசி கிடந்த வயிறும் ஒட்டிப் போய்ச் சோற்றை விழுங்குவதே சிரமாயிருந்தது. சாப்பிட்டதாகப் பெயர்பண்ணிவிட்டு எழுந்து நாட்டிய வகுப்புக்குத் தயாரானாள்.

* * *

நாட்டியக் கலையில் பாப்பாவுக்கு மிகுந்த விருப்பம். பித்தென்று கூடச் சொல்லலாம். அவள் வீட்டிலிருந்து கூப்பிடு தொலைவில்தான் நாட்டியம் பயிற்றும் ஆசிரியையின் வீடிருந்தது. ஐந்து மணி தொடக்கம் ஆறு, ஆறரை மணி வரை அந்தப் பயிற்சி நடக்கும்.

நாட்டியத்தில் அவளுக்கிருந்த அபாரமான திறமை காரணமாக ஆசிரியை எதிர்வரும் சரஸ்வதிபூசை கலைவிழாவில் அரங்கேறவிருந்த நடன நிகழ்வில் அவளுக்கு முதன்மையான பாத்திரம் வழங்கியிருந்தார்.

ஆனால் வகுப்புக்கு வரவிருந்த உற்சாகம் பயிற்சியின் போது பாப்பாவை விட்டு ஓடிவிட்டது. உடற்சோர்வும், களைப்பும் தாளம் தப்பி ஆடவைத்தன. பதத்துக்கும் பாவத்துக்கும் தொடர்பே இன்றி ஆடினாள். வழக்கத்துக்கு மாறான அவளின் தப்புக்கள் நடன ஆசிரியையை முகஞ்சுளிக்க வைத்தன; முணுமுணுக்க வைத்தன.

ஆசிரியையின் மன நிலையும், போக்கும் பாப்பாவை கவலையில் ஆழ்த்தினாலும்.....

அவவின் பக்கம் நியாயம் இருக்கிறது என்பதை உணர்ந்ததும் அவளுக்கு மேலும கவலை உண்டாயிற்று.

மாலை 6.30 மணிக்கு வீடு வந்தவளுக்கு மேசையில் வடையும் தேநீரும் காத்திருந்தன. அவற்றை உண்டும் அருந்தியும் ஓரளவு சோர்வு நீங்கினாலும், களைப்பு வந்து அவளை மூடிக் கொண்டது.


'சில மணித்தியாலயங்கள் படுக்கையிலே சரிந்து ஆறுதல் கொள்' என்று உடலும் மனமும் கெஞ்சின. ஆனால்..... அம்மா ஆங்கிலப் பாடம் படிக்க வருமாறு அழைக்கிறாள்.

பாப்பாவுக்கு தலை சுற்றியது. கண்கள் மங்கி இருண்டு போயின.

அதன் பிறகு என்ன நடந்தது என்று அவளுக்குத் தெரியாது.

நாற்காலியிலிருந்து விழவிருந்த பாப்பாவை நோக்கி அம்மா பதற்றத்துடன் ஓடி வந்தாள். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ⑥ வாழ்வின்சுவை

## செங்கை ஆழியான்

படலையைத் திறந்து கொண்டு வளவிற்குள் காலடி வைத்த போது பிள்ளையார் கோயிலின் மாலைப் பூசைக்கான ஆயத்த மணி ஒலித்தது. "அப்பனே" என்றபடி வீட்டுக்குள் நான் நுழைந்த போது, என்னை முதலில் கண்டவள் என் பேத்தி சரசு.

"அப்பு வாறார்... ஹாய் பெரிய மீன்... அப்பு எனக்கு பொக்கிள்" எனச் சிரித்தாள். பேத்தியின் குதூகலம் எனக்கு இனிமையாக இருந்தது.

"இதைக் கொண்டு போய் ஆச்சியிட்டக் கொடு."

சரசு வாங்கிக் கொண்டு திரும்பிய போது பவளம் எதிர்ப்பட்டாள். "இஞ்ச தா சரசு. அம்மா விரதம். நான் சமைக்கிறன்" என்று மீனை மகளிடம் இருந்து வாங்கிக் கொண்டாள். அடுக்களைக்குள் தேநீர் ஊற்றிக் கொண்டிருந்த தையல்முத்துவுக்கு இவை தெளிவாகக் கேட்டன. பக்கத்து வீட்டுக்காரன் எல்லை வேலியை அரக்கிப் போட்டதைக் கண்ட மாதிரியான எரிச்சல் எழுந்தது. உள்ளே இருந்தபடி குரல் தந்தாள்.

"அது விரதம் என்னோட. இஞ்ச கொண்டா பவளம். வடிவாய்ச சமைக்க மாட்டாய். அந்த மனிசனுக்கு நான் சமைக்காவிட்டால் பிடிக்காது"

பவளம் மீனை கோபத்தோடு தன் தாயின் முன் வைத்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். மகளின் கோபம் தாய்க்குப் புரிந்தது.

"நான் அதுக்குச் சொல்லவில்லைப் பிள்ளை. இப்பதான் அராலியிருந்து வந்திருக்கிறியள். நான் சமைச்சுத் தரத்தான்... சரி நீயே காச்சடி. கொஞ்சம் சொன்னாப் போதும் முகம் நீண்டிடும். வயது ஐம்பத்துமூன்றாகுது. பேரப்பிள்ளையும் கண்டிட்டாய. இன்னும் சின்ன பவா மாதிரி..."

பவளத்தின் முகத்தில் மலர்ச்சி படர்ந்தது.

"எனக்கு என்ன வயசானாஎன்ன? நான் உனக்குச் சின்ன பவாதான். இப்பவும் உன்ர மடியில தலை வைச்சு படுக்கஆசையாக இருக்கு...."

"என்ன தாயும் மோளும் செல்லம் கொட்றியல்?" என்றபடி சரசு வந்தாள்.

"ஆச்சி ரீ ரெடியா?"

"ஓமடா ராசாத்தி..." என்றபடி தேநீர் நிறைந்த தம்ளர் ஒன்றை ஆச்சி எடுத்துக் அவளிடம் கொடுத்தாள். பேணி முட்டி வடிந்த தேநீரை எடுத்துக் கொண்டு ஹோலுக்குப் புறப் பட்டபோது, "ஆச்சி, ஆச்சி... இஞ்ச தாங்கோ. நான் அப்புவுக்கு கொண்டு போறன்." என்று பறித்துக் கொண்டாள் சரசு. தையல்முத்துவுக்கு சிறிது ஏமாற்றமாகத்தான் இருந்தது.

தலைவாசலில் ஒரு பக்கமாக இடப்பட்டிருந்த வாங்கிலில் அமர்ந்திருக்கின்றேன். கதிரைகள் இருந்தாலும் எனக்கு என்வாங்கில் அமர்வது போலப்படாது. வெறும் பலகையில் துணியொன்றினை விரித்துவிட்டுப் படுப்பது போல வேறெதிலும் சுகம் கிடைப்பதில்லை. மூக்குப் பேணியை என்னிடம் கொடுத்துவிட்டு அருகில் சரசு அமர்ந்து கொண்டாள். நான் பேத்தியின் தலைமயிரைப் பாசத்தோடு கோதிவிட்டேன். முதுகில் தடவி "என்ர ஆசைப் பேத்தி" என்றேன்.

அவள் நெகிழ்ந்து போய் என்னைப் பார்க்கிறாள்.

"அப்பு எங்களோட அராலிக்கு வந்திருங்கள்."

"ஆமி போகட்டும். அது சரி ஆச்சியை விட்டிட்டோ..." என்று சிரிக்கின்றேன்.

"ஆச்சியையும் கூட்டிக் கொண்டு தான். இந்த வயதான காலத்தில இங்க தனிய இருக்க வேண்டுமோ?"

"நீங்க எல்லோரும் எங்களோட வந்திருங்கள்"

"அதெப்படி அப்பு. அப்பா அங்க தானே ரீச்சர்..... வீடு வளவு"

மௌனமாகப் பேத்தியை ஏறிட்டுப் பார்த்து விட்டு, அண்ணாந்து தேநீரை வாயில் விட்டுக் கொண்டேன். சரசுவும் கையிலிருந்த தம்ளரை வாய் உதடுகளில் வைத்து உறிஞ்சிக் குடித்தாள்.

"ஏன் அப்பு எங்களோட வாறியளா?"

"அது எப்படிச் சரசு? இந்த வளவு காணி, வீடு..... இந்த ஊர், நான் பிறந்து வளர்ந்தது. இந்தப் பிள்ளையார் கோயில் சூழல்... கடற்கரை... இது ஓர் அற்புதமான கிராமம் பிள்ளை. இந்த மண்ணைவிட்டு என்னால் எங்கும் செல்ல முடியாது. எனக்கு இப்ப எண்பத்திமூன்று வயது. இன்னும் கொஞ்சக் காலம்தான். அது வரை இங்கேயே இருந்திடுறன்..."

அவள் எதுவும் பேசவில்லை. என்னுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டவள் போல அமைதியானாள். முற்றத்தில் மாமரத்தின் கீழ் சுருண்டு படுத்திருந்த நாய் படலை திறக்கும் சத்தம் கேட்டுத் தலை நிமிர்ந்து பார்த்துவிட்டு மெதுவாக உறுமியது. பின்னர் அமைதியாகப் படுத்துக் கொண்டது.

"ஆரோ வருகினம்....." என்றபடி சரசு எழுந்து வெளியில் பார்த்தாள்.

"அப்பா, வாறார் அப்பு."

சுப்பிரமணியம் தாழ்வாரத்தில் சிலிப்பர்களைக் கழற்றிவிட்டுஉள்ளே வந்து கதிரையில் அமர்ந்தான். ஐம்பத்தைந்து வயதிருக்கும். வெள்ளை வேட்டி, நஷனல் என்பன அவனை ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியன் என்பதைப் பறைசாற்றின. வயதுக்கு மீறிய



முதிர்ச்சி அவனில் தெரிந்தது. நடந்து வந்த களைப்பு. வேட்டித் தலைப்பால் நெற்றியைத் துடைத்துக் கொண்டான்.

"அப்பா தேத்தண்ணி கொண்டு வரவா?"

"சரி பிள்ளை...."

அதற்குள் பவளம் தம்ளருடன் அங்கு வந்தாள். கணவனிடம கொடுத்து விட்டு அவன் முன்னாள் அமர்ந்து கொண்டாள்.

"என்னவாம் அப்பா?..."

"எதுக்கும் ஒருக்காக் கொழும்புக்குப் போயிட்டு வருவம். சிவகடாச்சத் தாற்றை இளையவன் கொழும்பால வந்திருக்கிறான். நாளையிண்டைக்குத் திரும்பிப் போறானாம். அவன் அங்கதான் வேலை."

"ஓமோம் லேபகந்தோரிலதான். அவனோட போனாச்சுகம்."

"ஆர் சுந்தரமே," என்றேன்.

"ஓம் மாமா.. கனடாவில இருந்து மூத்தவனின்ர காகிதமும் வரவில்லை. நாலு மாதத்துக்கு மேலாகுது. லண்டனில் இருந்து மாணிக்கராசாவின்ர கடிதங்களும் இல்லை. அவனைஅனுப்ப கடன்பட்ட காசாவது.... அனுப்புறதில்லை. அதனாலா ஒருக்காக் கொழும்புக்குப் போய் பிள்ளையோட கதைச்சுட்டு வரலாம் என்றிருக்கிறம். என்னாலும் ஏலாது இந்த வரியத்தோடு பென்ஷனுக்கு எழுதிப்போடலாம் என்றிருக்கிறன்...."என்றான் சுப்பிரமணியம்.

"சலரோகம் ஒரு வியாதியே தம்பி? கொஞ்சம் உணவில கட்டுப்பாடாக இருந்தால் ஆரோக்கியமாக இருக்கலாம். அந்தக்காலத்து மனிசருக்கு உதெல்லாம் வந்ததே? அந்தக் காலத்துச் சாப்பாடுகளைக் கைவிட்டிட்டியள்"

அடுக்களைக்குள் மீன் பொரித்து மனத்தது. சரசு எழுந்து அடுக்களைக்குள் ஓடினாள்.

"பொக்குள் கெலியில் ஓடுறாள்..." என்றுநான் சிரிக்கின்றேன்."நாளைக்கு மரியாத்தையிடம் சொல்லி வெட்டுக்காரியிடமிருந்து பொக்கில் தொகையாக வாங்க வேண்டும்"

"ஐயா...." என்றாள் பவளம்.

"மாணிக்கராசன் பணம் அனுப்புறதேயில்லை. அவன் எங்களை மறந்துட்டான். இருந்த காணிபூமியளை வித்து அவனை அனுப்பிவைச்சம். உழைச்சுப் படிக்கிறன் என்றான். லண்டனுக்குப் போனதும் படிக்கிறதை விட்டுட்டு உழைச்சான்.கொஞ்ச நாள் ஆரம்பத்தில ஏதோ கொஞ்சம் அனுப்பி வந்தான். இப்ப ஒரு வரியமாக எதுவுமில்லை."

அவள் சேலைத் தலைப்பால் விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

"அழாதை பிள்ளை..."இங்க பொடியளை வைச்சிருக்கிறதுக்குப் பயந்து அங்கால அனுப்பி வைச்சிட்டு உன்னைப் போல எத்தனை பேர் தவிக்கினம்? உறவுகள் எல்லாம் சிதறிப் போய்விட்டுது. கொள்ளி வைக்கவும் சபை சந்தியில் நிக்கிறதுக்கும் இப்ப உறவினர்கள் இங்கில்லை."

"அவனைப் பற்றி ஜெயா மச்சாள் ஒரு விதமாகக் கதைக்கிறா. லண்டனில இருக்கிற சிவபாலன் எழுதியிருக்கவேணும்."

"ஆர் மூத்தவன் பெண்டிலோ?... ஜெயாவோ?" என்றேன்.

என் மூத்த மகன் கந்தசாமி கோண்டாவிலில் பெண் எடுத்திருந்தான். ஜெயராணி நல்ல பெண். எண்பத்தேழில் இந்திய அமைதிப்படை பலியெடுத்த மூவாயிரம் பேர்களில் ஒருவனாகக் கந்தசாமி அழிந்து போனான்.

ஒருவரின் உதவியையும் எதிர்பார்க்காமல் தன் குடும்பத்தை அவள் சீராகக் கொண்டு நடத்தி வருகிறாள். அதில் எனக்குச் சந்தோஷம்.

பவளம் தன் முறைப்பாட்டைத் தொடர்ந்தாள். "ஜெயா மச்சாள், புவனத்துக்கு இப்ப வேறெங்கோ கலியாணம் பேசுகிறாவாம். அண்ணர் இருக்கேக்க மாணிக்கராசாவுக்குத் தான் புவனம் என்றவர். மச்சாள் இப்ப மனம் மாறிவிட்டா. மாணிக்கராசாவுக்கு அவளில் வலு விருப்பம் இருந்தது. மோளுக்குப் பேச்சுக்கால் நடக்குது எண்டு கேள்விப்பட்டு மச்சாளிட்ட கேட்டனான். மாணிக்கராசாவுக்கு இப்ப தன் பெண்ணைக் கொடுக்க விருப்பமில்லையாம். உறவு பிரியாமல் இருக்க வேணுமென்றால் சரசுவை சிவபாலனுக்குக் கொடுக்கட்டாம்"

நான் நிமிர்ந்து அமர்ந்து கொள்கின்றேன்.

"நீ என்ன பிள்ளை சொன்னாய்?"

"லண்டனில இருக்கிற என்ர பிள்ளைக்கு இல்லையெண்டா பேந்து எப்படி உங்கட பிள்ளைக்குக் கேப்பியள் என்றிட்டன்."

"நானும் கேள்விப்பட்டன். ஜெயா மறுத்ததுக்கும் காரணம் இருக்கும். எதுக்கும் நான் மருமகளிடம் கேட்டுப் பார்க்கிறன்..."

"நீங்க எப்பவும் அவ பக்கம்தான்." என்றாள் விம்மலுடன் பவளம்.

"அழாதை பிள்ளை. துயரங்களை கண்டு அசையக்கூடாது. என்ர எண்பத்துமூன்று வருடத்தில நான் காணாத கஷ்டங்களா? நான் ஒன்றுக்கும் அசையவில்லை. என்னில் எனக்கு நம்பிக்கை இருந்தது. உங்கள் ஆறு பேரையும் வளர்க்க நான் எவ்வளவு கஷ்டப்பபட்டிருப்பன்? கரை சேர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பன்? நான் அசையவில்லை. மூக்கிருந்தால் சளியிருக்கும். அதுபோல மனிசனுக்குத் துயரங்கள். மற்றவையோட ஒப்பிடேக்க நாங்கள் பரவாயில்லை. இந்தக் கிராமத்தில ஒரு

(XV ஆம் பக்கம் பார்க்க)

# சாவா உடம்பு எய்தினோர் மூவர்

மக்கள் உலகில் வாழ்கின்றனர்; ''அரிது அரிது மானிடர் ஆதல் அரிது'' என்று பெரியோர் கூறுவார். மானிடப் பிறப்பிலும் குருடு, பிண்டம், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் என்ற எண்வகைக் குற்றங்களும் அற்றவர்களாகப் பிறத்தல் வேண்டும். அக் குற்றங்கள் அற்றவனே நிறைவான மனிதன்.

அவன் கற்பன கற்று அறிவொழுக்கங்களில் சிறந்து நன்மகனாக வாழ்தல் வேண்டும். நல்வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாதது. வறியார் நன்மை தீமை இரண்டையுமே அறியார். பொருளைத் தேட வேண்டும். தேடிய பொருள் கொண்டு புகழ்பட வாழ்தல் வேண்டும். செல்வத்தை இம்மைக்கண் புகழும் மறுமைக்கண் அறமும் கிட்டும் வழியில் செலவு செய்தல் வேண்டும். வள்ளுவப் பெருந்தகை ஈதலும் இசைபட வாழ்தலும் மக்களுக்கு ஊதியம் தரும் செயல் என்பார்.

தேன்கூடு

பல வழிகளில் புகழை வளர்க்கலாம். சமயம், மொழி, சமூகம், அரசியல் எனப் பல நிலைகளில் தொண்டு புரியலாம். உழைப்பைப் பிறர்க்கு உதவி – தானம் செய்து – புகழை வளர்கலாம். எல்லோர் தமக்கும் இனிதே இயற்றிப் புகழை வளர்க்கலாம். ஒரு சிலர் குறுக்கு வழிகளில் புகழை வளர்ப்பதனையும் அறிவோம். அஃதவர்க்கு வசையினையே நல்கும். ஒவ்வொருவரும் உலகில் புகழை நிலைக்க செய்தல் வேண்டும்.

தமிழ் மாந்தர் இல்லறத்தையே மேலான தருமம் என்று கண்டவர். அடி நாளில் காதல் ஒழுக்கம் வலுப் பெற்றிருந்தது. பின்னர் செய்த ஒன்றனைச் செய்திலேன் என்று சொல்லில் பொய் கூறுதல் மட்டுமன்றி ஒழுக்கத்திலும் வழுவி நடக்கத் தலைப்பட்டனர். அந் நிலையில் மேலோர் வேள்விச் சடங்கை – திருமணச் சடங்கை – ஏற்படுத்தினர். அது 'கரணம்' எனப்பட்டது. பெற்றோர், அந்தணர், அறிவர் முதலியோர் முன் 'இன்னவாறு ஒழுகுக' என்று கற்பிக்கப்பட்டது. காதல் மனையாளும் காதலனும் தீதின்றி வாழ்ந்தனர். மனையாள் மனைத்தக்க மாண்புடையாளாய் வாழ்ந்தாள். மாண்பு நற்குண நற்செய்கைகள். நற்குணத்தில் துறந்தார்ப் பேணுதல் விருந்தயர்தில் வறியார் மாட்டு அருளுடைமை முதலியன அடங்கும்.

## சிந்திப்போம் செயற்படுவோம்

நற்செயல்களில் வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து கடைப்பிடித்தல் சமையல் தொழில்வன்மை ஒப்புலரவொழுகல் முதலியன இடம்பெற்றிருந்தன. சமூகம் மாசில் சீர்க்கற் புடையாளை மேலாக மதித்தது. இன்பம் கண்டது.

நீர்வளமும் வாழ்விற்கு இன்றியமையாததாய் இருந்தது. உண்ணுதல் மண்ணுதல் – கழுவுதல் மற்றும் தேவைகளுக்கெல்லாம் நீர் இன்றியமையாத பொருள் அல்லவோ? நீரை வானம் வழங்குகிறது. அது பெய்யாது பொய்த்து விடுவதும் உண்டு. அதனால் குடிமக்கள் அல்லற்பட்டு ஆற்றாது நிற்பரன்றோ! நாட்டிலே சிறியவான கிணறுகளும் – கூவல்களும், பெரியவான குளம் முதலிய நீர்நிலைகளும் பெருக வேண்டும்.

புறநானூற்றில் குடபுலவியனார் என்னும் புலவர் வருகிறார். அவர் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவு புகட்டும் போது நீர்நிலைகளை அமைக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார். ''அரசே நீ துறக்க இன்பத்தை (சுவர்க்க போகத்தை) விரும்பினும் இப்பிறப்பில் பேரரசனாகப் புகழ் எய்த வேண்டினும் நீர்நிலை பெருக அமைப்பாயாக. அங்ஙன்ம் நீர்நிலை அமைத்தவரே இவ்வுலகில் தளைத்தவர். ஏனையோர் தளையாதவராவர் – அங்ஙனமாகவர்'' என்கிறார்.

இனி நல்லாதனாரிடம் வருவோம். அவர் கூறுகிறார் பூமியின் மேலே பெரிய புகழை நிலைநிறுத்தியவரும், கற்புடைப் பெண்ணை வாழ்க்கைத் துணையாகக் கொண்டவரும் நீர்க்கிணற்றைத் தோண்டிவித்தவரும் இறவாயாக்கையினர் என்கிறார்.

பாடலை நோக்குவோம்.

மண்ணின் மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீல்ப்
பெண்ணினும் கற்புடையாட் பெற்றானும் - உண்ணுநீர்க்
கூவல் குறையின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம் பெய்தினார்.

திரி 16

புகழ் நிறுவி, மாட்சியைப்பட்ட வாழ்க்கைத் துணையுடன் இல்வாழ்க்கையை ஓம்பி நீர்நிலை பெருக்கி வாழ்வோம்.

தொடரும்

-சிகண்டியார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சி நல்லூர் போகிறாள்!



உங்களுக்கு ஆச்சியைத் தெரியுமோ? ஆள் ஒரு பொல்லாத காய்! ஒரு பயல் ஆச்சியிடம் வாலாட்ட முடியாது. தன் வாயாலேயே வால்களையெல்லாம் ஒட்ட நறுக்கி வடுவாள. ஆச்சியிடம் வாய் கொடுத்து... வாங்கிக்கட்டிக் கொள்ளாமல் யாரும் தப்பிப்பிழைத்ததாக சரித்திரமே கிடையாது. ஆச்சியின் வெள்ளை வெளேரென்ற தலைமுடியும், வெண்ணிறச் சேலையும் நெற்றி நிறைந்த திருநீறும் அனைவரையும் அவள்பால் ஈவர்ந்திழுக்கும் அம்சங்களாகும். ஆச்சியின் உள்ளம் கூட பால் போல வெள்ளைதான். அங்கே கள்ளம் கபடம் இல்லை.

ஆச்சி தன் வயிற்றில் சுமந்து பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை பத்து. இப்போது பத்தும் பத்துத் திக்குகளில்... அதாவது பத்து நாடுகளில்! அப்பு செத்துப்போன போது ஆச்சிக்கு வயது முப்பத்துமூன்றுதான். மூத்தவனுக்கு வயது பதினைந்து. கடைக்குட்டியின் வயது இரண்டு.

ஆச்சி அந்த நேரம் தனது பதினெட்டாவது வயதிலேயே அப்புவைக் கலியாணம் கட்டி மூத்த மகனையும் பெற்றுவிட்டாள். புகையிலை வியாபாரியான அப்பு இந்த பூலோகத்தினை விட்டுப் போய்ச் சேர்ந்தபோது ஆச்சியின் கையினில் மடியினில் ஒன்றுமே இல்லை. நோயென்று ஒரு நாள்கூடப் பாயினில் படுக்காத அப்பு... நாற்பது வயதினிலே செத்துப்போகுமென்று யார் தான் நினைத்திருந்தார்கள்?

அப்பு இல்லாமல் போனதும் ஆச்சிக்கு முதலில் கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல்தான் இருந்தது. அடுத்த வீட்டுத் துரையன் எல்லைக் கதியால் போட்ட "ஏதடையில்" அப்புவுக்குச் செய்வினை செய்து உடன் பெல்லி ஏவி முடித்து விட்டான் என்றுதான எல்லோரும் பயந்தார்கள். ஆனால் அப்போது யாராவது அப்புவின் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்திருந்தால்... அவருக்கிருந்தது முற்றிய 'பிரஷர்' நோய் என்னும் உண்மை தெரிந்திருக்கும்!

அப்புவின் அந்திரட்டி முடிந்த கையோடு இரண்டு பால்மாடுகளை வாங்கி வீட்டிலுள்ள கொட்டிலில் கட்டி விட்டாள் ஆச்சி. கக்கத்தில் இடுக்கிய கடகத்தோடும், கையில் உளவாரத்தோடும், வயல்வெளிகளில் புல்லுத்தேடிப் புறப்பட்ட ஆச்சியைக் கண்டு ஊரெல்லாம் மூக்கின் மேல் விரலை வைத்தது. அன்றிலிருந்து ஒருநாள் கூட ஆச்சி உளவாரத்தையும், கடகத்தையும் கீழே வைக்கவில்லை. பட்டி பெருகிய பசுக்களால் ஆச்சியின் வாழ்க்கை வண்டி ஓடிக் கொண்டிருந்தது. வறுமையில் செம்மையாய் பத்துப்பிள்ளைகளையும் நன்றாகப் படிப்பித்தாள் ஆச்சி.

படித்த அந்தப் பிள்ளைகளுக்கு நமது நாட்டு நடப்புக்கள் ஒத்து வரவில்லை. அதனால் ஒவ்வொன்றாக ஆச்சியை விட்டுக் கழன்று கொண்டன. 'அற்ற குளத்தின் அறு நீர்ப் பறவைகள்' போல சொந்த நாட்டை விட்டு வெளிநாடுகளை நோக்கிப் பறந்து போய்விட்டன.

ஆச்சியின் கடைக்குட்டிப் பயல் மீது ஆச்சிக்கு உயிர். அவனும் ஆச்சியின் சீலைத்தலைப்புக்குள்தான் இருந்தவன். எல்லாம் கலியாணம் கட்டும் வரைதான். கட்டின சூட்டிலேயே பெண்டாட்டிக்காரியின் அண்ணன்காரன் கூப்பிடுகிறான் என்று அவுஸ்திரேலியாவுக்குப் போய்ச் சேர்ந்து விட்டான். நெஞ்சு நோகப் புல் இடித்துப் போட்டு பால்மாடு வளர்த்துப் பிள்ளைகளை ஆளாக்கிய ஆச்சியோடு ஒரு பயலுக்குக்கூட 'மினக்கெட' நேரம் இல்லாமல் போய் விட்டது.

அவுஸ்திரேலியா போனவன் தன் மனைவியோடு சேர்ந்து ஆச்சியையும் அங்கு வந்து சேர்ந்துவிடும்படி வருந்தி அழைத்தான். அவன் மனைவியும் தனக்கு பாஸ்போட் எடுத்தபோது ஆச்சிக்கும் சேர்த்து எடுத்து விட்டாள். தனது சிவப்பியையும், கொம்பியையும் விட்டு எங்கேயும் வர முடியாதென்று அடம்பிடித்த ஆச்சியை எப்படிச் சமாளித்தாளோ தெரியவில்லை. மாமியாரையும் பிளேன் ஏற்றிக்கொண்டு போய்விட்டாள் மருமகள்.

ஆச்சிக்கு ஒரே ஏக்கம். அவுஸ்திரேலியா போய் இறங்கியதும் முதல் கேள்வியாக, "இஞ்சை பால் மாடு வாங்கலாமோ தம்பி?" என்றுதான் மகனிடம் கேட்டாள்.

"ஏனணை பால்மாட்டை? நானே பால் பண்ணையிலைதானனையெணை வேலை செய்கிறன்!" என்றான் மகன் அசட்டுச் சிரிப்புடன்.

"உன்னைப் பல்கலைக்கழகத்திலை நான் விட்டுப் படிப்பிச்சது மாட்டிலை பால் கறக்கிறதுக்கோடா?" என்று கேட்டுச் சீறிச்சீறி அழுது சீலைத்தலைப்பினால் கண்ணையும் மூக்கையும் துடைத்தாள் ஆச்சி.

ஊரில் ஓடித்திரிந்து கொண்டிருந்த ஆச்சிக்கு தன்னை ஒரே இடத்தில் குத்தி இருத்திவிட்டது வருத்தமாக இருந்தது. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக ஆச்சி புசு புசுவென்று வீங்கிப்போனது கண்டு மகன் பயந்துபோனான். "நான் ஒரு நாளைக்கு குளிரிலை விறைச்சு செத்துப்போவன்: அல்லது வீங்கி வெடிச்சுப் போவன்ரா பெடியா" என்று புலம்பிய ஆச்சியை மீண்டும் பிளேன் ஏற்றி ஊருக்கே அனுப்பி வைத்து விட்டான் அவன்.

நல்ல வேளை. ஆச்சி அவுஸ்திரேலியா போகும் போது தன் வீட்டில் இருத்தி விட்டுப் போனவர்கள் மிகவும் நல்ல மனிதர்கள். ஆறு மாதமாகிப் போயும் ஆச்சியின் சிவப்பியையும், கொம்பியையும் பத்திரமாகப் பராமரித்து வைத்திருந்தார்கள். இரண்டுமே இரண்டு பசுக்கன்றுகளை ஈன்றிருந்தன.

ஆச்சி தன் வீட்டில் இருந்தவர்களை தன்னுடனேயே இருந்துவிடும்படியும்... இனி அவர்களே தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் போல் உறவென்றும்... உறுதிபடச் சொன்னதில் இருந்தவர்களும் மகிழ்ந்துதான் போனார்கள். அவர்கள் ஆச்சியின் செத்துப்போன அப்புவுக்கு ஒரு வழியில் உறவு முறையானவர்கள்.

ஆச்சியின் சுயதொழிலான உளவாரப் பணியுடன் கூடிய பால் வியாபாரம் மீண்டும் களைகட்டத் தொடங்கிவிட்டது. உப்புக்கடலில் ஊறிப்போன சடலம் போல்லிருந்த ஆச்சியின் உடலும் படிப்படியாக வற்றிப்போய் சரியாகிவிட்டது.

ஆகவே ஒருகாலமும் ஆச்சிக்குத் தனது சீவியத்தைக் கொண்டு நடத்த பிறரின் தயவு தேவைப்பட்டதில்லை. பின்னர் பிள்ளைகள் யாரும் தனக்கு ஐந்துசதம் கூட அனுப்பக்கூடாதென்பது ஆச்சியின் கட்டளையாகும். அதை மீறி யாராவது பணம் அனுப்பினாலும் பணத்தை ஏதாவது முதியோர் இல்லத்திற்கோ அல்லது அனாதைச்சிறுவர் இல்லங்களுக்கோ அனுப்பி வைத்துவிடுவாள் ஆச்சி!

இந்த வருடத்தின் நல்லூர் திருவிழாக் காலத்தின் போது அவுஸ்திரேலியாவிலிருந்து ஆச்சியின் கடைக்குட்டியன் கடிதம் போட்டிருந்தான்...கொஞ்சம் பணமும் அனுப்பியிருந்தான். வீட்டில் ஆச்சிக்குத் துணையாக இருப்பவர்களையும் கூட்டிக்கொண்டு ஆச்சியை நல்லூர்த் தேருக்குப் போய்வரும்படியும்... வாடகைக்காரில் பயணம் செய்யும்படியும் தான் அந்தப் பணத்தை அனுப்பியிருந்தான்.

ஆச்சிக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது.

"எனக்குத் தெரியாத நல்லூரோ... எங்கினையோ இருக்கிறவர் காட்டப் போறாராமோ....?உங்கினையுள்ள பிள்ளைகள் படும்பாட்டுக்கை எனக்கென்ன கோயிலும் குளமும்"? என்று குமுறினாள் ஆச்சி.

"ஆச்சி உங்கடை பிள்ளையள் எல்லாம் வெளிநாட்டிலையெல்லோ?" என்று கேட்டான் ஆச்சியுடன் கூடவே இருக்கும் அவளது தத்துப்பேரன்.

"அதுகள் எல்லாம் என்ரை பத்துமாதத்தூமையடா... எப்பவோ எல்லாத்தையும் கைகழுவிப் போட்டன்..."

பத்துமாதத்தூமையென்றால் என்னவென்று பயலுக்கு விளங்கவில்லை. அதனால் சிறிதுநேரம் தன் நெற்றி சுருங்க யோசித்தான். பின்பு "ஆச்சி, ஆச்சி, எனக்கு நல்லூர்க கந்தசுவாமியாரின்ரை கோயிலைத் தெரியாதணை ஆச்சி... எனக்காக என்டாலும் வாருங்கோவன் ஆச்சி போவம்....."என்று ஆச்சியின் காலில் விழாத குறையாகக் கெஞ்சினான் அந்தப் பொடிப்பயல். ஆச்சிக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அதனால் இளகிப்போய் விட்டாள்.

அவர்களின் இருப்பிடமோ மிருசுவில். காலையில் புறப்பட்டு தேருக்கு வரமுடியாது. அதனால் முதல்நாளே யாழ்ப்பாணம் போய்விடுவதென்றும், இரவு அங்கே தங்கி அடுத்தநாள் தேர் முடிந்ததும் ஊர் திரும்புவதென்றும் ஆச்சியுடன் எல்லோரும் சேர்ந்து தீர்மானம் செய்து கொண்டனர்.

சிவப்பிக்கும் கொம்பிக்கும் நிறையப்புல் செருக்கி வைத்துவிட்டு, வீட்டுக்கும் மாட்டுக்கும் சேர்த்து நல்ல காவலும் வைத்துவிட்டுத்தான் ஆச்சி நிம்மதியாகக் காரில் ஏறினாள். கார் புறப்பட்டபோது, "நல்லூரானே பயணத்தை நல்லபடி நடத்திவிடப்பா" என்று தலையில் கைவைத்துக் கும்பிட்டாள்.

வழி தெருவில் இருந்த சென்றிகளில் எல்லாம் இறங்கி இறங்கி ஏறியதில் ஆச்சி நன்றாகக் களைத்துப் போனாள். "கோதாரியிலை போக..." என்று ஒவ்வொரு தடவையும் சொல்லிக்கொண்டு வந்த ஆச்சியிடம்,"எனக்கும் தெரியுமெணை அதை... 'கௌ' வன்னாவுக்கு கௌதாரி" என்றான் பொடிப்பயல்.

கார் செம்மணியைத் தாண்டிய போது, "தும்பை விட்டு வாலைப்பிடிச்சது போல... எட்டினதைப் பிடிச்சுப் புதைச்ச கெட்டித்தனம்தான் உது!" என்று சொல்லிக் கண்கலங்கிக் கொண்டாள் ஆச்சி.

மாடு சம்பந்தமான பழமொழிகள் என்றால் நிறையவே தெரியும் ஆச்சிக்கு!

யாழ்ப்பாணத்தில் அவர்கள் எல்லோரும் ஆச்சியின் ஒன்றுவிட்ட அண்ணனின் மகளின் மருமகனின் தம்பி மனைவியின் தங்கையின் வீட்டில் வந்து இறங்கினார்கள்!!

அவர்கள் இவர்களைக் கண்ட மாத்திரத்தில் கொஞ்சம் பயந்து போனார்கள். எந்த வடிவத்தில் பிரச்சினை வருமோ என்றுதான் யோசித்தார்கள். ஆயினும் நல்லூர் முருகனின் பெயரைச் சொல்லி வந்தவர்களை, அவர்கள் வரவேற்கத் தவறவில்லை. இரவில் கதவைப்பூட்டி வைத்துக் கொண்டு, இருந்த மாவையெல்லாம் கொட்டிப்புட்டுக் குழைத்துக் கொண்டிருந்த நேரம் அவர்கள் வீட்டுக் கதவு படபடவென்று தட்டப்பட்டது. எல்லோரும் பயந்து போனார்கள். ஆச்சி மட்டும் துணிவுடன் போய் கதவைத்திறந்து "வாருங்கோ" என்று வந்தவர்களை வரவேற்றாள். அப்போதுதான் பயத்தில் உறைந்துபோய் நின்றிருந்த எல்லோருக்கும் சுய உணர்வு வந்தது.

"இங்கே கொட்டி வந்ததாய் எங்களுக்குத் தகவல்" என்றார் வந்தவரில் ஒருவர்.

ஆச்சிக்கு 'கொட்டி' என்றால் என்னவென்று தெரியவில்லை. அதனால் முன்பின் யோசிக்காமல், "ஓம்! வந்தனாங்கள்தான்! அதுக்கிப்ப என்ன?" என்று கேட்டாள். வந்தவர்கள் அவசர அவசரமாய்"எத்தனை?" என்று கேட்டார்கள்.

ஆச்சி, "ஒன்று...இரண்டு...மூண்டு" என்று கார்க்காரரையும் சேர்த்து எண்ணிவிட்டு "எல்லாமாய் எட்டு" என்றாள்.

வீட்டுக்காரர் ஒருவாறு அவர்களுக்கு நிலைமையை விளக்கினார். அவர்கள் ஆச்சியை ஒரு மாதிரிப் பார்த்து விட்டுத் திரும்பினர்.

காலையில் எழுந்து குளித்து முழுகி எல்லாரும் கால்நடையாகவே நல்லூருக்குப் புறப்பட்டு விட்டார்கள். அந்த அதிகாலை வேளையிலேயே கோயிலில் மக்கள் கூட்டம் அலை மோதிக் கொண்டிடிருந்தது. அந்த நேரமே இளம் பெண்களும், இளம் பையன்களும் ஒருவரை ஒருவர் இடித்து உரசி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்..

"எங்கடை சனங்களுக்கு ரோச நரம்புகள் எல்லாம் அறுந்து கெட்டுப் போச்சுதடா தம்பி!" என்று தன் கைப்பிடிக்குள் இருந்த பெடியனிடம் சொன்னாள் ஆச்சி. ஒன்றும் விளங்காவிட்டாலும், "ஓமணை ஆச்சி" என்றான் அவன். ஆச்சி திரும்பும் போது அவனுக்கு அப்பப்பாக்குழல், ஹெலி, துவக்கு எல்லாம் வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தாள். அதனால் ஆச்சியுடன் ஒத்துப்போவதுதான் தனக்கு நல்லதென்று அவன நினைத்தான்!

## சந்திரா தனபாலசிங்கம்

ஆச்சிக்கு தான் முதலில் கலியாணம் கட்டியவுடன் அப்புவோட வண்டில் பூட்டிக்கொண்டு நல்லூர் முருகனிடம் வந்த ஞாபகம் வந்து விட்டது. முருகனிடம் அவள் வேண்டுதல் செய்தபடி அந்த வருடமே ஆச்சிக்கு மூத்தவன் பிறந்துவிட்டான். அதனால் தான் அவனுக்கு 'நல்லை நாதன்' என்று பெயர் வைத்ததும்.....

கோயிலின் உள்ளே வசந்தமண்டபப்பூசை தொடங்கி விட்டது. வள்ளி - தெய்வானை சமேதராய் புன்னகை பூத்து நின்றிருந்தார். முருகப் பெருமான். பொடிப்பயல் ஆச்சியின்கையை சுரண்டினான். ஆச்சி அவனைக் குனிந்து பார்க்க, "ஆச்சி முருகனுக்கு எத்தனை பொம்பிளையெணை?" என்று கேட்டான்.

"இரண்டுதான்! ஏனடா கேட்டனி?"

"இல்லை. சும்மாதான். அவருக்கு எத்தினை பிள்ளையெணெ?"

"அவருக்கு பிள்ளையள் இல்லையடாதம்பி!"

"ஏனணை பிறக்கேல்லை?"

"அது அப்படித்தான்..... வாயை மூடடா....கேக்கிறார் கேள்வி" என்று அவன் வாயில் தட்டி விட்டாள் ஆச்சி.

கோயிலின் உட்பிரகாரத்தைச் சுற்றி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலி வர்ணனையாளர்கள் நின்றிருந்தனர். தலையில் எதையோ கொழுவிக்கொண்டு கோயில் நிகழ்வுகளை வர்ணனை செய்து கொண்டிருந்த அவர்களைப் பார்க்க ஆச்சிக்கு சிரிப்பு வந்துவிட்டது. "உவங்கள் ஏன் இதுக்குள்ளையும் வந்து நிக்கிறாங்களோ? எக்கனம் உதிலையும் பொய் சொல்லப் போறாங்கள் போலை...பொய் சொல்லுற வாய்க்கு பொரியும் கிடைக்காது கண்டியோ..." என்றாள் ஆச்சி.

கோயிலின் எக்காளம், மேளம் வேறு ஆரவாரச்சத்தங்களில் ஆச்சி சொன்னது யார் காதிலும் விழாமல் போய்விட்டது....

சுவாமி தேர் ஏறி விட்டார். அரோகராச் சத்தத்தோடு வீதிவலம் வந்து கொண்டிருந்தார். தேர் வடக்கு வீதிக்கு வந்த சமயம், வடதிசைப்பக்கமாக இருந்து ஹெலிக்கொப்டர் ஒன்று வந்து, முற்காலத்தில் தேவர்கள் பொழிந்தது போல் பூமாரி பொழிந்தது!

ஆச்சி அண்ணார்ந்து வானத்தைப் பார்த்தாள். "கடவுளே! நல்லூர்க் கந்தசுவாமியாரே! உம்மையும் தமதாக்கிப் போட்டினமோ?" என்று கேட்டவாறே நிலத்தில் மயங்கிச் சரிந்தாள் ஆச்சி.

ஆச்சிக்குப் பசிக்களைப்பு என்றும்...சனநெருக்கடியால் வந்த மூச்சுத்திணறல் என்றும்....ஹெலி யைக் கண்டதால் வந்த பயமென்றும்... பலரும் பலவிதமாய் பேசிக் கொண்டனர்.

ஆச்சிக்கு வந்தது சாதாரண மயக்கம் என்றுதான் எல்லாரும் நினைத்தார்கள்.

ஆச்சி தொல்லைகள் இல்லாத ஊருக்குப் பயணப்பட்டு விட்டாள் என்னும் சங்கதி மட்டும் யாருக்கும் புரியவில்லை! (யாவும் கற்பனை)

---

## துடுப்பாட்.......

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாளர்களைக் கொண்டது ஆஸ்திரேலிய அணி. ஆயினும் ஆஸ்திரேலியர்களால் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான போட்டித்தொடரை சமன் செய்ய (3-3) மட்டுமே முடிந்தது.

ஆஸ்திரேலிய - மேற்கிந்தியத் தீவுகள் போட்டித் தொடரிலே மேற்கிந்தியத் தீவுகளின் கூப்பர் அணியிலிருந்து விலக முடிவெடுத்தார். அவரது ஓய்வு பெறும் அறிவிப்பு இப்பொழுது ஊர்ஜிதமாகிவிட்டது. சுமார் 182 ஒரு நாள் போட்டிகளில் ஆடிய அனுபவசாலியான கார்ல் கூப்பருக்கு வயது 32 மட்டும்தான்!

### லாறா விளையாடுவார்

கூப்பர் ஓய்வு பெற்று விட்டார். ஆனால் லாறா மீண்டும் ஆடப்போவதாக அறிவித்துள்ளார். எனவே நாளை பாகிஸ்தானுக்கெதிரான ஆட்டத்தில் லாறாவைக் களத்தில் எதிர்பார்க்கலாம். கூப்பரின் ஓய்வினால் லாறா மற்றும் சந்திரபோல் மீது சுமை கொஞ்சம் கூடித்தான் இருக்கிறது. ஆனால் இவர்களிருவரும் எச்சந்தர்ப்பங்களிலும் நன்றாக ஆடக்கூடியவர்கள்.

லாறா கடைசியாக ஆடிய எட்டு ஒரு நாள் போட்டிகளில் 93 ஓட்டங்களை மட்டுமே பெற்றுள்ளார். அதற்காக அவரது துடுப்பெடுத்தாடும் திறன் வீழ்ச்சியடைந்து விட்டதென்று கூறலாகாது. அவர் ரெஸ்ற்களில் அடுத்தடுத்து அடித்த மூன்று சதங்கள் - அதிலும் இறுதி (நாலாவது) ரெஸ்ரில் வெறும் 82 பந்து வீச்சுக்களில் குவித்த 100 ஓட்டங்கள் - அவரது திறமைக்கு நல்ல சான்று.

லாறா, கேர்ஸ்ரன், கில்கிறிஸ்ற், ஜெயசூரியா, கங்குலி, சந்திரபோல்... வரிசையில் குறிப்பிட வேண்டிய இன்னொரு வீரர் சாயிட் அன்வர். இவர்கள் அனைவரும் சிறந்த இடக்கைத் துடுப்பாளர்கள்.

அன்வர் பாகிஸ்தானின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர். அண்மையில் 6000 ஓட்டங்களைத் தாண்டிய பதின்மூன்றாவது வீரரானார். அன்வரின் ஓட்டச் சராசரி மிகச் சிறப்பாகவே உள்ளதெனினும் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளாக அவர் சதங்கள் எதனையும் அடிக்கவில்லை என்பது பெருங்குறையே!

ஐயாயிரம் ஓட்டங்களைத் தாண்டியவர்களான இஜாஸ் அஹமட், இன்ஸாமாம் உல் ஹக் மற்றும் ஏழாயிரத்தைத் தாண்டிய சலீம் மலிக் போன்றோர் பாகிஸ்தானின் சிறந்த துடுப்பாளர்கள். இவர்களில் மலிக் அனுபவத்தில் முதிர்ந்தவர். நிதானமாகத் துடுப்பெடுத்தாடுபவர். இஜாஸும் இன்ஸமாமும் தேவையான போதெல்லாலாம் வேகமாக ஆடக்கூடியவர்கள்.

இன்ஸமாமின் அதிரடி ஆட்டத்தால்தான் 1992இல் பாகிஸ்தான் அரையிறுதிப் போட்டியில் நியூஸிலாந்தை வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேற முடிந்ததென்பது கவனிக்கத்தக்கது.

### ஏனைய துடுப்பாளர்கள்

இங்கிலாந்து அணியின் கிரேஹம் ஹிக், கிரஹாம் தோர்ப், நிக்நைற் போன்றோரும் சிறந்த துடுப்பாளர்களே. உலகக்கிண்ணப் போட்டிகள் இவர்களுக்கு மிகவும் பரிச்சயமான மைதானங்களில் நடைபெறுவதுஇவர்களுக்குச் சாதகமாக அமையப்போகிறது.

சிம்பாவேயின் கிறான்ற் ஃபிளவர், அலிஸ்ரர் காம்ப்பெல், அண்டி ஃபிளவர், நீல் ஜோன்சன், மரே குட்வின் ஆகியோர் கடந்த மார்ச்சில் பங்களாதேஷ் - கென்யா - சிம்பாவே அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் மிகச் சிறப்பாக ஆடியவர்கள். அத்தொடரில் கென்யாவின் ஸ்ரீவ் ரிக்கொலோ, மொறிஸ் உதும்பே, கென்னடி ஒற்றியானோ போன்றோரும் சிறப்பாகவே ஆடினர்.

மொத்தத்தில் பல சிறந்த துடுப்பாளர்கள் உலகக் கிண்ணத் தொடரில் ஆடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளனர். இவர்களில் மிகச் சிறந்து விளங்கப் போவது என்னவோ ஒரு சிலர்தான்.

கடந்த இரு உலகக் கிண்ணத் தொடர்களில் சிறப்பாக ஆடிய வீரர்களைப் பற்றிய தகவல்களை அட்டவணை தருகிறது. கடந்த இரு தொடர்களிலும் சிறப்பாக ஆடிய ரமீஸ் ராஜா (351 ஓட்டங்கள்), றிச்சி ரிச்சட்சன் (368), பீற்றர் கேர்ஸ்ரன் (410), மாட்டின் குறோ (456), ஜாவெட் மியன்டாட் (491), அன்ட்றூ ஹட்சன் (571), அமீர் சொஹைல் (598) போன்ற துடுப்பாளர்கள் இம்முறை விளையாடாததால் அவர்களது ஓட்ட விவரங்கள் தரப்படவில்லை.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் பல பழைய சாதனைகள் முறியடிக்கப்படலாம். அவற்றைப்பற்றி அறிவதற்கு இப்போதைய உலகக் கிண்ணச் சாதனைகள் பற்றி அறிய வேண்டாமா? அதற்கு மேலும் ஒரு வாரம் பொறுத்திருங்கள். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மாணவர்களை சூழலுக்கு தயார்படுத்துவதற்கே 'ராகிங்'!

கடந்த முதலாம் திகதி சஞ்சீவியில் "புளித்த தத்துவம் பேசும் புத்திஜீவிகள் இவர்கள்" என்ற தலைப்பில் கொக்குவில் பா.சுதனின் மடலை வாசித்த போது அவரின் அறியாமையையும் ஆற்றாமையையும் புரிந்துகொள்ள முடிந்தது.

'இவன்' என்ற புனைபெயராளர் எழுதிய "பகிடிவதை என்பது உண்மையில் புதிய மாணவர்களை பல்கலைக்கழக சூழலுக்கு ஏற்றவாறு தயார்ப்படுத்துவது என்பதே நிதர்சனமான உண்மை" என்ற கருத்தை மறுதலித்து சில விளக்கத்தை கொடுத்திருந்தார் கொக்குவில் பா.சுதன். இவரின் வாதத்தினை ஏற்கமுடியாது. 'இவன்' எழுதியது நூற்றுக்கு நூறு வீதம் நிதர்சனமான ஒன்றே.

இலங்கையில் முதன் முதலில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட அன்றைய காலகட்டத்திலேயே பகிடிவதையும் அறிமுகப்படுத்தப்பட்டது. பல்வேறுபட்ட சமூகத்திலிருந்தும் பல்வேறுபட்ட தரத்திலும் இருந்து வரும் புதிய மாணவர்களை பல்கலைக்கழக சூழலுக்கு தயார்ப்படுத்தவே அது அறிமுகப்படுத்தப்பட்டது. இதை நாம் வரலாற்றை திரும்பிபார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். ஆனால் இப்பகிடிவதை அண்மைக்காலங்களில் வக்கிரமாக மாறிப் போனது மனவருத்தம் ஊட்டக்கூடிய செயலாகி விட்டது. அத்தோடு பகிடிவதையை எம் சமூகம் வெறுத்து ஒதுக்கவும் அது களமமைத்துக் கொடுத்துவிட்டது. பா.சுதன் எழுதியது போன்று நாம் மேற்போந்த கூற்றை விதண்டாவாதமாகவோ, அதிகப் பிரசங்கித்தனமாகவோ, மெத்தப் படித்தவர்கள் என்பதனாலே கூறவில்லை. இதுவே நிதர்சனமான உண்மை. இதைப் பல்கலைக்கழக சமூகத்தில் உள்ள ஒருவராலேயே புரிந்து கொள்ளமுடியும். வெளியில் இருந்து நோக்குபவர்களுக்கு இது அதிக பிரசங்கித்தனமாகவோ அன்றி விதண்டாவாதமாகவோ தோன்றினால் அது ஆரோக்கியமானதல்ல - மனவருத்தத்திற்குரியதாகும்.

பா.சுதன் அவர்கள் இன்னுமொரு கூற்றைக் கூறியிருக்கிறார். உலகின் அதிசிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றான Oxford பல்கலைக்கழகத்தில் பகிடிவதை என்ற ஒன்றே நடப்பதில்லை என்று. என்ன சுதன் போய்பார்த்து வந்தீர்களா பகிடிவதை இல்லை என்பதை? பல்கலைக் கழகங்கள் உலகின் எந்த மூலை முடுக்கெல்லாம் இருக்கின்றதோ அங்கெல்லாம் பகிடிவதை உண்டு என்பதை எந்த ஒருவரும் மறுக்கமுடியாது. இவ்வளவும் ஏன் இலங்கை பல்கலைக் கழகத்தில் ஆரம்பத்தில் பகிடிவதையை அறிமுகம் செய்தவர்களே இந்நாகரிகம் மிக்க ஆங்கிலேயர்தானே! அப்படியிருக்க Oxford இல் எப்படி பகிடிவதை இல்லாமல் போனது? (1999 ஆம் ஆண்டின் மிகச்சிறந்த "ஜோக்" இதுவாகத்தான் இருக்கும்). அங்கும் இருக்கின்றது. ஆனால் மேற்குலக நாடுகளில் அது வக்கிரமானதாக பரிணாமமடையவில்லை. கிழக்காசிய நாடுகளான இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பகிடிவதை வக்கிரம் மிக்கதாக பரிணாமவளர்ச்சியடைந்திருப்பது மனவருத்தம் தரக்கூடிய செயலாகிவிட்டது.

ஆழமான தோழமையுணர்வு பல்கலைக்கழக மாணவர்களிடம் மட்டுமல்லாது கூட்டாக கொலை, கொள்ளைகளில் ஈடுபடுவோரிடமும் புதைந்து கிடப்பதாக கொக்குவில் சுதன் குறிப்பிடுகிறார். சுதனின் அறியாமையை நினைத்து வருத்தப்படத்தான் முடியும். ஏனெனில் கூட்டாக கொலை, கொள்ளைகளில் ஈடுபடுவோரிடம் ஒரு போதும் ஆழமான தோழமையுணர்வு காணப்படாது. மாறாக அவர்களிடம் போட்டியும் பொறாமையுமே இருக்கும். ஆனால் மற்றவன் காட்டிக்கொடுப்பான் என்ற பயத்தில் அவற்றை வெளிக்காட்டாமல் போலி அன்பையே அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். தென்னிந்திய சினிமா சுதனை நன்றாகப் பாதித்திருப்பதை சுதனின் இக்கருத்து வெளிப்படுத்திநிற்கிறது. இதையே எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

புதிய மாணவர்கள் சமூகப் பொறுப்பு, நன்னடத்தை, கோஷ்டி அட்டகாசத்தில் ஈடுபடாமை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்கள் என்றும், எம்மை அவர்களிடம் மண்டியிட்டு பாடம் கேட்குமாறும் பா.சுதன் எழுதியிருந்தார். நாமும் புதிய மாணவர்களாக இருந்தவர்கள்தான் என்பதும், இதே புதிய மாணவர்கள்தான் அடுத்த வருடம் பகிடிவதையை முன்னின்று செய்வார்கள் என்பதையும் சுதன எண்ணிப்பார்க்க மறந்தது ஏனோ? பல்கலைக் கழக மாணவ சமூகத்தின்மீது உங்களுக்கு வெறுப்பிருப்பது உங்கள் கருத்துக்களில் வெளிப்படுகின்றது. எம்மை மட்டம்தட்ட நினைத்து, உங்கள் ஆற்றாமையையும், அறியாமையையும்தான் வெளிப்படுத்தி நிற்கின்றீர். உங்கள் கருத்து எங்கள் மீது உள்ள வெறுப்பை விலக்கி விட்டு எங்கள் மாணவ சமூகத்தைப் பாருங்கள். எம்மை புரிந்துகொள்ளுவீர்கள் - நாம் பேசுவது புளித்த தத்துவமல்ல என்பதையும் கூடத்தான்.

**யாழ்.பல்கலைக்கழகம் எஸ்.பிரபாகர்.**
(முகாமைத்துவ மாணவன்)

## தோழமையுணர்வின் தொடக்கம்தான் ராக்கிங்!

"புளித்ததத்துவம் பேசும் புத்தி ஜீவிகள்" என்று ஆரம்பித்த மடல் கண்டு மனம் வருந்துகிறோம். பல்கலைக்கழகம் என்பது சமூகத்தின் ஓர் அங்கம். அங்கு செயற்படுத்தப்படும் எந்த ஒரு செயலும் சமூகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது உண்மை. எனினும் விவாதத்திற்கு வேறு பொருள் இல்லை என்பதற்காக பல்கலைக்கழகத்தையும் அங்கு நடைபெறும் நிகழ்வுகளையும் விவாதப் பொருளாக்க வேண்டாம் என்பதே எமது வேண்டுகோள்.

எமக்குத் தெரியும். எமது யாழ். சமூகம் கல்விமான்களைக் கொண்டுள்ளது. கல்விமான்கள் தமது வித்துவத்திறமையை - பயனுள்ள - முன்னேற்றகரமான - செயல்களுக்கு பயன்படுத்தினால் எமது சமூகம் பெரு நன்மையடையும். அதற்காக சமூகத்திற்கு பாதிப்பைஏற்படுத்தும் செயல்களை தட்டிக்கேட்கக் கூடாது என்பதல்ல பொருள்.

"புளித்ததத்துவம்...." என்ற தலைப்போடு கண்ட மடல் வெறுமனே பல்கலைக்கழகத்தையும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தோரையும் குறைகூறுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது என்பது அதைப் படித்த அனைவருக்கும் விளங்கியிருக்கும். அத்துடன் அவர் பல்கலைக் கழக சமூகத்தையே விரோத மனப்பான்மையுடன் நோக்குகிறார் என்பதே தெளிவு.

'ராக்கிங்' என்பதே தோழமையின் தொடக்கம் தான். அது எந்த விதத்திலும் மாணவரைப் பாதிப்பதில்லை. உடல் ரீதியான கஷ்டங்களை ஏற்படுத்தும் விதத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' நிகழ்த்தப்போவதில்லை என்ற உண்மை ஒரு புறமிருக்க சகோதரர் 'சுதன்'கூறியது 'கொடூர - வக்கிர - ஆபாசமான விவகார நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விடுவதற்காக புதுமுக மாணவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்' என்பது அவரது 'அதிதீவிர' கற்பனைத் திறனேயன்றி வேறில்லை.

முடிவாக பல்கலைக்கழகம் என்பது கல்வியை மட்டும் வழங்குவதில்லை. பல அனுபவப் பாடங்களை அளிக்கிறது. அதை எங்கே, எப்போது, யாரிடம் என்றில்லாமல் மாணவர்கள் அவ்வப் போது கற்றுக்கொள்கிறார்கள். அதை புதுமுக மாணவர்களிடம்தான் கற்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

இனியும், தனியே பல்கலைக்கழகத்தையும், பல்கலைகழத்தைச் சார்ந்தோரையும் நிந்தித்து மட்டும் எழுதும் நியதிகள் மாறவேண்டும் என்பதே எமது அவா.

**யாழ். பல்கலைக்கழகம். 'இவள்'.**

## விமர்சக வேந்தர்களே ஒளித்திருப்பது ஏனோ?

ஈழத் தமிழ் கவிதை வரலாறு என்று ஆரம்பிக்கும் எவரும் பூதந்தேவனாரில் தொடங்கி மகாகவி, முருகையன், நீலாவாணன் வரை வந்து பின் சற்றுத் தயங்கித் தயங்கி புதுவை, வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன், சோலைக்கிளி என்று முடித்து விடுகிறார்கள். வேறு சிலர் ஓரிரு புதிய முஸ்லீம்களின் பெயர்களைச் சொல்லி அடங்கி விடுகிறார்கள். உண்மையில் இது சரியான வகைப்படுத்தலா என்பது புரியவில்லை. 1980ஆம் ஆண்டுவரையுள்ள கவிஞர்கள், அவர்களது வரலாறுகள், அவர்களின் சாதனைகளைப் பற்றி புளுகிக் கொண்டே வந்த பலர் அதற்குப்பின்னான - கிட்டத்தட்ட 19 வருட கால - ஈழக் கவிதை வரலாறை மென்று விழுங்குவதையே கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். தற்போது கொடிகட்டிப் பறக்கும் விமர்சகப் புலிகள் கூட கடந்த 10 வருடகால கவிதை பற்றி கதைக்கப் போய் வீணாக வம்பை விலைக்கு வாங்குவானேன் என்பதாலோ என்னவோ பின்னனர்த்தம் பற்றியும், 'அமைப்பியல் வாதம்' என்றும் அரைத்த மாவை மீண்டும் மீண்டும் அரைத்து அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எமது கவனிக்கப்படாத கடந்த காலத்தில் மிகத் திறமையான கவிஞர்கள் பலர் முகிழ்ந்திருந்தாலும் அவர்களின் முகங்கள் முழு வெளிச்சம் பெறவில்லை என்பது யதார்த்தம். அவர்களுடைய ஆக்கங்களின் தரம் இனங்காணப்படவில்லை. ஏன் அவர்களின படைப்புக்களிலுள்ள குறைநிறைகள் கூட சுட்டிக்காட்டப்படவில்லை. இதனால் இன்றைய ஈழத்துக் கவிஞர்கள் யார்? அவர்களின் தரம என்ன? இன்றைய ஈழக் கவிதையின் போக்கு, அதன் உயர்வு எந்தளவுக்கு உள்ளது? -போன்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகிவிடும். சும்மா 21ஆம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதை ஈழத் தமிழருக்குரியது எனப் புசத்தித் திரிவது வெறும் 'தம்பட்டம்'தானோ எனத் தோன்றுகிறது. எனவே, 'இன்று' எங்களை நாங்களே நிறுத்துப் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. இல்லாது போனால் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட ஈழக் கவிதையின் செல்வழிக்கு புதிய பாதையைக் காட்டிக் கொடுக்காத வரலாற்றுப்பழி எங்களைச்சேரும். இது பற்றி நவீன இலக்கியங்களுக்காக மேடைக்கு மேடை வக்காலத்து வாங்கும் போராசிரியர் ந.சுப்பிரமணியம் போன்ற விமர்சகர்களும் வாய்மூடி இருப்பது ஏன் என்று புரியவில்லை. கதைக்குதவாத ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோரும் இதைப் பற்றி உணரவில்லையா என்பதும் தெரியவில்லை. அதிகம் ஏன்? சஞ்சீவியில் வாரம் பத்துக் கவிதைகளாவது வெளிவருகின்றன. (அதில் எத்தனை 'கவிதை' என்பது வேறு பிரச்சினை) அவை பற்றி யாரேனும் மூச்சு விடுகிறார்களா? இல்லையே. அதை விட்டு விட்டு 'வித்துவான் பதில் விரசம்', 'கவிதைத் திருட்டு' போன்ற உப்புச்சப்பில்லாத விடயங்களுக்கு சப்பைக் கட்டுக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தநிலை தொடர்ந்தால் பரீட்சைக்காலங்களில் பரீட்சை பற்றி புலம்பும் கோமாளித்தனமான கூத்துக்களும் சினிமாப் பாட்டுக்களின் மெட்டுகளுக்கு வாய்க்கு வந்தவற்றையெல்லாம் எழுதிக்குவிக்கும் வெகுளிக் குணமும் தான் நம் சமூகத்தின் இக்கால 'அறுவடை' ஆகும். இக்கால இலக்கியமுமாகும்.

எனவே இன்றிருக்கும் இலக்கியப் பிரம்மாக்கள், விமர்சக வேந்தர்கள், ஆய்வு அரசர்கள் தயவு செய்து நிஷ்டை கலைத்து, மோனம் குலைந்து, திருவாய் மலர்ந்தருளி எமது இன்றைய நிலையை நிறுக்கத் தராசுகள் வாங்கி வரவேண்டும் என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைய பெருமைகளை
"நாளைக்கும்" சொல்லத் துடிக்கும,
**ஒரு தமிழன்**

# உங்கள் உள்ளத்திலிருந்து

## ஆசிரியபீடத்தில் தவறா?

சஞ்சீவியில் இந்திய சஞ்சிகையில் முன்பு வெளிவந்த கவிதையைத் திருடி ஒருவா அனுப்பிவைக்க. அதனைப் பிரசுரித்ததாக ஒரு வாசக அன்பர் குற்றம்சாட்டியிருந்தார். அது மிகப் பாரதூரமான குற்றம் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே. ஆனால் அதற்கான முழுப் பொறுப்பும் அதனை அனுப்பியவருடையதேயன்றி, சஞ்சீவி ஆசிரியர் குழுவினருடையதல்ல என்பது எனது கருத்து. ஒரு பத்திரிகையை அல்லது சஞ்சிகையை வடிவமைத்து வெளியிடுவது என்பது ஒரு சுலபமான விடயமல்ல. அதில் பல அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். ஆசிரியர் குழுவுக்கு வேலைப்பளு மிகமிக அதிகம். இந்த நிலையில் ஒரு கவிதையின் தரம்பற்றியே அவர்களால் கவனம் செலுத்த முடியும். வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் ஏற்கனவே வெளி வந்ததா என்பதனை ஆராய்ந்து நூற்றுக்கு நூறு வீதம் சரியான முடிவை எடுக்க முடியாது. அத்துடன் சகல பிரசுரங்களும் காரியாலயத்தில் இருந்தால்தான் அது சாத்தியமாகும்.

'திருடனாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்பது போல கவிதை எழுதுபவர்கள்தான் திருந்த முன்வர வேண்டும். மேற்படி கவிதையை அனுப்பியவர் தாமாகத் தமது தவறை உணர்ந்திருப்பார் என நம்புகின்றேன். இனிமேல் இது போலத் தவறு செய்யமாட்டார் என நம்புவோம். கவிதை எழுதுவதில் ஆர்வம் காட்டும் புதியவர்களுக்கு தமது ஆக்கம் பத்திரிகையில் வெளிவந்து விடவேண்டும் என்ற ஆசை ஏற்படுவது இயல்பு. பலமுறை முயற்சி செய்தும் தமது முயற்சி கைகூடாத போது ஏற்படும் ஒரு விரக்தி மனப்பான்மையே, இப்படியான செயற்பாடுகளில் ஈடுபட அவர்களைத் தூண்டுகின்றது என நினைக்கின்றேன்.

தமது கவிதை ஆக்கங்களின் தரம் போதாதிருப்பதே பிரசுரத்துக்கு ஏற்கப்படாததற்குக் காரணம் என்பதனை இவர்கள் புரிந்து கொண்டு தரமுள்ள ஆக்கங்களை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். அநேகமானவர்கள் காதலைக் கருப்பொருளாகக் கொள்வதை அவதானிக்க முடிகிறது.

இது அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைப்பது போலுள்ளதனால் புதிய கருத்தக்கள், சிந்தனைகள் இடம்பெற முடியாமற் போய் விடுகிறது. ஆக்கம் தரமற்றதாகிறது. ஆகவே புதிய கருப்பொருள்களில் இவர்கள் தமது கவனத்தைச் செலுத்தி ஆக்கங்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் வெற்றி நிச்சயம்.

வித்துவான் பதில்கள் பற்றி அடிக்கடி விமர்சிக்கப்பட்டு வருகிறது. காய்க்கிற மரத்துக்குத் தான் கல்லெறி விழும் என்பது பழமொழி. அது போலப் பலரும் விமர்சிப்பதிலிருந்து இப்பகுதி பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது என்பது தெளிவாகிறது.

சிலர் மேலோட்டமாக வாசித்து விட்டு விமர்சிக்கின்றனர். பதில்களை ஆழமாக ஆராய்ந்தால் அவை கருத்தோட்டம் மிக்கவையாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். உதாரணத்துக் ஒன்று. கேள்வி கேட்டவர் பயன்படுத்திய அடிக்கடி என்ற பதத்தையே, வேறு அர்த்தத்துடன் பதிலாகப் பயன்படுத்தியதைக் காணலாம். சில கேள்விகள் தரம் குறைவாக இருப்பதனால்தான் பதிலும் அவ்வாறு அமைகிறது எனக் கருதுகின்றேன்.

தம்மைத் தாக்குவதாகச் சில தாய்குலத்தோர் வரிந்து கட்டுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு வீட்டிலும் அவர்களுடைய ஆதிக்கம் அதிகமாக இருப்பது அவர்களின் மனச்சாட்சிக்குத் தெரியவில்லையா? உண்மையை உரைப்பதில் என்ன தவறு?

**உரும்பிராய். கு.சி.சுந்தரம்பிள்ளை.**

## திருந்துகிறார்களா பார்ப்போம்

சஞ்சீவியில் வெளிவரும் கிரிக்கெட் பகுதி அபாரம். அதில் வரும் ஜோக்குகள் வயிறு வலிக்க வைக்கின்றன. அந்த ஜோக்குகளையும் கோபிதான் வரைகின்றாரா? 'அம்பையர் அருணாசலம்' யாழ். கிரிக்கெட் நடுவர்களின் கோமாளித்தனங்களை அப்படியே பிரதிபலிக்கின்றார். அவரது அறுவைகள் தொடரட்டும். அப்பவாவது நமது நடுவர்கள் திருந்துகிறார்களா பார்ப்போம்.

**யாழ்ப்பாணம். சு.கௌசல்யன்.**

**வாசகரே! அந்த ஜோக்குகளைப் படைப்பவர் இன்னொரு இளைஞர். அவர்தான் நமது ஓவியர் 'தீபன்'.**

(ஆ-ர்)

## துண்டுப்பிரசுரத்துக்கு ஏன் விருது?

உதயன் தினசரிக்கு வழங்கப்பட்ட விருதானது குடாநாட்டு மக்களை முட்டாளாக்கும் ஒரு கண்துடைப்பு நிகழ்வே. தினமுரசு, வீரகேசரி, தினக்குரல் போன்ற தமிழ்ப் பத்திரிகைகள் எவ்வளவோ உயர்ந்த செய்திகளை வெளியிடுகின்றன. அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் வெறும் நான்கு மரண அறிவித்தலையும், இரண்டு கொமினிக்கேசன் திறப்புப் பற்றியும், ஆக மிஞ்சினால் ராக்கிங் பற்றியும் ஆசிரியர் சமூகம் பற்றியும் செய்தி வெளியிட்டதால் உதயன் துணிவான பத்திரிகையாகிவிட்டதா? இளம் கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்ததா? களப் போரிலே மாண்டவருக்கு அஞ்சலி செய்ததா? தமிழைக் காத்ததா? ஈழதேசத்தினை வரவேற்றதா? சீதனக்கொடுமையை எரிக்க முயன்றதா? சமுதாயச் சீரழிவைத் தடுத்ததா? ஒன்றும் செய்யவில்லை! பின், நான்கு ஒற்றைத்துண்டுப் பிரசுரத்திற்கு ஏன் விருது வழங்க வேண்டும்? நிச்சயமாக இது குடாநாட்டு மக்களை முட்டாளாக்கும் நிகழ்வே!

**கொம்மந்தறை. இதயநிலா.**

## பாராட்டுவதே சிறந்தது

முன்னர் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆற்றிவந்த பணியை 'உதயன்' - 'சஞ்சீவி' இன்று தனித்திருந்து ஆற்றுகின்றது. அதன் மீது குறைகளையும், அறிவுரைகளையும் மட்டும் அள்ளிவீசுவது முறையா? பாராட்டுக்களைக் காணவில்லையே! ஏன்?

பாராட்டத்தக்க நல்ல அம்சங்களை விட்டுவிட்டு குறைகளை மட்டும் தேடிப்பிடித்து எழுதுகின்றீர்களே. ஆசிரியபீடமும் அவற்றிற்கு இடம் கொடுத்து தன்னைத்தானே ஏன் தாழ்த்திக் கொள்ள வேண்டும்? பாராட்டி, உற்சாகப்படுத்தும் நாகரிகத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். அது தான் தனித்துநின்று எமக்காகக் குரல் கொடுக்கும் உதயன் - சஞ்சீவிக்கு நாங்கள் செலுத்தும் நன்றிக்கடனாக இருக்கும்.

**அரியாலை. வை.சுகனியா.**

## இந்த இருட்டடிப்பு ஏன்?

1999 ஏப்ரல் மாதம் சார்ஜாவில் நடைபெற்ற - மூன்று நாடுகளுக்கிடையிலான - ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள், ஆசியக் கோப்பைப் போட்டிகள் பற்றிய செய்திகளை உதயன் - சஞ்சீவி பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்துவிட்டன! ஏனையா உங்களுக்கு இந்த அநியாய வேலை? சனசமூகங்களுக்கிடையிலான போட்டிகள் பற்றி விளாசித்தள்ளுகின்றீர்கள். ஆனால் சர்வதேச மட்டத்தில் நடைபெறும் போடடிகள் பற்றி மௌனம்! இருட்டடிப்பு!!

யாழ்குடாநாடு தொலைத் தொடர்பு வசதிகள் பூரணமாகப் பெற்ற ஒரு பகுதியல்ல என்பதனை நீங்கள் அறிவீர்கள். ஆகவே இனிமேலாவது சர்வதேச மட்டத்தில் விளையாடப்படும் கிரிக்கெட் போட்டிகள் பற்றிய செய்திகளைத் தவறாது பிரசுரிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் வருகிற உலகக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் பற்றிய தகவல்களை பூரணவிவரங்களுடன் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கரவெட்டி. கா.மணிவண்ணன்.**

## பொக்கிஷமே!

**சஞ்சீவியே! சமகாலப் பொக்கிஷமே!
சனிக்கிழமை தோறும் சரீரம்
எடுத்திடுவாய்
விஞ்சிடுவாய் விற்பனையில்
விரைந்து தரும் செய்திகளால்
பிஞ்சு மனங்களுக்கு
சிந்திக்கப் பழக்கிடுவாய்
பஞ்சமில்லாமலே பகர்ந்திடுவாய்
பாரில் உள்ள பலதரத்து
விந்தைகளை
சந்தமிகு கவிதைகளை
சமூகத்துச் சிறுகதையை
பந்தடித்துப் பாரில்
பாராட்டுப் பெற்றவரை
எந்தமிழில் சொல்லி
எமையெல்லாம் மகிழ்விப்பாய்
வந்தனங்கள் கூறி
வரவேற்போம் நாம்**

வல்லிபுரக்குறிச்சி. வி.பி.ஆர்.இராமச்சந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதி இளைஞர்களின் விஜயம் புதிய முயற்சி

# அதிகாரிகளை கேள்விக் கணைகளால் துளைத்தனர்

யாழ்ப்பாணத்தில் இவ்வாரத்தில் குறிப்பிடத்தக்க விவகாரம் மாணவர்களின் பகிஷ்கரிப்பும் அவர்களுக்குக்கிடைத்த வெற்றியுமாகும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலைப்பீட மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டபோதிலும் அது பெரிதாகாமல் பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்தது. மாணவர்கள் நடவடிக்கையில் இறங்காமல் தவிர்க்கும் விதத்தில நிலைமை சமரசமாகத் தீர்க்கப்பட்டது.

இவ்விடயத்தில் மாணவர்களின் நலன்களைக் கவனிப்பதில் துணைவேந்தர் தாமே பொறுப்பேற்றுக் கொண்டு, நிலைமை இசக்குப் பிசக்காகிவிடாமல் பார்த்துக்கொண்டார். இராணுவ உயர் அதிகாரிகளும் விவகாரத்தை ஆக்கபூர்வமாக அணுகியும் ஆராய்ந்தும் ஒரு சமரச நிலையைத் தோற்றுவித்தனர்.

முதலில் கைது செய்யப்பட்டும் பின்னர் துணைவேந்தரிடம் ஒப்படைக்கப்பட்டும் இருந்த பல்கலைக்கழக மாணவர்கள் அ.சுதர்ஸன், ச.நந்தசீலன் தங்கியிருந்த அறையிலேயே யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் (ஸ்ரான்லி கல்லூரியின்) உயர் வகுப்பு மாணவன் த.சிவரூபனும் தங்கியிருந்து கல்வி கற்றார். பல்கலைக்கழக மாணவர்களை இராணுவத்தினர் கைது செய்தவேளை சிவரூபன் அங்கிருக்கவில்லை.

சிவரூபன் நீர்வேலியைச் சொந்த இடமாகக் கொண்டவர். எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் நடைபெறும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார். அதனால் நாளாந்தம் வீடு சென்று வராமல் பாடசாலைக்குச் சமீபமாக - நகரில் - தங்கி நின்று படிக்க விரும்பினார். பரீட்சையில் நல்ல பெறுபேறு பெறவேண்டும் என்ற அக்கறையால் இங்கேயே தங்கியிருந்து படிப்பதற்காக இடம் தேடினார். மேற்குறிபிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருந்த வீட்டில் தாமும் வாடகைக்குக் குடியிருந்தார்.

சிவரூபன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்றும் அவரைத் தாம் தேடுவதாகவும் இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. இதனைக் கேள்வியுற்ற அவரின் தந்தை தமது மகன் அப்பாவி என்பதனால் அவரை இராணுவத்திடம் ஒப்படைத்தார். குற்றமுள்ள நெஞ்சு தானே குறுகுறுக்கும்? மகன் கல்வியிலேயே அக்கறையுடையவன். பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்பவன். அக்காவைப் போல தானும் பல்கலைக்கழகத்துக்குள் நுழைய வேண்டும் என்ற ஆர்வத்துடன் படிப்பவன். புலிகளுடன் எந்தவித தொடர்பும் இல்லாதவன். படையினர் சந்தேகிப்பது போல அவன் எதிலும் ஈடுபடவில்லை என்பதனால தந்தையின் மனம் குறுகுறுக்கவில்லை. மகனை அழைத்துச் சென்று படையினரிடம் சரண் அடையச்செய்தார் - குற்றமிழைக்காத அப்பாவிக்குத் தண்டனை ஏதும் கிடைக்காது; விசாரித்த பின்னர் விடுவித்து விடுவார்கள் என்ற நம்பிக்கையுடன்.

## உள்ளும் புறமும்

குறுமுனி

ஆனால் நடந்ததோ வேறு; தந்தையின் நம்பிக்கைக்கு முற்றிலும் முரணானது. சிவரூபனுக்குத் தாம் கூறும் குற்றங்களில் சம்பந்தம் உண்டு எனச் சொல்லித் தடுத்துவைத்தனர். அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக அநுராதபுரம் கொண்டு செல்லப்போவதாகவும் செய்திகள் வந்தன. அப்பாவியான சிவரூபனுக்கு நேர்ந்தகதி தமக்கும் ஏன் உண்டாகாது என்று மாணவர்கள் சிந்தித்தனர். அவரைத் தடுத்து (அடைத்து) வைப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்காவிடில் கல்வியில் அக்கறையுள்ள, பாடசாலைகக்கு ஒழுங்காக சமுகமளிக்கும் மாணவர்களுக்கும் கூட இவ்வாறு நடக்கலாம் என்ற அச்சநிலை நிலவியது.

உணர்வு செயலானது. ஸ்ரான்லிக் கல்லூரி மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமையன்று தமது சக மாணவனை விடுவிக்கக் கோரி அடையாள வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். கல்வி அதிகாரிகள் இராணுவத் தரப்பினரைச் சந்தித்து மாணவனை விடுவிக்குமாறு கேட்டனர். ஆனால் இராணுவத்தினர் அப்போது உடன்படவில்லை.

ஸ்ரான்லிக் கல்லூரி விவகாரம் பெரிதாகி மாணவர் வகுப்புப் பகிஷ்கரிப்பு ஏனைய பாடசாலைகளுக்கும் பரவும் சூழ்நிலை உருவாகியது. ஆனால் சம்பந்தப்பட்டோர் கண்டும காணாத அணுகுமுறையைக் கைக்கொண்டனர். திங்கட்கிழமை நகரில் உள்ள ஏனைய பாடசாலை மாணவர்களும் களத்தில் இறங்கினர். அடுத்த நாள் வலிகாமம் முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் வகுப்புக்ளைப் பகிஷ்கரித்தனர்.

எனினும் பின்னர் நிலைமையை உணர்ந்த படைஅதிகாரிகள், கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்த விளக்கங்களை சற்று சீரணிக்கத் தொடங்கினர். கல்வி என்பது யாழ்ப்பாணத்தின் கூர்மையான (Sensitive) விசயம் என்ற உண்மையைப் புரிந்திருக்க வேண்டும். இதன் விளைவாக அதிகாரிகளின் அணுகுமுறை மாறியது. 51ஆவது படையணியின் தளபதியான பிரிகேடியர் மாரம்பே அது விடயத்தில் தக்கவாறு செயற்பட முனைந்தார். பல உயர்பீடங்களுடன தொடர்பு கொண்டார். பல தரப்பாரும் மாணவன் சிவரூபனை விடுவிக்காவிடில் எழக் கூடிய நிலைமையை பல வகைகளிலும் கூட்டிக் கழித்தப் பார்த்திருக்கவேண்டும்.

### மல்லாகத்தில் ஆஜர்

அவற்றின் பெறுபேறாக ஸ்ரான்லிக் கல்லூரி மாணவன் சிவரூபன், காங்கேசன்துறை தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டரால் புதன்கிழமை முற்பகல் மல்லாகம் பதில் நீதிவான் எஸ்.சபாநாதன் முன் ஆஜர் செய்யப்பட்டார். மாணவன் மீது குற்றச்சாட்டு ஏதுவும் சுமத்தப்படவில்லை. நீதிவான் அவரை விடுதலை செய்தார். மனித உரிமை ஆணைக்குழு யாழ். பொறுப்பதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் மாணவனைப் பொறுப்பேற்று அவரது பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

அடுத்த நாள் வியாழக்கிழமை காலை, வீதிகளில் மாணவர்கள் சாரி சாரியாக பாடசாலைக்குச் செல்வதைக் காணமுடிந்தது.

மக்கள் மீளக் குடியமர்ந்தபின்னர் - கடந்த மூன்று வருட காலத்தில் மாணவர்கள் ஒன்றுபட்டு ஆட்சேபம் தெரிவித்ததால் கிடைத்த முதலாவது வெற்றி நிகழ்வாக இது பதிவாகும்.

மேலும் சந்தேகத்தின் பேரில் கைது என்ற முத்திரையுடன் அப்பாவிகள் பலர் கைது செய்யப்படுகிறார்கள் என்ற உண்மையும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதைக்காணலாம்.

மாணவன் சிவரூபனை 12 நாள்களாகத் தடுத்து வைத்தவர்கள் அவர் மீது குற்றம் எதனையும் சுமத்தக் கூடிய ஆதாரம் எதுவும் இல்லாமலே அவ்வாறு செய்தார்களா?

இன்னொன்று. இராணுவத்தினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்தவர்களை விசாரித்து விட்டு தடுத்து வைப்பதற்காகப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். பொலீஸாரும் விசாரிக்கின்றனர். அவர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்த வேண்டும் என்பதற்காக ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதும் உண்டு.

எவ்வாறாயினும் கைது செய்து தடுத்து வைப்போரை நீதி மன்றத்தில் ஆஜர் செய்வதற்காக பொலீஸார் அவர்களை அநுராதபுரத்துக்கே கூட்டிச் செல்கின்றனர். ஆனால் மாணவர்களின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் சிவரூபன் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். இதன் பின்னர், இராணுவத்தினரால் கைது செய்யப்படுவோரை மல்லாகம் நீதிமன்றத்திலேயே ஆஜர் செய்யலாம்தானே? காங்கேன்துறை, பலாலிப் பிரதேசங்கள் மல்லாகம், நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்டவையே. ஆகையால், சந்தேகநபர்களை - எதிரிகளை - மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதே உகந்தது - பொருத்தமானது.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படுவோர் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதாலும், தெற்கில் உள்ள தடுப்பு முகாம்களிலும், சிறைகளிலும் தடுத்து வைக்கப்படுவதாலும் ஏற்படும் சிரமங்கள் எண்ணில் அடங்கா. அவற்றைப் போக்குவதற்கேனும். மல்லாகத்தில் ஆஜர் செய்து குடாநாட்டில் ஓரிடத்திலேயே தடுத்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இது குறித்து தமிழ்க்கட்சிகள் அக்கறை காட்டக்கூடாதா?

இந்த வாரத்து நிகழ்வை ஓர் உதாரணமாக எடுத்துக் காட்டி, இந்த வழியை செய்வதற்கு தமிழ்க்கட்சியாளருக்கு திராணி உண்டா? செய்வார்களா?

தங்களிடம் இல்லாத ஒற்றுமை குடாநாட்டு மாணவர்களிடம் இருப்பதாலேயே அவர்களால் வெற்றிகாண முடிந்தது என்று ஸ்ரீமான் பொது ஜனம் திரும்பக் கேட்கலாம் என்ற அச்சம் அரசியல்வாதிகளை நெருக்குதல் செய்யும் என்பது வேறு விடயம்.

இவ்வாரத்தில் யாழ்ப்பாணத்திற்கு தெற்கிலிருந்து இரண்டு குழுக்கள் விஜயம் செய்திருந்தன.

மேற்கு நாடுகளில் இலங்கைத்தூதுவர்களாகப் பணிபுரியும் அறுவர் கடந்த எட்டாம் திகதி ஒரு நாள் விஜயமாக இங்கு வந்திருந்தனர். இவர்களுடன் வெளிநாட்டமைச்சைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகளும் வந்தனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளுமாக 30பேரைக்கொண்ட நல்லெண்ணக்குழு இம்மாதம் பத்தாம் திகதி யாழ்ப்பாணம் வந்திருந்தது. அக்குழு கடந்த ஆறு நாள்களாக குடாநாட்டின் பல பகுதிகளையும் சென்று பார்த்தது. இக்குழுவுடன் பத்திரிகையாளர் குழு ஒன்றும் வந்திருந்தது.

ஜேர்மனி, நெதர்லாந்து, ரஷ்யா, ஜெனிவா (ஐ.நா), கனடா, ஒஸ்ரியா ஆகிய நாடுகளில் இலங்கைத்தூதுவர்களாகப் பணிபுரியும் முறையே எஸ்.பி.அத்துக்கொட, வை.எல்.எம்.சவாஹிர், என்.சிக்கந்தர், ஜி.எஸ்.பலிக்கார, ஏ.சி.குணசேகர, சி.எஸ்.பூலோசிங்கம் ஆகியோர் இங்கு வந்திருந்தனர்.

கொசோவோ விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் சிறுபான்மை மக்களின் பக்கம் சாய்ந்து நிற்கும் அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றன. அதனை மையமாக வைத்து, இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்திலும் ஐரோப்பிய நாடுகள் தமிழருக்குச் சார்பாகச் செயற்பட வேண்டும் என்ற வகையில் விடுதலைப்புலிகள் சார்பாக பிரசாரம் செய்யப்படுகிறது என்றும் - அதனை முறியடிக்கும் வகையில் பிரசாரம் செய்யவேண்டிய தேவை அரசுக்கு உண்டாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு வந்தது. இதுகுறித்து ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கைத்தூதுவர்களுக்கு விளக்குவதற்காக அவர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் அறுவரே யாழ்ப்பாணம் வந்தனர். இங்குள்ள நிலைமையை அறிந்து அதற்கேற்றவாறு யாழ்ப்பாண அபிவிருத்தி என்ற பெயரில் நிதிஉதவி பெறுவதற்கு உகந்த வகையில் பிரசாரம் செய்வதற்கான தகவல்களை இங்கு திரட்டுவதும் தூதுவர்களின் விஜயத்தின் நோக்கங்களில் ஒன்று.

## மாணவரின் வகுப்புப் பகிஷ்கரிப்பு மூன்று வருடங்களில் முதலாவது வெற்றி

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த தூதுவர்கள் எட்டாம் திகதி நண்பகலில் யாழ். செயலகத்தில் அரசஅதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்கள். இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனாவும் கலந்துகொண்டார். மக்கள் அமைப்புக்கள், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இம் மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கும் வெளி மாவட்டங்களுக்கும் இடையிலான நிரந்தர கப்பற்சேவையின் அவசியமே இம்மாநாட்டில் பிரதானமாக எடுத்துரைக்கப்பட்டது. இது குறித்து அரசின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக தூதுவர்கள் கூறிச் சென்றனர். அந்த விடயத்தில் அவர்களின் விஜயம் எந்தவகையில் உதவும் என்பதனைச் சொல்ல முடியாது.

தெற்கிலிருந்து இளஞர், யுவதிகள் தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் வடக்கு - தெற்கு பாலம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இங்கு வந்தனர். காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இந்த இளைஞர், யுவதிகளாவர். தென்பகுதியைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கும் குடாநாட்டு இளைஞர், யுவதிகளுக்கும் இடையில் நட்புறவை வளர்க்கும் நோக்குடன் இத்தகைய விஜயங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்ச்சி திட்டத்துக்கு 13 இலட்சத்து 37ஆயிரத்து 500ரூபா வரை ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அறியவந்தது. இதில் விமான டிக்கெட்டுக்கு மட்டும் 3இலட்சத்து 37ஆயிரம் ரூபா வரை செலவாகியதாம்.

இந்தக்குழுவினர் வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள இளைஞர் யுவதிகளைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து கலந்துரையாடினர்.

யாழ்.செயலகத்தில் இம்மாதம் 12ஆம் திகதியன்று யாழ்.அரசஅதிபர், யாழ்.மாவட்ட பிரதேச செயலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்ட சந்திப்பிலும் தெற்கு இளைஞர் யுவதிகள் பங்குபற்றினர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அரசஅதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்களிடம் கேள்விகள் கேட்டு தென்பகுதி இளைஞர்கள் நிலைமையைத் தெரிந்துகொண்டனர்.

### கேட்டாரே ஒரு கேள்வி

யாழ்ப்பாணத்தில் புதைக்கப்பட்டிருப்பதாக கூறப்படும் கண்ணிவெடிகள் ஏன் இதுவரை அகற்றப்படவில்லை? பல இடங்களில் "மிதிவெடிகள் கவனம்" என்ற அறிவித்தல் பலகை போடப்பட்டுள்ளதே. என்ன காரணம்? - என்பது அவர்களின் கேள்விகளில் ஒன்று.

யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து சீரின்மையால் உணவுப் பொருள்களுக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் நாம் பருத்தித்துறை துறைமுகத்துக்குச் சென்று பார்த்தபொழுது அங்கு பத்துக்கு மேற்பட்ட லொறிகளில் சாராயம் மற்றும் மதுபான வகைகள் கப்பலிலிருந்து ஏற்றப்பட்டுக்கொண்டிருப்பதைக் கண்டோம். மக்கள் உணவுக்கு கஷ்டப்படும் இன்றைய நிலையில் ஏன் பெருமளவில் சாராயம் கொண்டு வரப்படுகிறது? - என்ற கேள்வியும் எல்லோரையும் திணறடிக்கச் செய்தது.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படுபவர்கள், காணாமல் போவோர் என நாளாந்தம் மக்கள் அவலப்பட்டுக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. இதனைத் தடுத்து நிறுத்த முடியாதா? - இது இன்னுமொரு கேள்வி.

யாழ்.மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுகின்றதா?அவை உரிய முறையில் மக்களைச் சென்றடைகின்றனவா? - என்பது அவர்கள் அதிகாரிகளிடம் போட்ட மற்றொரு கேள்வி.

யாழ்ப்பாணத்தில் டாக்டர்களுக்கு பற்றாக்குறை, பாடசாலைகளுக்கான வசதிகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்துத திணைக்களத் தலைவர்களை துளைத்து எடுத்தனர்.

திணைக்களத் தலைவர்களின் பதில்கள் நேரடியானவையாக அன்றி சுற்றிவளைத்து மயக்கம் தருவனவாக அமைந்திருந்தன. வந்தவர்கள் அவற்றை எப்படிப் புரிந்து கொண்டார்களோ தெரியவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு வந்தோம்; பார்த்தோம்; போகிறோம் என்ற திருப்தியுடன் தென்பகுதி இளைஞர்கள் சென்றனர். இங்கு நடப்பவை குறித்துத் தென்னிலங்கையர்களுக்குக் கூறுவதற்கு நிறைய இருக்கிறது என்று அந்த இளைஞர்களில் ஒருவர் கூறினார்.

அவர்களது விஜயம் தமிழ் மக்களின் கஷ்டங்களைத் தெரிந்துகொள்ள உதவுமானால் பயனுள்ளதாகவே அமையும்.

### போர் முடியாது

வன்னிக்குச் சென்ற சர்வமதக் குழுவின் பிரதிநிதிகள் கடந்த பெப்ரவரி மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்த போது அரசாங்கத்துடன் பேசுவதில் புலிகள் ஆர்வமாக உள்ளனர் என்பது தென்னிலங்கையருக்குத் தெளிவாயிற்று.

பெப்ரவரி பத்தாம் திகதி விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய சர்வமதக் குழுவினர், தாம் பேசிய விவரங்களை ஜனாதிபதியிடம் ஏப்ரல் மாதம் 26ஆம் திகதியே எடுத்துக்கூற முடிந்தது.

ஆனால் ஜனாதிபதி புலிகள் விரும்பும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை அடியோடு நிராகரித்து விட்டதால் இருதரப்பாருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்ற நம்பிக்கை இழந்து போயிற்று. விடுதலைப் புலிகள் தமது தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட வேண்டும் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடு பேச்சுவார்த்தைக்கான கதவுகளையே அடித்து மூடிவிட்டிருக்கிறது.

எனினும் சர்வமதக் குழுவின் பிரதிநிதிகள் மீண்டும் ஒருமுறை வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு ஜனாதிபதி பச்சைக்கொடி காட்டினார்; பாதுகாப்பு அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

மீண்டும் வன்னிக்குச் செல்ல ஜனாதிபதி அனுமதி அளித்த போதிலும், தாம் உடனடியாக அங்கு செல்லப்போவதில்லை என்றும் விடுதலைப்புலிகளுடன் என்னென்னவற்றைப் பேசுவது என்பதனைத் தமக்குள் ஆராய்ந்த பின்னரே அங்கு செல்ல முடியும் என்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அப்போது தெரிவித்திருந்தார்.

வெசாக் பண்டிகைக்கு முன்னதாக சர்வமதக்குழுப் பிரதிநிதிகள் வன்னிக்குள் சென்று விடுதலைப்புலிகளின் தலைவர்களுடன் பேசுவார்கள் என்றும் அப்போது ஜனாதிபதி கூறிய தகவல்களை - செய்தியை - அவர்களுக்குத் தெரியப்படுத்துவர் என்றும் இப்போது அறியப்படுகிறது.

வன்னியில் படையினர் மீண்டும் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதால் சமாதானப் பேச்சுக்கான முயற்சிகளில் ஈடுபட்டு வந்த தரப்பினர் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இதற்கிடையில் -

மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப்புலிகளுடன் பேசுவது குறித்து அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டும் என்று அஸ்கிரிய பீடாதிபதி அதி.வண.பலிப்பாண ஸ்ரீ சந்தானந்த மகாநாயக்கர் கருத்துத் தெரிவித்திருப்பதால், அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றுமோ என்ற கேள்வியும் அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

இவ்வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மகாநாயக்கர் தேரரின் கருத்துக் குறித்து ஆராயப்படலாம் என்ற எதிர்பார்ப்பு கொழும்பில் பத்திரிகையாளர் வட்டாரங்களில் நிலவியது.

எனினும் அமைச்சரவையில் அது குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை என்று தெரிய வந்திருக்கிறது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தை ஏற்பதில்லை என்ற நிலைப்பாட்டிலிருந்து அரசாங்கம் மாறமாட்டாது என்றும் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது. ஆளுங்கட்சித் தரப்பில் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துக்கு எதிரான கருத்தே மேலோங்கி நிற்பதாக அறியப்படுகிறது.

இதேவேளை, இராணுவத்தினருக்கு அவர்களது போர் நடவடிக்கைகளை நிறுத்துமாறு அரசாங்க உயர்பீடம் இலேசாகத்தானும், சூசகமாகவேனும் எவ்வித சமிக்ஞையும் காட்டவில்லை என்று இராணுவ வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

வன்னியில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் நோக்குடன் போர் நடவடிக்கை தொடரும் எனவும் அதே வட்டாரங்கள் உறுதி செய்தன.

மொத்தத்தில் போருக்கு இப்போது முடிவில்லை; சமாதானம் - தீர்வு இப்போது கிடைக்காது என்பது எப்போதோ முடிந்த காரியமாகி நிற்கிறது!.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜங்கள்

புதைகுழியா? அதை விடுங்கள்.
வதை முகாமா? கதை வேண்டாம்.
கோல்ட் லீவும்
கொகா கோலாவுடன்
கோல்ட் மெண்டிஸ் ஒல்ட் அராக்கும்
ஒளியேத்த மின்குமிழும்
பயணமிட படை விமானமும்
சுழலவிட மின்விசிறி
சுழட்டலுக்கு கோவில், திருவிழாக்கள்
வழிகாட்ட தமிழ்க்குழுக்கள்
பார்வையிடப் படையப்பா
மினி நீலம் அப்பப்பா!
இனியென்ன சொர்க்கமே நம்கையில்
கொட்டில்களில் கிபீருடன் கூட
கட்டில் பிஸ்நெஸ்ஸூம் கண் படியலைமோத
இனியென்ன சொர்க்கமே நம்கையில்
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே!
அதென்ன தடைமுகாமா?
ஐயையோ ஐ.சியைக் காணலையே!
கையெல்லாம் பதறுகிறதே!
யாராவது கண்டீர்களா?

**பண்ணாக நாரதன்.**

## விடைகள்

VIII மற்றும் IX ஆம் பக்கங்களில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-


### தெரியுமா?

1) திரையரங்குக்குப் போனவர்கள் நானும் நன்பனும்தான். ஏனையோர் எதிர்வந்தவர்கள்தானே!


2)

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 4 | 5 | 3 | 1 |
| 5 | 3 | 1 | 2 | 4 |
| 1 | 2 | 4 | 5 | 3 |
| 4 | 5 | 3 | 1 | 2 |
| 3 | 1 | 2 | 4 | 5 |

3)




4)



### பாகங்களைப் பொருத்துங்கள்!


அ). A-6 இ). C-4
ஆ). B-5 ஈ). D-1

### எத்தனை?

1) 17 சதுரங்கள்.
2) 47 முக்கோணங்கள்.
3) 35 முக்கோணங்கள்.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.102



**சொற்சிலம்பம் இல. 102**
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................................................
விலாசம்: ......................................................................
..........................................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவு திகதி: 21-05-1999

### இடமிருந்து வலம்

1. பந்தேபஸ்து. 5. சபை, 7. குற்றி. 8. செய்தி. 10. ஒரு திக்கின் சுருக்கம். 11. அடையாளம். 12. அறம். 15. விளை நிலம். 16. இசைப்பாட்டு. 17. எடை. 18. மறைப்பு. 19. இது இல்லாவிட்டால் வைத்தியரிடம் போக வேண்டி வரும். 20. இந்தப் புருசனைத்தான் பெண்கள் பொதுவாக விரும்புவார்கள். 21. தூர அலகு. 22. தர்மவான்.

### மேலிருந்து கீழ்

1. வைஷ்ணவப் பெரியவர். 2. தீயவர். 3. ஒரு பறவை. 4. ஒரு கிழமை. 5. பிணம். 6. தாய் ஊட்டுவது. 9. பாரமான. 11. ஓர் இராசி. 13. இதுவும் ஓர் இராசி. 14. பாண்டித்தியம் மிக்கவன். 16. வெடிப்பது இப்படி. 17. கசப்பான மரக்கறி வகை. 18. புவி. 19. பாரம். 20. பயனின்மை.

## சொற்சிலம்பம் 100 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

| | | | |
|---|---|---|---|
| 1. யோகர்சுவாமி | 7. கதி. | 8. பரதவர். | 10. நிர்வாகம். |
| 12. சிவ. | 13. தரு. | 14. கட்சி. | 15.உரோமம். |
| 16. சதகம் | 17. நான்கு. | 19. மாயம். | 20. பலா. |
| 21. தின். | 22. குன்றுதல். | | |

### மேலிருந்து கீழ்

| | | | |
|---|---|---|---|
| 1. யோகநிலை. | 2. கதிர். | 3. சுபகருமம். | 4. வாரம். |
| 5. மித. | 6. ஊர்வசி. | 9. வசிட்டன். | 11. வாதரோகம். |
| 15. உதயன். | 16. சமாதி. | 17. நாலாறு. | 18. குயில் |
| 20. பன். | | | |

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

முதலாம் பரிசு: செல்வி சாந்தினி சோமசுந்தரம்,
29, பிளச்சஸ் லேன்,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்..

இரண்டாம் பரிசு: பொ.நமசிவாயம்,
தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

மூன்றாம் பரிசு: ஞா.நாகேஸ்வரி,
மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு,
கைதடி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

முதற் பரிசு: ரூபா 150.00
இரண்டாம் பரிசு: ரூபா 100.00
மூன்றாம் பரிசு: ரூபா 50.00

புதிர்ப்போட்டி இலக்கம் 101 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

## 14 ஆண்டுகளுக்கு....

(Iஆம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள் கடற்படையினரால் நடுக் கடலில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்" என்பதே அச்செய்தி, ஊரெங்கும் மரண ஓலம். துறைமுகத்தில் ஊரே கூடியது. யார் இறந்தார்கள்? யார் தப்பினார்கள்? அவர்கள் நிலை என்ன? அறிய வழி எதுவுமில்லை. செய்வதறியாது ஊரே அழுது புலம்பியது.

தகவல் அறிய வேண்டுமாயின் இங்கிருந்து ஒரு படகு அங்கு போய் வரவேண்டும்... அல்லது அங்கிருந்து படகு வரவேண்டும். அங்கிருந்து எதுவும் வருவதாக இல்லை. இந்நிலையில் கடலில் பயணம் செய்தால் ஆபத்து ஏற்படுமோ என்ற அச்சம் ஒரு புறம். வேறுவழியின்றி தனியார் படகொன்றில் சிலர் குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர். பகல்பட நெடுந்தீவுத் துறைமுகம் நோக்கிப் படகுகள் வந்து சேர்ந்தன. கூடியிருந்த மக்கள் முகங்களில் தோன்றிய வினாக்களுக்கு கரையிறக்கப்பட்ட சடலங்கள் விடையளித்தன. படுகாயங்களுடன் உயிர்தப்பியவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இறந்தோரில் ஒன்றரைமாதப் பச்சிளம்குழந்தையும் அடங்கி இருந்தது.

படகினை வழிமறித்து ஏறிய ஆயுதம்தாங்கியோர் படகின் ஓரறையில் பயணிகள், சிப்பந்திகள் அனைவரையும் ஒன்றுசேரவைத்து ஒவ்வொருவராக படகின் மறு அறைக்கு அழைத்து வெட்டிச் சாய்த்திருக்கிறார்கள். அறையில் அடைபட்டு இருந்தவர்களுக்கு மறு அறையில் நடந்த அவலம் புரியவில்லை. படகின் எஞ்சின் சத்தம் வெட்டுவோரின் அழுகுரலை கேட்காது தடுத்து விட்டது. அவலம் புரிந்தோரும் சுற்றி நின்ற காவலினால் செய்வதறியாது திகைத்தனர். அதனையும் மீறி கடலில் பாய்ந்து தப்ப முயற்சித்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் சடலம் சில தினங்களின் பின் கரையொதுங்கியது. மற்றைய அனைவரும் ஒவ்வொருவராக ஒருவர்மேல் ஒருவராக வெட்டிச் சாய்க்கப்பட்டபின் படகு கடலில் கைவிடப்பட்டது. கடலில் அனாதரவாக அலைந்த குமுதினியைக் கண்ட - குறிகாட்டுவான் கரையில் நின்ற - படகோட்டிகள் சிலர் அதனைக் கரை சேர்த்தபோதே நடந்துள்ள அவலத்தைப் புரிந்தனர். உடனடியாக செயற்பட்ட அப்பகுதி வாழ்மக்கள் உயிருடன் கிடந்தவர்களை வைத்தியசாலைக்கு அனுப்பி உயிர்பிழைக்க வைத்தனர். தாமதித்திருந்தால் இரத்தப் பெருக்கால் அனைவரும் இறந்திருப்பர். சடலங்களும் உரிய முறையில் அனுப்பி வைக்கப்பட்டன. அவல வேளையில் அவசரமாகச் செயற்பட்டு உதவிய புங்குடுதீவு வாழ் மக்கள் என்றும் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியவர்கள்.

இன்னல் நிறைந்த ஈழத்தமிழரின் வாழ்வில் துயரம் மிக்க ஓர் அங்கமாக அமைந்து விட்ட இந்நிகழ்வை எண்ணி உள்ளம் உருகுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

## வாழ்வின்......

(XIஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரச் சோத்துக்கு வழியில்லாமல் வாடுகிற குடும்பங்கள் எவ்வளவு எனத்தெரியுமா? சைக்கிளில விறகிழுத்துச் சீவிக்கின்ற குடும்பங்கள் எத்தனை தெரியுமா? தகப்பனை இழந்த எத்தனை சிறுபிள்ளைகள் படிப்பை இடையில விட்டிட்டு விறகிழுக்குதுகள் தெரியுமா?"

மகளை ஆழமாகப் பார்க்கின்றேன்.

"வாழ்க்கையைச் சுமையாக எண்ணிக் கொள்ளக் கூடாது, பிள்ளை. எதுக்கும் நீங்க முடிவெடுத்தது போல ஒருக்கா கொழும்புக்குப் போய் பிள்ளையோட கதைச்சுட்டு வாருங்கோ. அப்பதான் உங்களுக்குத் திருப்தியாக இருக்கும். சரசுப் பேத்தி எங்களோட இருக்கட்டும்."

"சரசுவையும் சந்திரனையும இங்க விட்டிட்டுப் போகத்தான் வந்தம்." என்றான் சுப்பிரமணியம்.

"மெத்தச் சந்தோஷம்....."

அடுக்களைக்குள் மீன்குழம்பு கொதிக்கிற வாசம் எழுந்தது. மெதுவாகப் பசி கிளம்புவதான உணர்வு. அப்போது அடுக்களையில் இருந்த தையல் முத்து சேலைத் தலைப்பால் நெற்றியைத் துடைத்துக் கொண்டு வந்தாள்.

"சங்கதி தெரியுமே? பத்மா இந்தியாவிலிருந்து வாறாளாம். உரும்பிராயிலிருந்து சின்னத்தம்பியர் வந்தவர். கடிதம் வந்திருக்காம். அங்க இருக்கேலாதாம். ஐந்தாறு நாளில வெளிக்கிடுகினமாம். உங்களுக்கும் சொல்லச் சொல்லி எழுதியிருக்கிறாளாம்."

ஆவலுடன் மனைவியைப் பார்க்கிறேன்.

"சின்னத்தம்பி எப்ப வந்தவன்?"

"மத்தியானம் போல. உள்ளுக்கும் வரவில்லை. வாசலில கூப்பிட்டுச் சொல்லிவிட்டு நாளைக்கு ஆறுதலாக வாறன் என்று கூறிவிட்டுப் போனார்."

"அதை இப்ப தானேப்பா சொல்லுறாய்? எவ்வளவு முக்கியமான விசயம்."

"நீங்க இங்க இருந்தாத்தானே சொல்லுறது."

"சரிசரி சண்டைபிடிக்காதைங்கோ" என்றாள் தாரணி.

"அன்ரிக்கு எத்தனை பிள்ளையள் அம்மா? "

"பத்மாவுக்கோ..... இரண்டு பேர்... மூத்தவன் ஜனார்த்தனன், மற்றது உமா."

சில கணங்கள் அப்படியே எதுவும் பேசாமல் அமர்ந்து விடுகின்றேன். என்னுடைய கடைசித் தங்கையின் மகள் பத்மா. எனக்கு மருமகள். அவளை எண்ணும் போது கவலைகள் இருளாக மூடுகின்றது. இந்தப் போராட்டத்துக்கு குடும்பத்தினர் கொடுத்த விலை மிகஅதிகம். என் குடும்பத்தில் மட்டும் கணவன்மாரை பறிகொடுத்து விட்டு விதவைகளாக வாழ்கின்ற பெண்களின் எண்ணிக்கை மூன்று. தகப்பன்மாரை இழந்து விட்ட குழந்தைகளின் எண்ணிக்கை மிக மிக அதிகம். இந்த இழப்புக்கள் தாங்கி கொள்ளக்கூடியவை அல்ல.

அர்த்தமில்லாத மரணங்கள்.வெறி பிடித்த மானிடத்தின் குருதி வெறிக்கு ஆயிரமாயிரம் அப்பாவி உயிர்கள் நித்தம் பலியாகி வருகின்றன. குருதியால் குளிப்பாட்டப்படும் மண்ணின் தூய்மை நித்தம் அழிந்து வருகின்றது. மனிதனுள் இருக்கின்ற மிருக வெறி எல்லா நற்குணங்களையும் மீறிக் கிளம்பிவிட்டதாக எனக்குப்பட்டது.

அடங்கிக் கிடந்த பிசாசுகளின் கட்டுக்கள் அறுக்கப்பட்டுவிட்டதால் அவை ஊரெல்லாம் இரத்தப் பலி கேட்டுப் புறப்பட்டுவிட்டன. பிசாசுகளின் வெறிக்கு அரசியல் அயோக்கியர்கள் தூபம் போடுகின்றார்கள்.

"என்ன அப்பு, கடும் [illegible] பசிக்குது. சாப்பிடுவம்..."என்றாள் சரசு.

"சாப்பிடுவம்..."

ராகுலனைச் சந்தித்த செய்தியைச் சொல்லிவிடுவம்.

"ராகுலனைக் கண்டன், யோகம்.."

அவளிடத்தில் அளவிலா வியப்பும் கவலையும் நிறைந்தது.

"எங்கை...? எப்ப.?" யோகம் துடித்துப் பதைத்துக் கேட்டாள்.

நான் மகளை நிமிர்ந்து பார்க்கிறேன். தாயின் பரிதவிப்பு, பாசம், ஆதங்கம் எல்லாம் அவளில் தெரிகிறது. அவள் முகத்தில் மகிழ்ச்சியும் துயரமும் உணர்ச்சிக் கலவை.

"எங்கை கண்டியள்?" எனத் தையல்முக்து பரபரத்தாள்.

"இப்ப வரேக்கதான். ஆரோடயோ மோட்டார் சைக்கிளில் வந்தான். என்னைக் கண்டிட்டு நிண்டான். நல்லா வளந்திட்டான். பிறகுவாறன் எண்டான்."

"என்னை விசாரிக்கவில்லையா, ஐயா?"

"விசாரித்தான்"

"என்னைக் கேக்கவில்லையா?" தையல்முத்தாச்சியின் கவலை.

"எல்லோரையும் கேட்டவன்....."

"இவ்வளவு தூரம் வந்தவன் ஒருக்கா வந்திட்டுப் போயிருக்கலாம்."

மகளைக் கவலையுடன் ஏறிட்டேன். மீண்டும் குண்டுகள் வெடிக்கும் சத்தம் காதில் வருகின்றது. முகத்தில் கவலை அப்பிக் கொண்டது. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இந்த மண்ணில் சிறிதும் அமைதி இல்லாமல் போய்விட்டது. எல்லைகளை வகுத்துக் கொண்டால் தான் பக்கத்து வீட்டுக்காரனுடன் ஒற்றுமையாக வாழலாமென்ற நிலை உருவாகிவிட்டது. குந்திருயிக்க சொந்தமாக ஒரு நிலம் வேண்டும்.

தூரத்தில் விமானத்தின் இரைச்சல் [illegible] தொரு பெருமூச்சுடன் எழுந்திருக்கின்றேன்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூகோ.படை வாபஸுக்கு மத்தியில் தொடரும் நேட்டோ தாக்குதல்கள்!

பெல்கிரேட்டில் உள்ள சீனத் தூதரகம் மீது நேட்டோ விமானங்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதல் –

கொசோவோவில் உள்ள தனது படைகளில் ஒரு பகுதியை யூகோஸ்லாவியா வாபஸ்பெற ஆரம்பித்தது– ஆகியவை கொசோவோ நெருக்கடியில் ஒரு வார காலத்தில் இடம் பெற்ற முக்கிய திருப்பங்கள் எனலாம்.

யூகோஸ்லாவியா தனது படைகளை வாபஸ் பெற ஆரம்பித்திருப்பதை ஒரு நல்ல அறிகுறியாக அவதானிகள் கருதுகின்றனர்.

இந்தப் படை வாபஸுக்கு ரஷ்யா பெரும் முக்கியத்தவம் கொடுத்துள்ளது. எனினும் படை வாபஸ் மத்தியில் நேட்டோவின் தாக்குதல் தொடரும் அறிகுறிகள் தென்படுகின்றன. கொசோவோப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நேட்டோவினால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை ஜனாதிபதி மிலோசேவிக் ஏற்கும் வரை யூகோஸ்லாவியா மீதான தாக்குதலை நிறுத்தப் போவதில்லை என்று கிளின்ரன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

'ஜி - 8' எனப்படும் எட்டுக் கைத்தொழில் நாடுகளினால் தெரிவிக்கப்பட்ட, சமரச யோசனை ஒன்றை யூகோஸ்லாவியா பெரும்பாலும் ஏற்றுக் கொண்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பால்கன் நாடுகளுக்கான ரஷ்யாவின் சிறப்புத் தூதுவர் விக்ரர் செர்னோமைடின் இதன் பின்னணியில் பெரும் பங்காற்றியிருந்தார்.

* யூகோஸ்லாவியப் படைகள் கொசோவோவில் இருந்து வெளியேற வேண்டும்.

* சர்வதேச நாடுகளின் படை ஒன்று கொசோவோவுக்கு அனுப்பப்பட வேண்டும்.

* கொசோவோ மக்கள் தமது இடங்களுக்கு மீண்டும் திரும்ப வேண்டும்.

* தற்காலிக அரசு ஒன்று கொசோவோவில் உருவாக்கப்படவேண்டும்.

இதுவே ரஷ்யாவும் ஓர் அங்கத்துவ நாடாக உள்ள'ஜி-8' இன் தீர்வுத் திட்டம்.

யூகோஸ்லாவியாவின் மிகநெருங்



பெல்கிரேட்டில் நேட்டோ விமானங்களின் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளான சீனத் தூதரகம்.

கிய நட்பு நாடு ரஷ்யா. யூகோஸ்லாவியா மீதான நேட்டோ நாடுகளின் தாக்குதல்களை ரஷ்யாவும் சீனாவும் வன்மையாகக் கண்டித்து வருகின்றன. ஐ.நா.பாதுகாப்புச்சபையில் 'வீட்டோ' அதிகாரம் உள்ள நிரந்தர நாடுகளான இந்த இரு நாடுகளும் கொசோவோப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் ஒரு சமரசத் தீர்வை ஏற்படுத்துவதற்கு ஆரம்பத்தில் இருந்தே வற்புறுத்தி வந்தன. கொசோவோப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஐ.நா.வின் முயற்சியால் உருவாக்கப்பட்ட 6 நாடுகள் கூட்டமைப்பில் ரஷ்யாவும் இடம் பெற்றிருப்பதால் இந்தப் பிரச்சினையில் நிதானமான போக்கை கடைப்பிடிக்க வேண்டிய கடப்பாடு ரஷ்யாவுக்கு இருந்து வருகிறது.

## பிரெஞ்சு மாநாட்டில் சர்வதேசத் தீர்வுத் திட்டம்

இந்த 6 நாடுகள் கூட்டமைப்பினால் உருவாக்கப்பட்ட தீர்வுத் திட்டமே பெப்ரவரி 6 ஆம் திகதி பிரான்ஸில் ஆரம்பமான கொசோவோ சமாதானப் பேச்சுக்களின் போது முன்



கொசோவோவில் இருந்து வெளியேறி மெசேடோனியா வந்துள்ள அகதிகளில் சிலர்.

வைக்கப்பட்டது.

* 3வருட காலத்திற்கு கொசோவோ மக்களுக்கு சுயாட்சி வழங்குவது.

* அந்த காலத்தில் நேட்டோ படைகளை கொசோவோவில் நிறுத்துவது.

* கே.எல்.ஏ. எனப்படும் கொசோவோ விடுதலை இராணுவத்தின் ஆயுதங்களைக் களைவதுடன் யூகோஸ்லாவிய ஆயுதப் படைகளையும் கண்காணிப்பது.

* 3 வருடத்தின் பின் கொசோவோவில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி கொசோவோ மக்கள் தனி நாட்டுக்கு ஆதரவாக வாக்களித்தால் அவர்களுக்கு தனிநாடு வழங்குவது.

இந்த சமாதானப் பேச்சுக்களில் யூகோஸ்லாவியா சார்பாகக் கலந்து கொண்ட சேர்பிய ஜனாதிபதி மிலான் மிலுதினோவிக் இந்தத் தீர்வுத்திட்டத்தில் இரு விடயங்களைக் கடுமையாக எதிர்த்தார். ஒன்று நேட்டோ படைகளை கொசோவோவில் நிறுத்துவது. மற்றது சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது.

யூகோஸ்லாவியாவின் ஒரு பிரிக்க முடியாத பகுதி கொசோவோ. ஆகையால் நேட்டோ படைகளை அங்கு அனுமதிக்க முடியாது என்று யூகோஸ்லாவியா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கொசோவோவில் 90 சத வீதமானோர் அல்பேனிய இனத்தவர்களாக இருப்பதால் சர்வஜன வாக்கெடுப்புத் திட்டத்தை ஏற்கவும் யூகோஸ்லாவியா மறுத்தது.

எனினும் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு மார்ச் 15ஆம் திகதி வரை ஆறு நாடுகள் கூட்டமைப்பினால் காலக்கெடு விதிக்கப்பட்டது.

மார்ச் 15 இல் பிரான்ஸில் மீண்டும் மாநாடு ஆரம்பமானபோது ஒப்பந்தத்தில் கைச்சாத்திட யூகோஸ்லாவியா அடியோடு மறுத்து விட்டது. கொசோவோ விடுதலை இராணுவத்தின் ஆயுதங்களைக் களையும் திட்டத்தைப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட கொசோவோ விடுதலை இராணுவத்தின் பிரதிநிதிகள் எதிர்த்தபோதிலும் இறுதியில் ஒப்பந்தத்தில கைச்சாத்திட்டனர். கொசோவோ சம்பந்தமான சர்வதேச தீர்வுத்திட்டத்தை ஏற்காவிட்டால் யூகோஸ்லாவியா மீது தாக்குதல் நடத்தப்படும் என்று கிளின்ரன் நிர்வாகம் ஏற்கனவே யூகோஸ்லாவியாவை எச்சரித்திருந்தது. இதற்கு அமையவே நேட்டோ தனது தாக்குதலை மார்ச் 24ஆம் திகதி ஆரம்பித்தது. நேட்டோவின் அச்சுறுத்தலுக்குப் பயந்து யூகோஸ்லாவியா சமாதான ஒப்பந்தத்தை எப்படியும் ஏற்றுக் கொண்டு விடும் என்றே அமெரிக்கா முதலில் கருதியது. ஆனால் யூகோஸ்லாவிய ஜனாதிபதி மிலோசேவிக்கின் கடும் போக்கு அமெரிக்காவுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. மிலோசேவிக்கின் பிடிவாதம் சர்வதேச நெருக்கடி ஒன்றுக்குள் அமெரிக்காவை சிக்க வைத்துள்ளது.

## நெருக்கடி தளரும் அறிகுறி

நேட்டோ நாடுகளின் தாக்குதல் ஆரம்பமாகி 50 நாள்கள் கடந்த நிலையிலேயே தற்பொழுது நெருக்கடி தளர்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

ஒரு தொகுதி படைகளை வாபஸ் பெற்று யூகோஸ்லாவிய அதிபர் மிலோசேவிக் காட்டும் நல்லெண்ண சமிக்ஞையை ஏற்று நேட்டோ தனது தாக்குதல்களை இடைநிறுத்தினால் மட்டுமே சுமூகமான தீர்வு ஒன்றுக்கு வழி ஏற்படும்.

## நேட்டோவின் தாக்குதல்கள்

யூகோஸ்லாவிய தலைநகர் பெல்கிரேட்டில் இருந்து கொசோவோவின் தலைநகர் பிரிஸ்ரினா வரை நேட்டோவின் தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றன.

இராணுவ இலக்குகள், மின்சார நிலையங்கள், எரிபொருள் சுத்திகரிப்பு நிலையங்கள், நிலத்துக்கு அடியில் உள்ள களஞ்சியங்கள் ஆகியவையே நேட்டோ விமானங்களின் முக்கிய தாக்குதல் இலக்காக இருந்து வருகின்றன.

ராடர் திரைக்கு உச்சக்கூடிய பி-52 ரக அமெரிக்க விமானங்களே பெரும் அளவில் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 5ஆயிரம் தடவைகளுக்குமேல் இந்த விமானங்கள் தாக்குதல்களை நடத்தி உள்ளன. நேட்டோ விமானங்களின் தாக்குதல்கள் குடிமக்கள் வாழும் பகுதிகளிலும் இடம் பெறுவதாக யூகோஸ்லாவியா கடந்த காலங்களில் குற்றஞ்சாட்டி வந்தது, பெல்கிரேட்டில் உள்ள சீனத் தூதரகம் தாக்கப்பட்டமை தனது குற்றச்சாட்டை நிருபிக்க யூகோஸ்லாவியாவுக்கு வாய்ப்பாகி விட்டது. எது நடக்கக்கூடாது என்று அமெரிக்கா நினைத்ததோ அது நடந்து விட்டது. சீனத் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சர்வதேச அரங்கில் பெரும் நெருக்கடியை உருவாக்கிவிட்டுள்ளது. யூகோஸ்லாவியா மீது தாக்குதல் நடத்தும் நேட்டோ விமானங்கள் இலக்குத் தவறாதவை என்றும் இலக்குத் தவறினாலும் 10 அடிக்குள்ளேயே அது இடம்பெறும் என்றும் கூறப்பட்டது. ஆனால் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்த இராணுவ இலக்கு ஒன்றுக்கு வைக்கப்பட்ட குறியே தவறுதலாக சீனத் தூதரகத்தைத் தாக்கியது என்று சொல்லப்படுகிறது. இதனால்தான் சீனா இதனை ஒரு திட்டமிட்ட தாக்குதல் என்று குற்றஞ்சாட்டி வருகிறது. கொசோவோப் பிரச்சினைக்கு ராஜிய ரீதியில் தீர்வு காணும் முயற்சிக்கு சீனத் தூதரகம் மீதான தாக்குதல் பெரும் பின்னடைவு ஆகும். ராஜதந்திரிகள் தொடர்பான வியன்னா மாநாட்டுப் பிரகடனத்தையும் இது மீறுகிறது.

இந்த தாக்குதலின் போது ஒரு பெண் பத்திரிகையாளர் உட்பட நால்வர் கொல்லப்பட்டனர். 20க்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர். சீனத் தூதரகத்துக்கு பெரும் சேதம் ஏற்பட்டது. மூன்று திசைகளில் இருந்தும் ஒரே சமயத்தில் ஏவுகணைகள் வீசப்பட்டதால் இது திட்டமிட்ட தாக்குதல் என்று சீனா அடித்துக் கூறுகிறது. இந்தத் தாக்குதல் குறித்து ஐ.நா. விசாரணை நடத்த வேண்டும் என்றும் சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

சீனத்தூதரகம் மீதான தாக்குதலை ஐ.நா. பாதுகாப்புச் சபை கண்டித்த போதிலும் விசாரணை நடத்துவதற்கு மறுத்து விட்டது.

தூதரகத் தாக்குதலைக் கண்டித்து சீனத்தலைநகரங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திவருகின்றனர். அமெரிக்காவுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக அமெரிக்காவுடனான இராணுவ ஒத்துழைப்பு நடவடிக்கைகளை சீனா இடைநிறுத்தி உள்ளது. அமெரிக்காவுடனான ஆயுதக் கட்டுப்பாடு, மனித உரிமைகள் தொடர்பான பேச்சுவார்த்தை ஆகியவற்றை சீனா பின் தள்ளிவைத்துள்ளது. ஆயுதப் பரவல் தடுப்பு, ஆயுதக்கட்டுப்பாடு, சர்வதேசப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளை சீனா ஒத்திவைத்துள்ளது. சீனாவில் நடைபெறும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு சீன அரசு ஆதரவு தெரிவித்து வருகிறது. சீனத் தூதரகம் மீதான தாக்குதல் அமெரிக்கா - சீன உறவில் பெரிய ஒரு வடுவை ஏற்படுத்தி விட்டது. 1972 இல் நிக்ஸனின் சீன விஜயம், முதல் தடவையாக அமெரிக்காவுக்கும சீனாவுக்கும் இடையிலான மூங்கில் திரையை அகற்றி இருந்தது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யத்தூதுவர் முயற்சி

நேட்டோ படைகளின் தாக்குதல் ஆரம்பமான பின்னர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் பலகோணங்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஆனால் பால்கன் பிராந்தியத்துக்

# ரஷ்யாவின் சமாதான முயற்சி வெற்றிபெறுமா?

கான ரஷ்யாவின் சிறப்புத் தூதுவர் விக்ரர் செர்னோமைடின் மேற்கொண்ட முயற்சிகளே யூகோஸ்லாவியா தனது படைகளில் ஒரு பகுதியை வாபஸ் பெறும் அளவுக்கு ஓரளவு வெற்றி அளித்தது. வான் தாக்குதல்கள் குறிப்பிடத்தக்க பலனை அளிக்கத் தவறியதால் நேட்டோப் படைகள் தரை வழியாக கொசோவோவுக்குள் செல்ல திட்டமிடப்பட்ட சமயம் செர்னோமைடின் சமரச முயற்சியில் இறங்கி மேற்கு நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் விஜயம் செய்தார்.

நேட்டோவின் தரைப்படைகள் கொசோவோவுக்குள் சென்றிருந்தால் கொசோவோ மற்றொரு வியட்நாமாக மாறி இருக்கும். கொசோவோவில் உள்ள யூகோஸ்லாவியப் படைகள் கொசோவோவில் எஞ்சியுள்ள அல்பேனிய இனத்தவர்களை பழிவாங்கி இருக்கலாம்.

யூகோஸ்லாவியத் துருப்புக்கள் கொசோவோவில் நடத்திய தாக்குதல்களில் கொசோவோவின் பெரும்



யூகோ. ஜனாதிபதி மிலோசேவிக்

பகுதி அழிக்கப்பட்டு சுடுகாடாகி விட்டது. யூகோஸ்லாவியாவின் முன்னாள் குடியரசான மெசடோனியாவுக்கு 2 லட்சம் பேர் சென்றுள்ளனர். அல்பேனியாவுக்குள் லட்சக்கணக்கானோர் தஞ்சமடைந்துள்ளனர்.

அகதிகளின் வருகை அதிகரித்ததை அடுத்து மெசடோனியா தற்போது கொசோவோவுடனான தனது எல்லையை மூடிவிட்டது. ஏற்கனவே மெசடோனியாவில் அல்பேனிய இனத்தவர்கள் கணிசமான அளவு வாழ்கின்றனர். கொசோவோவில் இருந்து வருவோரும் நிரந்தரமாகத் தங்க நேரிட்டால் மெசடோனியாவில் இன விகிதாசாரம் பாதிக்கப்பட்டுவிடும் என்று மெசடோனிய அரசு கருதுகிறது. இதனால்தான் கொசோவோ அகதிகளுக்கு மெசடோனியா கதவடைப்பு செய்தது.

கொசோவா அகதிகளில் 20 ஆயிரம் பேரை அமெரிக்காவும் 4 ஆயிரம் பேரை ஆஸ்திரேலியாவும் ஒரு தொகையினரை கனடாவும் ஏற்க சம்மதம் தெரிவித்துள்ளன.

அகதிகளால் ஏற்பட்டுள்ள நிதிப் பளுவை சமாளிக்க பாரிஸில் கூடிய உதவி வழங்கும் நாடுகள் மெசடோனியாவுக்கு 25கோடி டொலரை உடனடியாக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. இதைவிட 40 கோடி டொலரை வழங்க 46 நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

**உலக் உலா**
**என்.பி.சீலன்**

நேட்டோவின் தாக்குதல்கள் சில நாள்களில் முடிவடைந்து விடும் என்றே யூகோஸ்லாவியா முதலில் நம்பியது. எனினும் நினைத்த காரியம் நடக்கவில்லை. கொசோவோ-மெசடோனியா எல்லையில் தனது படைகளினால் சிறைப்பிடிக்கப்பட்ட மூன்று அமெரிக்க படையினரை விடுதலை செய்து தனது நல்லெண்ணத்தை வெளிக்காட்ட யூகோஸ்லாவியா முயன்றது. ஆனால் அமெரிக்க அதிபர் கிளின்ரன் யூகோஸ்லாவிய ஜனாதிபதிக்கு தொலைபேசி மூலம் நன்றி தெரிவிப்பதற்குக் கூட மறுத்துவிட்டார்.

அமெரிக்க மனித உரிமைகள் இயக்கத் தலைவர் ஜேஸி ஜாக்சன் என்பவரே 3 அமெரிக்க வீரர்களின் விடுதலைக்காக முன்னின்று உழைத்தவர்.

இந்தச் சந்திப்பின்போது நேட்டோ படைக்குப் பதிலாக சர்வதேசப் படை ஒன்றை கொசோவோவில் நிறுத்த மிலோசேவிக் விருப்பம் தெரிவித்திருந்தார்.

தற்பொழுது "ஜி-8" நாடுகளும் சர்வதேச படைகளை கொசோவோவுக்கு அனுப்ப ஆதரவு தெரிவித்திருப்பதால் கொசோவோ பிரச்சினையில் ஒரு தற்காலிக தீர்வாவது ஏற்படும் சாத்தியம் உருவாகி வருகிறது.

அடுத்துவரும் நாள்களில் அல்லது வாரங்களில் தீர்க்கமான முடிவு ஏதும் எட்டப்படக்கூடும். *

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org